





## கிழக்கில் மாவட்ட நிருவாக உரிமையேனும் கிடைக்காதா?

புறக்கணிக்கப்படும் இரு பெரும்பான்மை முஸ்லிம் மாவட்டங்கள்




## RTI: குரங்கின் கை பூமாலையாகிவிடுமா?


# மீள்பார்வை

மීල්පාර්වෙ

Meelparvai Fortnightly
www.meelparvai.net

සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

Registered as a newspaper in Sri Lanka
GPO-QD/75/NEWS/2017 - ISSN 2012-5038

இதழ் - 363 • 24 பெப்ரவரி 2017 வெள்ளிக்கிழமை • ஜமாதுல் அவ்வல் 1438 • விலை 40.00



RI MOBILE
Wholesale Dealers in Mobile Phone Accessories
077-3050949
077-4843323
Tel: 011-2439470
151/11, Mumbai Plaza, 2nd Cross Street, Colombo - 11
Branch: 159/21, Green Arcade, Main Street, Colombo - 11
தேவையான பொருட்களை இருக்குமிடத்தில் இருந்தே மொத்தமாகவும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் 0777 777 761
0777 674 941


## தம்புள்ள பள்ளிவாசல் காணி விவகாரம்:

# உரிமைகளில் விட்டுக் கொடுப்புக்கு இடமில்லை



இனவாதிகளின் தாக்குதலுக்கு உள்ளாகி பின்னர் அகற்றப்பட வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டு வருகின்ற தம்புள்ள பள்ளிவாசல் விடயத்தில் எந்தவித விட்டுக் கொடுப்புக்களுக்கும் தாம் தயாரில்லை என தம்புள்ள பள்ளிவாசல் நிர்வாக சபை உறுப்பினர் எஸ்.வை.எம்.ஸலீம்தீன் தெரிவித்தார்.

சிறு கொட்டிலில் தம்புள்ள நகருக்கு அருகாமையில் இயங்கி வருகின்ற இந்த ஜும்ஆப் பள்ளிவாசல், புனித பூமிக்குள் அமைந்துள்ளதாகக் கூறி அதனை அகற்றிக் கொள்ளுமாறு பௌத்த கடும்போக்குவாதிகளினால் கோரிக்கை விடுக்கப்பட்டது. பின்னர் பாதை விஸ்தரிப்பதற்கு தடையாக இருப்பதாகக் கூறி அரச மட்டத்தில் இருந்து கோரிக்கைகள் விடுக்கப்பட்டன.

இத்தனை சவால்களுக்கும் மத்தியில் ஓரிரு அரசியல்வாதிகளே எமக்குத் துணையாக வந்தனர். ஆபத்தின் போது உதவாத எந்த முஸ்லிம் அரசியல் தலைமைகளின் வேண்டுகோளுக்கும் நாங்கள் இணங்கப் போவதில்லை. பள்ளிவாசலுக்கு உரிய காணியைப் பெற்றெடுப்பதில் நாங்கள் எந்த விட்டுக் கொடுப்புக்கும் தயாராக இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

தம்புள்ள பள்ளிவாசலுக்குச் சொந்தமான 41.49 பேர்ச்சஸ் நகர்ப்புற நிலத்தில் தம்புள்ள பள்ளிவாசல் அமைந்துள்ளது. இந்தப் பள்ளிவாசலை வேறு இடத்துக்கு மாற்றுவதற்கு முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு பள்ளிவாசல் நிர்வாகம் இணங்கிய போதும், (பக்.14)

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity

## ஜனாதிபதி, பிரதமரின் சொத்து விபரங்களைக் கோரி RTI மனு

இவ்வாண்டு சுதந்திர தினத்துடன் நடைமுறைக்கு வந்த தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதியினதும் பிரதமரினதும் சொத்து விபரங்களைப் பெற்று வெளியிடப் போவதாக ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் நிறுவனத்தின் இலங்கை முகாமையாளர் சங்கீதா குணரத்ன தெரிவித்தார்.

தகவலறியும் உரிமை தொடர்பான சட்டத்தின் கீழ், பாராளுமன்ற உறுப்பினர்களின் சொத்து விபரங்களைப் பெற்று, அதனை வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கத் தயாராகியுள்ளதாகவும், இதன் முதற்கட்டமாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோரின் சொத்து - வருமான விவரங்களைக் கோரியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

''சொத்து, வருமானச் சட்டத்தின் கீழ், பாராளுமன்ற உறுப்பினர்களின் 50 சதவீதத்துக்கும் அதிகமானவர்களின் சொத்து - வருமான விபரங்களை சேகரித்துள்ளோம். ஆனாலும் குறித்த சட்டத்தின் படி அந்தத் தகவல்களை வெளியிட முடியாது. தகவல் அறியும் உரிமை சட்டத்தில் அவ்வாறான பிரச்சினைகள் இல்லை. அதனால் ஜனாதிபதி, பிரதமருடைய சொத்து விபரங்களை வெளியிட்டதன் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர்களது சொத்து வருமான விபரங்களையும் பெற்று வெளிப்படுத்த முடிவு செய்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# வடக்கு கிழக்கு இணைப்புக் கோரிக்கை காலாவதியானது

தமிழர்களின் வடக்கு கிழக்கு இணைப்புக் கோரிக்கை காலாவதியான ஒரு விடயம் எனவும், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின்படி, இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்களை இணைக்க இந்திய அரசு அழுத்தங்களைப் பிரயோகிக்காது எனவும் இந்திய வெளியுறவுத்துறைச் செயலாளர் ஜெய்சங்கர் தெரிவித்திருப்பது, தமிழ் தேசியக் கூட்டமைப்பினரிடம் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.



தமிழர்களின் பிரச்சினைக்கு இணைந்த வடக்கு கிழக்கில் சமஷ்டி ஆட்சி ஒன்றே தீர்வு என தமிழ்த் தலைவர்கள் பலரும் குரல் கொடுத்து வரும் நிலையில் பங்காளி அரசாங்கத்தில் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வடக்கு கிழக்கு இணைப்பு சாத்தியமில்லை என்று அண்மையில் தெரிவித்திருந்தது. தமிழருக்குக் கிடைக்கப் போகும் வடக்கு கிழக்கு இணைப்புத் தீர்வில் முஸ்லிம்களும் ஒத்துழைக்க வேண்டும் என தமிழ்த் தரப்பினால் (பக்.14)


பெற்றோரை மதிப்போம்
பேணிக் காப்போம்



ஸலாமா தினம்
பெப்ரவரி 2017


## அரசியலமைப்பு சீர்திருத்தம்: இழக்கப்படும் சாத்தியப்பாடுகள்

1978 ஆம் ஆண்டின் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்புக்குப் பதிலாக புதிய அரசியலமைப்பொன்றைத் தயாரிக்கப் போவதாக பிரதமர் சொல்லிக் கொணடிருக்கும் நிலையில், யாப்பில் சீர்திருத்தம் செய்வது கூட சாத்தியமில்லாத நிலைமை உருவாகி வருகிறது. நாட்டின் ஒருமைப்பாட்டுக்கும் இறைமைக்கும் பாதிப்பேற்படுத்துகின்ற எந்த அரசியல் திருத்தத்துக்கும் சிறி லங்கா சுதந்திரக் கட்சி ஆதரவளிக்கப் போவதில்லை என அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.



புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்கி அது தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்துவதாக இருந்த திட்டம் தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர், சர்வஜன வாக்கெடுப் பொன்றை வேண்டி நிற்கின்ற எந்த அரசியல் திருத்தத்துக்கும் ஜனாதிபதியோ சுதந்திரக் கட்சியோ ஆதரவளிக்காமல் இருப்பதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பிரதமருக்கு அதிகாரத்தை வழங்கும் அரசியல் சீர்திருத்தத்துக்கு தாம் ஆதரவளிக்கப் போவதில்லை என இடதுசாரி ஜனநாயகக் கட்சியின் தலைவர் வாசுதேவ நாணயக்காரவும் தெரிவித்துள்ளார்.

## ஜெனீவாவில் இலங்கைக்கு 03 நாட்கள்

எதிர்வரும் 27ம் திகதி ஜெனீவாவில் ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் அமர்வுகளின் போது இலங்கைக்காக மூன்று நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

மார்ச் மாதம் 2, 15, மற்றும் 22ம் திகதிகளில் இலங்கை குறித்து பேரவையில் பேசப்படவுள்ளதாக தெரியவருகிறது. மார்ச் மாதம் 2ம் திகதி பேசப்படவுள்ள நபர்கள் மீதான தாக்குதல்கள் விவகாரம் குறித்து ஆராய்வதற்காக அண்மையில் ஐக்கிய நாடுகள் (பக்.14)


Rusan Trade Centre
211-213 Second Cross Street, Colombo - 11.
Tel : +94 11 2389399 Fax : +94 11 2438596
E-mail : ilhamrtc@gmail.com

NCH New City Hardware
உங்களுக்குத் தேவையான தரமான உபகரணங்களுக்கு நாடுங்கள்
58, Messeger Street, Colombo - 12
Tel: 011-43777931, 011-5830188, 011-4377934
Fax: 011-2334671 Email: newcity@hotmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GOOD டச் BAD டச்...!?

சொர்க்கத்துப் பூக்களாம் சின்னஞ் சிறு குழந்தைகளை - ஆறு வயது, ஏழு வயது குழந்தைகளையும் பாலியல் வன்புணர்வுக்கு ஆளாக்கும் மிருகங்களைப் பிடித்துத் தூக்கில் ஏற்றுவதற்குப் பதிலாக,

குழந்தைகளுக்கு குட் டச், பேட் டச் (நல்ல தொடுதல், தீய தொடுதல்) ஆகியவற்றைச் சொல்லிக் கொடுங்கள் என்று பெற்றோருக்கு அறிவுறுத்துகிறார்கள்.

பெரியவர்களுக்கே இன்னும் அடிப்படை பாலியல் அறிவு இல்லை, அடிப்படைத் தூய்மை, திருமண ஒழுக்கங்கள் பற்றித் தெரிவதில்லை.

நம் குடும்பங்களில் இவற்றை எல்லாம் யாரும் வெளிப்படையாகப் பேசுவதே இல்லை.

குளிப்பு எப்போது கடமையாகும் என்பது கூட தெரியாமல் இளைஞர்கள் இருபது இருபத்தைந்து வயது வரை வளர்ந்து விடுகிறார்கள்.

இந்தச் சூழலில் ஆறு வயது குழந்தையைப் பக்கத்தில் உட்கார வைத்து குட் டச், பேட் டச் என்பதை எல்லாம் யார், எப்படிச் சொல்லிக் கொடுக்க முடியும்? சொன்னால்தான் குழந்தைகளுக்குப் புரியுமா?

வெறியர்கள், எப்படியெல்லாம் குழந்தைகளை ஏமாற்றுவார்கள் என்பது பெற்றோர்களுக்கு எப்படித் தெரியும்?

குட் டச், பேட் டச் என்றெல்லாம் சொல்லிக் கொடுத்து குழந்தைகளின் கள்ளங்கபடமற்ற மனங்களைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்குவதை விட, பொதுவாகவே ஆண்களிடம் அதிகம் அணுகவிடாமல், பெற்றோர் சற்று கவனமாக இருந்தாலே போதும்.

சிறுவயது முதலே அந்நிய ஆண்களைத் தவிர்க்கின்ற முறையைக் கடைப்பிடித்தால் இந்தக் கொடுமையை கணிசமாகக் குறைத்துவிடலாம்.

-சிராஜுல் ஹஸன்

# முகநூல் சுவரும் ஒரு அமானிதமே!




நமக்கு வழங்கப்பட்டிருக்கும் முகநூல் சுவரும் ஒரு அமானிதமே!

அதை வீண்விரயம் செய்ததற்காகவும், அதில் வீம்புகள் பேசியதற்காகவும் மறுமையில் இறைவனால் விசாரிக்கப்படுவோம்.

**ஒவ்வொரு அசைவிற்கும் விசாரணை உண்டல்லவா?**

இங்கே சிலர் பிறரது மானத்தை கீறிக்கிழிப்பதையும், அடுத்தவரின் பாவங்களை தோண்டித்துருவி ஆராய்ந்து ஏதோ தங்களது வெற்றுக்கண்களால் அவற்றைக்கண்டது போல் எழுதுவதையும் அவதானிக்கலாம்.

இஸ்லாத்தில் சக மனிதனின் மானம் புனித கஃபாவோடு ஒப்பிட்டு பேசப்பட்டிருக்கிறது.

இஸ்லாத்தில் குற்றமும் அதற்கான தண்டனைகளும் மிகவும் பக்குவமாக கையாளப்பட்டிருக்கின்றன. விபச்சாரம் செய்துவிட்டதாக தாமே வந்து ஒப்புதல் வாக்கு மூலம் அளித்த மாயிஸ் (றழி) அவர்களை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முதல் தட வை விரட்டிவிட்டார்கள்.

**சமூக வலைத்தளங்களில்**
தொகுப்பு:
அனஸ் அப்பாஸ்

இரண்டாவது முறையும் வந்து சொல்லி தனக்கான தண்டனையினை கேட்டார்!

அவர் பைத்தியத்தில் உளருகிறாரா என்று ஸஹாபாக்களை பரிசோதிக்க சொன்னார்கள்.

மூன்றாவது முறை அவர் வந்தபோது குடித்து விட்டு பேசுகிறாரா என்று பார்க்கச்சொன்னார்கள்.

நான்காவது முறைதான் அவருக்கான தண்டனை நிறைவேறியது.

அப்போது ஒரு ஸஹாபி வந்து சொன்னார் 'அந்த விபச்சாரி மாயிஸ் நாங்கள் கல்லால் எறியும் போது ஓடினார், ஆனாலும் நாங்கள் விடவில்லை. துரத்திப் பிடித்து வந்து மீண்டும் எறிந்து கொன்றோம்' என்றார்!

றசூலுல்லாஹ் மிகவும் கவலையோடு சொன்னார்கள்...

''நீங்கள் அவரை தப்பித்து போக விட்டிருக்கலாமே''

அத்தோடு மாயிஸ் (றழி) அவர்களை விபச்சாரி என்று அழைத்ததை கண்டித்த நபி அவர்கள் அவரது பாவங்கள் மன்னிக்கப்பட்டு சொர்க்கத்திற்கு பயணமாகிறார் என்றும் நன்மாராயனம் சொன்ன வரலாறு நம் முன்னே இருக்கிறது!

மனிதனது நன்மைகளும் தீமைகளும் மலக்குகளால் எழுதப்படுகின்றன.

பாவமன்னிப்பு எனும் அருட்கொடையால் இறைவன் பலபாவங்களை மன்னித்தும் விடுகிறான்!

நாளை மறுமையில் சிலரை இறைவன் தனிமையில் அழைத்து விசாரிப்பானாம்.

அதில் உலகில் உனது பாவங்களை மறைத்தது போல இன்றும் இந்த மக்கள் மன்றத்தில் அவற்றை மறைத்து விட்டேன் என்று கூறி றப்புல் ஆலமீன் தனது நிகரற்ற கருணையால் மன்னிப்பும் வழங்குவானாம்!

பாவங்களை கையாளுகிற முறையில் இறை வழியே இப்படி இருக்கிற போது.....

இன்று பொது வெளியில் பலர் சாக்கடைகளை தோண்டிக் கொண்டிருக்கிறார்கள்!

இதில்அசூசைப்படப்போவது அவர்களது கரங்கள்தான்! பாவங்களில் அரசனின் பாவம் ஆண்டியின் பாவம் என்றெல்லாம் வேறுபாடுகள் கிடையாது.

அது இறைவனது மீஸானுக்கு சொந்தமானது.

அவற்றை நிறுப்பதற்கும்....

றகீப் அதீத்தின் எழுதுகோல்களை பிடுங்கி எழுதுவதற்கும் நமக்கு எந்த அதிகாரமும் கிடையாது !

பிறரின் பிணம் தின்னுகிற, தூர்ந்து போன பாவங்களை முகர்ந்து திரிகிற, சாக்கடைச் சகதிக்குள் இறங்கி அசுத்தங்களை பொது வெளியில் வாரி இறைக்கிற இஸ்லாத்தின் பெயரில் வாழும் அத்தனை பேருக்கும் இந்த எழுத்துக்கள் சமர்ப்பணம்!

இறைவனை அஞ்சிக்கொள்ளுங்கள். இந்த துர்செயல்களை தொடர்ந்தால் உங்களது பாவங்கள் ஒரு நாள் சந்திக்கு வரும்!

- முஜீப் இப்ராஹீம்

## வலைதளங்களில் அவர்களுக்காக நான்?

எனது கண்களால்
அவர்களுக்காக பார்க்கவும்,
எனது சிந்தனைகளை
அவர்களுக்காக ஒதுக்கவும்,
எனது வாயை அவர்களுக்காக
பேசவும், எனது
இலட்சியங்களை அவர்களின்
குறுகிய நலன்களுக்காகவும்
மட்டும் ஏன் நான்
செலவிடுகின்றேன்?

எனது நேரங்களையும்,
ஆர்வங்களையும்
அவர்களுக்காக
தனிப்படுத்தும் பிழையான
சூத்திரத்தை எனக்குக் கற்றுத்
தந்தவர்கள் யார்??

யார் அவர்கள்?

- அனஸ் அப்பாஸ்

## அமெரிக்கா அமெரிக்காதான்..

அப்படி ஒன்றும் ட்ரம்ப்
நிர்வாகமும், ஒபாமா
நிர்வாகமும் வேறு வேறல்ல..
முஸ்லிம்கள் விஷயத்திலுமா?
முஸ்லிம்கள்
விஷயத்திலும்தான்.
1996 லிருந்தே முஸ்லிம்கள்
இலக்கர்க்கப்படுதல்,
பயங்கரவாதத்தின் பெயரால்
வெளியேற்றப்படுதல் எல்லாம்
நடந்துகொண்டிருந்ததுதானே..
இப்போது நடப்பதென்னவோ
இரண்டு மதிப்பீடுகளுக்கு
இடையேயான மோதல் அல்ல.
இரண்டு மேலாண்மைச்
சக்திகளுக்கு இடையே நடக்கும்
மோதல்தான் இது..

- அ. மார்க்ஸ்

## ஜெயலலிதா மறைவுக்குப் பின்

ஜெயலலிதா மறைவுக்குப் பின், தமிழ்நாட்டை காப்பாற்றப் புறப்பட்டிருக்கும் புரட்சியாளர்களின் அலம்பலுக்கு அளவில்லை.

ஓ.பி.எஸ் படம் பத்து நாள் ஓடியது. இப்போது, ஒலக நாயகனும் புரட்சிப் படம் காட்டிக் கொண்டிருக்கிறார்!

Kamal Haasan
@ikamalhaasan

இன்று காண்போம் நரி
பரியாகும் விந்தை. வெல்வது
நல்ல மக்களின் மந்திரமா அந்தச்
சொக்கனின் தந்திரமா
பார்ப்போம்.

- ஆளூர் ஷாநவாஸ்



ஜனநாயகத்தை
கொலை செய்வதில்
உள்ள ருசி அதை
பின்பற்றுவதில்
இல்லை.

முத்து கிருஷ்ணன்






WAMY நிறுவனம் நடாத்தும் மத்ரஸதுன் நத்வா குர்ஆன் பாடசாலையின் 10 ஆண்டு பூர்த்தி விழா மற்றும் பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் கொழும்பு தபால் தலைமையக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் பங்கேற்றிருந்தார்.





கல்வி அமைச்சினால் 2016 ஆம் ஆண்டு அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட இரண்டாம் மொழி போட்டிகளில் வாசிப்புப் பிரிவில் தரம் 7 இல் தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற பாணந்துரை, தொட்டவத்தை அல்-பஹ்ரியா மத்திய கல்லூரி மாணவன் செல்வன் அமீன், அதிபர் ஜனாப். கஸ்ஸாலி மற்றும் பாடசாலை ஆசிரியர்களால் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டார்.









உலக சமூக நீதித் தினத்தை முன்னிட்டு ஸ்ரீ லங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் எம்.எல்.எம்.தௌபீக் அவர்களின் தலைமையில் அண்மையில் கொழும்பு விகாரமகாதேவி திறந்த வெளி அரங்கில் [illegible] இந்நிகழ்வில் பிரதம பேச்சாளராக ராவய பத்திரிகையின் ஆசிரியர் சட்டத்தரணி [illegible] உரையாற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் அரசியலில் ஒரு முழுமையான சுய விமர்சனம் தேவை!



• சிராஜ் மஷ்ஹூர்



முஸ்லிம் அரசியலின் குழப்பமான பக்கங்கள் குறித்த விடயங்களே, நமது அன்றாட உரையாடல்களில் அதிக கவனம் பெற்றுள்ளது. மு.கா. வின் பேராளர் மாநாட்டுக்கு முன்னரும் பின்னரும் நடந்தேறிய மற்றும் நடந்து கொண்டிருக்கும் அரசியல் நிகழ்வுகள், பல்வேறு வகையான எதிர்வினைகளை உண்டாக்கி வரும் இந்த சூழ்நிலையில், மிக முக்கியமான விடயங்கள் குறி த்து எமது கவனத்தைத் திருப்ப வேண்டியுள்ளது.

மு.கா. வெறுமனே ஒரு அரசியல் கட்சி என்ற மனப்பதிவிலிருந்து மட்டும் இதை அணுக முடியாது. அது ஒரு மக்கள் இயக்கமாகவே தன் பணிகளைத் தொடங்கியது. தொடக்க கால மு.கா. வில் அரசியல் கட்சியையும் தாண்டிய கவனத்திற்குரிய பல பண்புகள் காணப்பட்டன. அதிலும் குறிப்பாக, மிகப் பயங்கரமான நாட்களில் மக்களின் குரலாக அது விளங்கியது. ஒரு விடுதலைக் குரலின் பிம்பத்தை அது சுமந்திருந்தது.

நிஜத்தில் அது அப்படித்தான் இருந்ததா என்பது விவாதத்திற்குரிய விடயம். இந்த சிறப்பம்சம் காரணமாக மு.கா. மீது உணர்வு நிலைப்பட்ட ஈடுபாட்டை மக்கள் காட்டினர். ஒரு வகையில் புலிகள் மீது தமிழ் மக்களுக்கிருந்த உணர்ச்சிகரமான ஈடுபாட்டினை ஒத்த ஒரு மன நிலையை, கிழக்கிலும் வடக்கிலும் இருந்த முஸ்லிம் மக்கள் மு.கா. மீது காட்டினர். இந்த உணர்வு நிலை தென்னிலங்கை முஸ்லிம்கள் மத்தியிலும் ஓரளவு பரவியிருந்தது.

ஆனால், நம்ப முடியாத வேகத்தில் இந்தப் பண்பை அக்கட்சி இழக்கத் தொடங்கியது. தனித்துவமான, வித்தியாசமான அரசியல் கட்சி என்ற பார்வையிலிருந்து வெளியேறி, ஒரு மாமூலான அரசியல் கட்சி என்ற நிலைக்கு அது தரம் தாழ்ந்தது. அக்கட்சி பற்றிய பெருங் கனவுகளைச் சுமந்திருந்த முக்கியஸ்தர்கள் எல்லோருமே இந்த வீழ்ச்சிக்கு அறிந்தோ அறியாமலோ பங்களித்துள்ளனர். இன்று இவர்களில் பலருக்கு வெள்ளையடிக்க முயற்சி செய்யப்படுகிறது.

ஆனால், பகிரங்க வெளியில் வராத பல திரைமறைவு 'டீல்கள்' இதற்கு நிலையான சான்றுகளாக உள்ளன. அவை ஒரு காலத்தில் வெளிவரும் என்று நம்பலாம். ஆனால், கசப்பான உண்மைகளை ஏற்றுக்கொள்ள மறுக்கின்ற பல வீனமான மனிதர்களின் மனக்குகைகளில் இதுவும் புதைக்கப்பட்டு விடலாம். அப்படியான ஒரு நிலையில் எதுவும் வெளிவராமலும் போய் விடலாம். யார் கண்டது?

இந்த 'டீல்' கலாச்சாரத்தின் பிதாமகர்கள் வெளி ஆட்கள் அல்ல. அதன் ஸ்தாபக முக்கியஸ்தர்களே இந்த சீரழிவைத் தொடக்கி வைத்தவர்கள். ஆனால், இந்த உண்மைகளை பலர் வெளிப்படையாக ஒத்துக் கொள்வதில்லை; அல்லது ஒத்துக் கொள்ள விரும்புவதில்லை. விமர்சன நியாயங்களை விட, புனிதப்படுத்தலில் ஆர்வம் கொண்டோர் மிகைத்த ஒரு சூழ்நிலையின் விளைவு இது. முதற் கோணல் முற்றிலும் கோணல் என்பதன் சூட்சுமமே இது. 'பிறக்கும்போதே முடம். இனிப் பேய்க்குப் பார்த்து என்ன பலன்?' என்ற ஊர்ப் பழமொழியின் அர்த்தம் விளங்கியவர்கள் இதனை அதிகம் உணர்ந்து கொள்வர்.

முஸ்லிம் அரசியலின் கொள்கை, கோட்பாடுகள், இயங்கு தளம், அது கடந்து வந்த பாதை குறித்து தீர்க்கமான ஒரு மறுபரிசீலனை மிகவும் அவசியம். முழுமையான ஒரு சுய விமர்சனமின்றி இந்த நெருக்கடியும் பின்னடைவும் சூழ்ந்திருக்கும் நாட்களைக் கடக்க முடியாது. ஆனால், உணர்ச்சிக் கொந்தளிப்பில் பார்வையைப் பறிகொடுத்து நிற்போரால் இதனைப் புரிந்து கொள்ள முடியாது. நிதானமும் தெளிவும் தீர்க்க தரிசனமும் ஒருங்கே கைகூடி நிற்கும் ஒரு தரிசனத்தை, பார்வைப் புலத்தை நாம் கண்டடைய வேண்டும். கடந்த காலத்தின் நல்ல அம்சங்கள் குறித்தும் நாம் கவனம் செலுத்தியாக வேண்டும். திரும்பிப் பார்க்கத் தெரியாத, அதற்குத் தயாரில்லாத சமூகம், வரலாற்றில் ஒரு போதும் முன்னோக்கி நகர முடியாது.

முஸ்லிம் அரசியல் மையம் கொண்டிருக்க வேண்டிய அடிப்படை அம்சமே நீதி என்பதாகும். இன மைய சிந்தனையை விட, நீதி குறித்த ஆழ்ந்த சிந்தனைகளே நம்மை வழிநடத்தியிருக்க வேண்டும். குர்ஆன், ஹதீஸ் என்று பேசுவதன் உண்மையான அர்த்தம் இதுவேயாகும். நீதிதான் ஒரு முஸ்லிமை வழிநடத்தும் உன்னதமான அறம் என்று இஸ்லாம் வலியுறுத்துகிறது. அதிலிருந்து நழுவுவது என்பது இஸ்லாத்தையே கொச்சைப்படுத்துவதாக அமையும். இது குறித்து முஸ்லிம் சமூகம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

நீதி பற்றிய இந்தப் பார்வைக் கோளாறு, இனப்பற்று என்ற சிந்தனைக்கும் அப்பால் இன்னொரு படி மேலே சென்று, இனவாதத்தின் பிடிக்குள் பலரையும் மூழ்கடித்து விடும் அபாயத்தைக் கொண்டிருக்கிறது. மேலெழுந்தவாரியான பார்வைக்கு இது மிகவும் எளிமையான விடயம் போலத் தோன்றினாலும், நடைமுறையில் இதன் எதிர் விளைவுகள் மிகவும் சிக்கலானவை; பாரதூரமானவை. முஸ்லிம் அரசியலின் பண்பு மாற்ற வீழ்ச்சி நிலையில் இந்த நோய்க்கூறு மிக முக்கியமாக அடையாளம் காணப்பட வேண்டும்.

இந்த அரசியலை முன்னெடுத்து வந்த 'கீழ் மத்திய தர வர்க்க மனநிலை' குறித்தும் ஆழ்ந்து ஆராய வேண்டியுள்ளது. குறிப்பாக 70 களுக்குப் பின்னர், முன்னாள் கல்வியமைச்சர் பதியுதீன் மஹ்மூத் முக்கிய பங்களித்த 'புதிய படித்த சமூகத் தொகுதியினரின்' உருவாக்கம், அவர்களது மன அமைப்பு குறித்தும் ஆராய வேண்டியுள்ளது. 80 களுக்குப் பின்னர் தோன்றிய திறந்த பொருளாதாரக் கட்டமைப்பின் பின் விளைவுகளும் இதில் நிச்சயமான தாக்கத்தைச் செலுத்தியுள்ளதை அவதானிக்கலாம். நவதாராளவாத பொருளாதார சூழலும், இங்கு உருவாகி வளர்ந்த ஊழல் மலிந்த சந்தர்ப்பவாத அரசியல் கலாச்சாரமும் முஸ்லிம் அரசியலை நச்சூட்டியிருப்பதை மறுப்பதற்கில்லை.

இலங்கைக்கேயுரிய 'தேர்தல் அரசியல் கலாச்சாரத்தின்' ஒட்டைகளை நன்கு கற்றுத் தேர்ந்த இந்த இழிநிலை, முற்றிலும் எதிரிடையான மலினத்துவ அரசியல் பண்புகளை பொதுத் தளத்தில் விதைத்திருப்பது மிகப் பெரும் அவலமே. முஸ்லிம் அரசியல் இலங்கையின் பன்மைத்துவ சமூக இயங்கியலில் வரவேற்கப்படுவதற்குப் பதிலாக, அருவருப்புக்கும் முகச்சுளிப்புக்கும் உரிய ஒன்றாக மாறி விட்டது இதனால் தான்.

இலங்கையின் இரு பிரதான அரசியல் கட்சிகளும் இதே போன்ற 'குப்பை அரசியலையே' இந்த நாட்டுக்கு வழங்கியிருக்கின்றன. அதன் இன்னொரு நீட்சியாகவே இந்த முஸ்லிம் அரசியல் கட்சிகளையும் அடையாளம் காண முடியும். தமிழ் கட்சிகளும் இதற்கு விதி விலக்கல்ல. இலங்கையின் இடதுசாரி அரசியல் கூட இப்படிக் கறை படிந்த ஒன்றாகவே உள்ளது. பாராளுமன்ற இடதுசாரிகள் பலர் நம்ப முடியாத பலவீனங்களை வெளிப்படுத்தி வருகின்றனர்.

ஆக, முஸ்லிம் அரசியலின் சீரழிவை, இலங்கை அரசியலின் இந்த ஒட்டு மொத்தச் சீரழிவின் கறை படிந்த ஒரு பகுதி எனக் கருதவும் முடியும். எல்லோருமாய்ச் சேர்ந்து அழகிய இலங்கை தேசத்தைச் சிதைத்து சீரழித்து விட்டனர். இதனையே இந்த நாட்டின் முற்போக்கு சக்திகளும் அறிவுஜீவிகளும் அதிகம் விமர்சித்து வருகின்றனர். அந்த விமர்சனங்கள் இந்நாட்டுப் பிரஜைகளின் மனச்சாட்சியைப் பிரதிபலிப்பதாக அமைந்திருப்பது மிகவும் முக்கியமான, வெளிப்படை உண்மையாகும்.

இலங்கை முஸ்லிம் சமூகம் 'தனிமைப்படும் அரசியலைச்' செய்வதோ அல்லது 'தனிமைப்படுத்தும் அரசியலைச்' செய்வதோ விவேகமானதல்ல. இணைப்புப் பாலமாக செயற்பட வேண்டிய கடப்பாடும் வரலாற்றுக்கு கடமையும் முஸ்லிம் மக்களுக்கு உள்ளது. ஆழமாகப் பிளவுபட்டிருக்கும் இலங்கைச் சமூகங்களிடையே நல்லிணக்கத்தையும் புரிந்துணர்வையும் வளர்க்கும் பொறுப்பைச் சுமக்க வேண்டிய நிலையில் முஸ்லிம் சமூகம் உள்ளது. பாதிப்புக்குள்ளான மனநிலையிலிருந்து வெளியேறி, 'ஸ்மார்ட்' ஆன ஒரு சிறுபான்மைச் சமூகமாக (Smart Minority) முஸ்லிம் சமூகம் தள மாற்றம் பெற வேண்டும். அதையே முஸ்லிம்களின் அரசியலும் பிரதிபலிக்க வேண்டும்.

நேர்மையும் சுய கௌரவமும் ஜனநாயகமும் பன்மைத்துவமும் மிளிரும் ஒரு மூன்றாவது அணி, முன்னெப்போதை விடவும் மிகவும் இன்றியமையாத தேவையாக மாறியுள்ளது. அழகிய இலங்கை தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு இந்த மூன்றாவது அணி அதிகம் பங்களிக்க முடியும். மூன்றாவது அணி என்பது சகல இனங்களையும் பிரதிபலிக்கும், முற்றிலும் புதிய அரசியல் கலாச்சாரம் ஒன்றின் அடிப்படையிலேயே முகிழ்த்தெழ வேண்டும். அதுதான் புதிய இலங்கையை சாத்தியப்படுத்தும். அதற்கு முஸ்லிம் அரசியல் முன் கையெடுக்க வேண்டும்; துடிப்புடன் பங்களிக்க வேண்டும். இதை நோக்கிய பண்பு மாற்றத்தை முஸ்லிம் அரசியல் எடுத்தாக வேண்டும். இது காலத்தின் கட்டாயம்.

---

• நேசன்

# RTI: குரங்கின் கை பூமாலையாகிவிடுமா?




*சம்பவம் - 01*

முஸ்லிம் தனியார் சட்டத் திருத்தம் தொடர்பாகப் பேசப்பட்டு வந்த காலங்களில் முஸ்லிம் பெண்கள் மத்தியில் இளவயதுத் திருமணம் அதிகமாக நடத்தப்பட்டு வருவதாகவும், இதனால் முஸ்லிம் பெண்கள் மத்தியில் தலாக் வீதம் அதிகரித்திருப்பதாகவும் சில கண்டுபிடிப்புக்கள் வெளியாகியிருந்தன. சமூக மட்டத்தில் இது நம்ப முடியாத தகவலாக இருந்தாலும் இதனை உறுதிப்படுத்திக் கொள்ளும் வழிவகைகள் தெரியாமலிருந்தன.

இந்தத் தரவுகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு பல வகையிலும் முயற்சிகள் செய்த போதும் அந்த முயற்சிகளால் தேவையான தரவுகளைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. முஸ்லிம் சமூகத்துக்கான பிரத்தியேக நீதிவான்களாகக் கடமையாற்றும் காதி நீதிவான்களிடம் இது சம்பந்தமான தகவல்களைப் பெறலாம் என்று முயற்சித்து கடந்த ஐந்து வருடங்களில் முஸ்லிம் சமூகத்தின் தலாக் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கென எடுத்த முயற்சியும் கைகூடவில்லை.

காதி நீதிபதிகள் அனுப்பி வைக்க வேண்டிய அறிக்கைகளை முறையாக அனுப்பி வைப்பதில்லை எனவும், இதனால் காதிகள் சபையிடம் சரியான தகவல்கள் இல்லை என்பதும் பின்னர் தெரிய வந்தது.

*சம்பவம் - 02*

இலங்கையில் உள்ள பள்ளிவாசல்களை வக்ப் சபையில் பதிவு செய்யும் படி அடிக்கடி முஸ்லிம் சமூகம் அறிவுறுத்தப்பட்டுக் கொண்டு வருகிறது. வக்ப் சபையில் பதிவுசெய்யப்பட்ட பள்ளிவாசல்கள் கடைப்பிடித்தொழுக வேண்டிய ஒழுக்காற்றுக் கோவைகளை வக்ப் சபை பள்ளிவாசல்களுக்கு வழங்குகிறது. இந்த ஒழுங்கு விதிகளை மீறி பள்ளிவாசல்கள் செயற்படுகின்ற பொழுது வக்ப் நியாய சபைக்கு முறைப்பாடு செய்யப்பட்டால் வக்ப் சபை இந்த விடயத்தில் தலையிட்டு தீர்ப்பு வழங்கும் வல்லமையை பெற்றுள்ளது.

ஆனால் இந்த நடைமுறை வக்ப் சபையினால் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை எனவும், வக்ப் சபை பக்கச் சார்பாக நடந்துகொள்வதாகவும், முறைப்பாடுகள் கவனிக்கப்படாமல் வருடக் கணக்கில் இழுத்தடிக்கப்படுவதாகவும் சமூகத்தின் மத்தியில் பரவலான கருத்துப் போக்கு நிலவுகிறது.

வக்ப் சபையின் முன் வைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகள் இழுத்தடிக்கப்படுவதற்கான காரணம் என்ன, தங்களது முறைப்பாடுகளுக்கான தீர்வுகள் எப்போது வரும் என்பது போன்ற கேள்விகளுக்குப் பதில் தெரியாமல் சமூகம் தன்னாலே பிரச்சினைகளைத் தீர்க்கப் போய் சமூகத்தில் அவை பிளவுகளாகவும் பிரிவுகளாகவும் கூறு போட்டுள்ளன.

இந்த இரண்டு சம்பவங்களிலும் தகவல் என்னும் ஆயுதம் கையிலே கிடைக்காததால் சமூகம் துவண்டு போனது தெளிவாகிறது. தகவல்களின் யுகம் என அழைக்கப்படுகின்ற இருபத்தியோராம் நூற்றாண்டில் யாரிடம் தகவல்கள் அதிகம் இருக்கின்றனவோ அவர்கள் தான் உலகின் போக்கை மாற்றும் சக்தி படைத்தவர்களாகத் திகழ்கின்றார்கள். மறுதலையாக யாரிடம் போதுமான தகவல்களோ தரவுகளோ இல்லையோ அவர்கள் குரலற்றவர்களாக ஒடுக்கப்பட்டு விடுகிறார்கள். இவர்களிடம் மறுத்துப் பேசுகின்ற அளவுக்கு தகவல்கள் இருப்பதில்லை.

அதிகாரம் பொருந் தியவர்கள் தமது அதிகாரத்தைப் பயன்படுத் திப் பெற்றுக் கொண்ட தகவல்களை மக்களுக்குக் கொடுக்காமல் பதுக்கு வதனால் அது அவர்களை மக்கள் மீது அத்துமீறச் செய்யும் அளவு அசுர பலத்தைக் கொடுக்கிறது.

மன்னராட்சி நிலவிய காலங்களில் ஸ்வீடனில் இந்த நிலைமைதான் இருந்தது. மன்னர் மக்களுக்கு வெளிப்படுத்தாமல் மறைத்து வைத்திருக்கின்ற தகவல்களை நாட்டு மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்காக ஸ்வீடன் பாராளுமன்றம் ஒரு சட்டமூலத்தை நிறைவேற்றியது. அரச நிறுவனங்கள், அதிகாரிகள், தலைவர்கள் என மக்களுக்குத் தேவையான தகவல்களை தேக்கி வைத்துள்ள இடங்களில் இருந்து தகவல்களைப் பெறுவது மக்களின் அடிப்படை உரிமை என ஸ்வீடன் பாராளுமன்றம் முதலாவது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை 1766 இல் வெளியிட்டது. அதனைத் தொடர்ந்து இன்றுவரை 112 நாடுகளில் தகவல் அறியும் உரிமை மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த வகையில் உலக மக்கள் தொகையில் 88 வீதத்தினர் இந்த உரிமையை அனுபவிக்கின்றனர். இந்தப் பட்டியலில் 111 ஆவது நாடாக இலங்கை 2016 ஆம் ஆண்டில் இணைந்து கொண்டது. ஆசிய நாடுகளில் நாட்டு மக்களுக்கு தகவல் அறியும் உரிமையை வழங்கிய கடைசி நாடு இலங்கையாகும். இருந்த போதிலும் இலங்கையின் தகவல் உரிமைச் சட்டம், முன்வைக்கப்பட்டுள்ள தகவல் உரிமைச் சட்டங்களில் மூன்றாவது ஸ்தானத்தில் இருக்கிறது. முதலாவது நிலையில் மெக்சிக்கோவும் இரண்டாவது நிலையில் சேர்பியாவும் உள்ளன.

மறைந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் உயில் உட்பட பல்வேறு விடயங்களை வெளியிடக் கோரி நெல்லை வழக்கறிஞர் பிரம்மா முன்வைத்த RTI மனு தமிழக அரசியலில் சசிகலாவின் தலைவிதியையே மாற்றி விட்டது. அதே போல லண்டனின் கார்டியன் பத்திரிகையும் 2008 இல் இது போன்றதொரு புரட்சியைச் செய்தது.

இங்கிலாந்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வரப்பிரசாதங்கள் தொடர்பில் கார்டியன் பத்திரிகை RTI கோரிக்கையொன்றை விடுத்திருந்தது. இது பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமையை மீறுவதனால் குறித்த தகவல்களை வழங்க முடியாது என சபாநாயகர் இந்த RTI மனுவை நிராகரித்தார். ஆனாலும் இது பொதுநலனைக் கருத்திற் கொண்டு கேட்கப்பட்டுள்ளதனால் இதனை சபாநாயகர் மறுக்க முடியாது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இந்த விவகாரத்தின் நீட்சி சபாநாயகரை இராஜினாமா செய்யுமளவுக்கு கொண்டு சேர்த்தது. இந்தளவு பாரிய மாற்றங்களை RTI இலங்கையில் ஏற்படுத்துமா என்பது மக்கள் இந்த ஆயுதத்தை எப்படிப் பயன்படுத்தப் போகிறார்கள் என்பதில் தான் தங்கியிருக்கிறது.

இலங்கையில் தகவல் அறியும் உரிமையை மக்களுக்கு வழங்குவதற்கான முயற்சிகள் 1994 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்ட போதும், 2016 இல் அது நடைமுறைக்குக் கொண்டுவரப்படுவதற்கு ஊடகங்களினதும் ஊடகவியலாளர்களினதும் தொடர்ச்சியான போராட்டம் பெருமளவு பங்களிப்புச் செய்திருக்கிறது. இதனால் இது ஊடகங்களுக்குத் தேவையானதொரு சட்டம் என மக்கள் கருதுவதற்கு இடமுண்டு. உண்மையில் இது ஊடகங்களை விட பொதுமக்களுக்கே அதிகம் பயன்தரவல்லது என்பதை முதல் நான்கு நாட்களில் வந்து குவிந்த ஆயிரத்துக்கும் அதிகமான RTI விண்ணப்பங்கள் தெளிவுபடுத்தியுள்ளன. ஏனெனில் வந்து சேர்ந்தவைகளில் அதிகமானவை பொதுமக்களிடமிருந்தே வந்திருந்தன.

2016 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டம் குறித்துரைப்பதன்படி, அரசியலமைப்பின் 14 அ உறுப்புரையில் உள்ள தகவலைப் பெற அணுகுவதற்கான மக்களின் உரிமையை இது உத்தரவாதப் (பக்.11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## EDITORIAL

49, St. Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258 077 222 7569
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

### உரிமைகளுக்காக குரல் கொடுப்பதில் பின்னிற்கக் கூடாது

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் அஷ்ரபுக்குப் பின்னர் முஸ்லிம் சமூகத்திலிருந்து உரிமைப் போராட்டங்கள் அரசியலுக்காக தாரை வார்க்கப்பட்டு விட்டன. அன்றிலிருந்து இன்றுவரை உரிமைக்காக குரல் கொடுப்பவர்கள் இன்றி முஸ்லிம் சமூகம் நாதியற்றுத் தவிக்கிறது. அரசியலுக்கூடாகத்தான் உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கான சாத்தியங்கள் அதிகமாக இருக்கின்ற நிலைமையில், முஸ்லிம்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பதற்குத் தோதான அரசியல் தலைமைகள் முஸ்லிம் சமூகத்தில் இல்லாமல் இருப்பது சமூகத்தின் சாபக்கேடன்றி வேறில்லை.

முஸ்லிம் அரசியல் தலைமைகள் பெற்றுத் தர மறுத்த முக்கியமான உரிமைகளுள் முஸ்லிம்களின் காணி உரிமைகள் மிக முக்கியமானவை. ஏற்கனவே இந்த நாட்டில் காணி ஒதுக்கீட்டில் முஸ்லிம்களுக்கு அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. கிழக்கு மாகாணத்தில் வாழுகின்ற 39 வீத முஸ்லிம்களுக்கு வெறும் 08 வீத நிலமே ஒதுக்கப்பட்டிருக்கிறது.

உலகில் ஒரு சதுர கிலோ மீட்டரில் மக்கள் செறிந்து வாழும் பிரதேசமாக காத்தான்குடி அடையாளப்படுத்தப் பட்டிருப்பதை நாடு பெருமையுடன் பதிவு செய்கிறது. இதற்குக் காரணம் முஸ்லிம்களுக்கு போதுமான காணி ஒதுக்கப்படவில்லை என்பது தெரிந்தும் எந்த அரசியல் வாதியும் இந்தக் காணி உரிமையைப் பெற்றெடுக்க வில்லை. இன்றும் கூட சூழ உள்ள கிராமங்களில் ஒரு ஏக்கரில் ஓரிரு வீடுகள் இருக்கின்ற நிலையில், ஒரு ஏக்கர் நிலத்தில் ஒரு முஸ்லிம் கிராமமே வாழ வேண்டிய நிர்ப்பந்தத்தில் முஸ்லிம் சமூகம் மூச்சுத் திணறிக் கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் பாசிசப் புலிகளாலும் இராணுவத்தின ராலும் சூறையாடப்பட்ட முஸ்லிம்களின் ஆயிரக்கணக் கான ஏக்கர் காணிகள் எப்போது தமக்குக் கிடைக்கும் என்று காணிகளை இழந்தவர்கள் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். இவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்கான போராட்டங்கள் அரசியல் போராட்டங்களாக மேற்கொள்ளப்படுவதேயன்றி பாதிக்கப்பட்ட மக்களின் உரிமைப் போராட்டமாக வடிவெடுக்கவில்லை. குரங்கு அப்பம் பங்கிட்ட கதையாக இருபக்க இனவாதங்களாலும் முஸ்லிம்களின் காணிகள் துண்டாடப்பட்டு வருகின்றன.

போதாக்குறைக்கு தொல்பொருள் ஆராய்ச்சி என்ற பெயரிலும், புதிதாக முளைக்கின்ற சிலைகளின் பெயராலும் முஸ்லிம்களின் காணி உரிமைகள் கேள்விக்குள்ளாக்கப்பட்டு வருகின்றன. ஜெய்லானி, மாணிக்கமடு என இந்த பட்டியல் தொடர்ந்தும் நீட்சி யடைந்தே செல்கிறது. எல்லை மீள்நிர்ணயத்தின் போது பல முஸ்லிம் பிரதேசங்கள் சிங்கள, தமிழ் பிரதேசங் களுடன் இணைக்கப்பட்டிருப்பதனால் முஸ்லிம்களுக்கு உரிய காணிகளைப் பெறுவதற்கான எதிர்காலச் சாத்தி யங்களும் இல்லாதொழிக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் பின்னணியில் தான் தம்புள்ள பள்ளிவாசலின் காணி ஒதுக்கீட்டை நோக்க வேண்டும். அரை ஏக்கர் அளவில் இருந்த தம்புள்ள பள்ளிவாசலுக்குச் சொந்தமான காணிக்குப் பதிலாக வெறும் இருபது பேர்ச் காணியினை வழங்குவதாக ஜாதிக ஹெல உருமயக் கட்சியின் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்திருப்பதானது முஸ்லிம்களின் காணியை பறிக்கின்ற அப்பட்டமான பகற்கொள்ளையாகும். முஸ்லிம் அரசியல்வாதிகள் போல நல்லிணக்கத்தின் பெயரால் இதனை விட்டுக் கொடுக்காமல், முஸ்லிம் சமூகத்தின் சொத்தைப் பாதுகாக்கின்ற வகையில் இந்த டீலுக்கு மறுப்புத் தெரிவித்திருக்கின்ற தம்புள்ள பள்ளிவாசல் நிர்வாகத்தின் நிலைப்பாடு முன்மாதிரியாகக் கொள்ளத்தக்கதாகும்.

உரிமைகளைப் பொறுத்தவரையில் அதிலே விட்டுக் கொடுப்புக்களுக்கு இடமிருப்பதில்லை. காணி உரிமையை இழப்பதனூடாக ஒரு சமூகத்தின் இருப்பே கேள்விக்குறி யாகின்ற நிலைமை ஏற்படுகிறது என்ற வகையில் காணி உரிமை விட்டுக் கொடுப்புக்கான ஒரு விடயமாக கருதப்பட முடியாது. அடுக்கடுக்காக இழந்து வருகின்ற காணி உரிமைகளை தடுத்து நிறுத்துவதற்காக சிவில் சமூகம் மேற்கொண்டு வருகின்ற இந்த முயற்சிக்கு சமூகம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இந்த உரிமைப் போராட் டத்தில் முஸ்லிம் சமூகமே ஒன்று திரண்டு தம்புள்ள பள்ளிவாசல் நிர்வாகத்துக்கு தோள் கொடுக்க வேண்டும்.

இது நாட்டின் நல்லிணக்கத்தைப் பாதிக்கின்ற போராட்ட மல்ல. விட்டுக் கொடுத்து வாழுதல் என்பது எல்லா இனங்களதும் பண்பாக வரும் போதுதான் நல்லிணக்கம் சாத்தியமாகும் என்பதனை உணரவைப்பதற்கான ஒரு முன்முயற்சியாகவே இதனைக் கருத வேண்டும்.

# கிழக்கில் எழுக தமிழ்

• கருணாகரன்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியலுக்கு அப்பால் இரண்டு நிகழ்ச்சிகள் மட் டக்களப்பில் நடந்தேறியுள்ளன. ஒன்று, தமிழ் மக்கள் பேரவையின் 'எழுக தமிழ்'. இரண் டாவது, விடுதலைப் புலிகளின் முன்னாள் தளபதியும் பின்னாளில் இலங்கை அரசில் பிரதி அமைச்சருமாக இருந்த விநாயக மூர்த்தி முரளிதரன் என்ற கருணாவின் புதிய கட்சி அங்குரார்ப்பணம். இந்த இரண்டு நிகழ்ச்சி களும் கிழக்கின் அரசியல், சமூக நிலைமை களில் எதிர்காலத்தில் தாக்கங்களை உண்டு பண்ணக்கூடியவை.

கருணாவின் அரசியல் நகர்வுகள் இன் றைய நிலையில் கடுமையான விமர்சனங் களுக்கும் கேள்விகளுக்கும் உள்ளாகியிருப் பது உண்மை. ஆனால், தமிழ்த் தேசியக் கூட் டமைப்பு உள்ளிட்ட தமிழ்த் தேசியத் தரப்பு களின் செயற்குறைபாடுகளும் பலவீனங் களும் எதிர்காலத்தில் கருணாவைப் பலப் படுத்தக் கூடும். அதற்கான முறையில் தன் னுடைய செயற்திறனை உருவாக்கிக் கொள் வது கருணா தரப்பிற்குரியது. அரசியலில் எதுவும் நடக்கும். எப்படியும் நடக்கும் என் பதை இந்த இடத்தில் நினைவிற் கொள்வது நல்லது. ஆகவே, கிழக்கின் சிக்கலுக்குரிய எதிர்கால அரசியலில் இந்தப் புள்ளியையும் இணைத்தே நாம் சிந்திக்க வேண்டியுள்ளது.

தமிழ் மக்கள் பேரவை 'எழுக தமிழ்' மூலமாக கிழக்கில் தன்னை விரிக்க முயன் றிருக்கிறது. இதற்காக அது பெருமெடுப்பில் ஒரு நிகழ்வைச் செய்வதற்கு கடுமையான முயற்சிகளை மேற்கொண்டது. எதிர்பார்க்கப் பட்ட அளவுக்கு இல்லை என்றாலும் 'எழுக தமிழ்' நிகழ்ச்சி ஆயிரக்கணக்கான மக்களின் பங்கேற்புடன் நடந்து முடிந்திருக்கிறது.

தமிழ்த் தரப்பினால் வழமையாக முன் வைக்கப்பட்டு வரும் பிரகடனங்கள் இந்த நிகழ்ச்சியிலும் முன்வைக்கப்பட்டன. அதே வேளை இன்னொரு அறிவிப்பும் இங்கே பிரத்தியேகமாக விடுக்கப்பட்டது. இந்த நிகழ்வில் முதன்மையாளராகக் கலந்து கொண்ட வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன், "வடக்குக் கிழக்கு இணைப் பைப் பற்றி முஸ்லிம்களுடன் பேசத் தயார்" என்று அறிவித்திருக்கிறார்.

ஆனால், இந்த நிகழ்வில் முஸ்லிம்கள் கலந்துகொள்ளவில்லை. முஸ்லிம்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கவுமில்லை. அவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுமில்லை. அதற்கான உரையாடல்களோ, ஏற்பாடுகளோ 'எழுக தமிழ் ஏற்பாட்டுக் குழு'வினரால் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரியவில்லை. இருந்தபோதும் முஸ்லிம்களை நோக்கிக் குரல் எழுப்பப்பட்டிருக்கிறது.

ஆனால், விக்னேஸ்வரனின் ஐந்து ஆண்டு காலத்தினுள்ளான அரசியல் பிரவேசம், செயற்பாட்டுப் பரப்பு போன்றவற்றிலும் முஸ்லிம்கள் உள்ளிட்ட பிற சமூகத்தினர் மீதான கரிசனைகள் இருக்கவில்லை. குறைந்த பட்சம் வடக்கில் முஸ்லிம்களின் மீள்குடி யேற்றத்திற்குக் கூட விஷேட அக்கறைகள் காட்டப்படவில்லை. முஸ்லிம்கள் திருப்தி யடையக்கூடிய விதமாக, நம்பிக்கை கொள் ளும்படி விக்னேஸ்வரனின் நிர்வாகம் செயற் படவில்லை. இதனையிட்டு இந்தப் பத்தி யாளர் உட்படப் பலரும் பகிரங்கத் தளத்தில் விவாதித்துள்ளனர்.

இதற்கெல்லாம் ஒரு பதிலை விக்னேஸ் வரன் சொல்லியிருந்தாரே தவிர, செயற் பாட்டின் மூலமாகப் பதிலளிக்க முன்வர வில்லை. செயற்பாடில்லாத காகித அறிக் கையை முஸ்லிம் தரப்புகள் மறுத்து, நிரா கரித்திருந்தன. இதை இங்கே இந்தச் சந் தர்ப்பத்தில் குறிப்பிட்டுக் கூற வேண்டும். ஏனென்றால், பிற தரப்பை அழைக்கும்போது அந்தத் தரப்பு திருப்தி பெறக்கூடிய வகை யில், நம்பிக்கை கொள்ளக்கூடிய முறையில் நம்மை வைத்துக் கொள்ள வேண்டும். அப் போதுதான் அந்தத் தரப்பு எந்தத் தயக்க முமில்லாமல் நம்மை நெருங்கி வரும்.

ஆகவே வடக்கிலிருந்து வெளியேற்றப் பட்ட முஸ்லிம்களை விக்னேஸ்வரனுடைய நிருவாகம் உரிய முறையில் வரவேற்றுப் பராமரித்திருக்க வேண்டும். அப்படிச் செய் திருந்தால், அது கிழக்கிலுள்ள முஸ்லிம் களை விக்னேஸ்வரனைக் கவனிக்க வைத் திருக்கும். ஆனால் அப்படி எதுவும் நடக்க வில்லை.

இத்தகைய நிலையில்தான் கிழக்கில் சம்பிரதாயபூர்வமாக முஸ்லிம்களை நோக்கிய அழைப்பை விக்னேஸ்வரன் விடுத்தி ருக்கிறார். ஆகவே இந்த அறிவிப்பையும் முஸ்லிம்கள் பெரிதாகக் கவனத்திற் கொள் ளப்போவதில்லை. இத்தகைய ஒருபக்க நிலைப்பட்ட அறிவிப்பையே ஏற்கனவே சிங்களத் தலைவர்கள் தமிழ்ச் சமூகத்தை நோக்கி விடுத்திருக்கின்றனர். ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வு, ஒரே தேசம், ஒரே தேசியம் என்ற வகையில்.

அப்படிச் சிங்களத் தலைவர்களால் விடுக் கப்பட்ட அறிவிப்பை தமிழ்த் தரப்பு ஒரு போதும் கவனத்திற் கொள்ளவில்லை; அதை நம்பவுமில்லை; ஏற்றுக்கொள்ளவுமில்லை. பதிலாக அது ஒரு மேலாதிக்கச் சிந்தனையின் பாற்பட்ட வெளிப்பாடு என்றே தமிழ்த் தரப் பினால் நோக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

இங்கும் அதுதான் நிகழ்ந்திருக்கிறது. வடக்குக் கிழக்கு இணைப்புத் தொடர்பாக முஸ்லிம்களுடன் பேசத் தயார் என்ற விக் னேஸ்வரனின் அறிவிப்பை முஸ்லிம்கள் மேலாதிக்கச் சிந்தனையின் வெளிப்பாடா கவே பார்க்கிறார்கள். விக்னேஸ்வரனுடைய இந்த அறிவிப்புத் தொடர்பாக கிழக்கி லுள்ள பல முஸ்லிம்களுடன் பேசி



னேன். அவர்களுடைய பொதுவான அபிப் பிராயம், "தமிழ் - முஸ்லிம் தரப்புகளுக்கி டையே உள்ள இடைவெளிகளைக் குறைப் பதைப் பற்றிய நம்பிக்கையான செயற்பாடு கள் எதையும் முஸ்லிம்கள் உணரவில்லை. சிங்களத் தரப்போடு எப்படி நிபந்தனை யில்லாமல் இணக்கத்துக்குப் போக முடி யாதிருக்கிறதோ அப்படித்தான் தமிழ்த்தரப் போடு முஸ்லிம்களும் உடனடியாக உடன் பாடு எதற்கும் போக முடியாதுள்ளது" என்ப தாக உள்ளது. "மெய்யான அக்கறைகள் இப்படி மேடைப் பேச்சின் வழியாக ஏற் படாது" எனவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஆகவே வலுவடைந்திருக்கும் இடை வெளிகளைக் குறைப்பதற்கான நெகிழ்ச்சிக்கு நிறைய வேலைகளைச் செய்ய வேண்டும். அதற்கான அன்புருக்கம் தேவை. பரஸ்பரப் புரிந்துணர்வும் நெகிழ்வும் அவசியம். கூடவே இது ஒரு பெரிய வேலைத் திட்டமாக முன் னெடுக்கப்படவும் வேண்டும். எல்லாவற் றுக்கும் அப்பால் முஸ்லிம்களின் விருப்பத் தையும் நம்பிக்கையையும் அறிய வேண்டும். அத்துடன் கிழக்கிலுள்ள தமிழர்களின் விருப் பம், அவர்களுடைய தேவைகள் என்ன என்பதையும் அதற்கான சம உரிமைகளையும் பேணவும் வேண்டும். தேவைகளுக்காகப் பயன்படுத்தும் நிலை நல்லதல்ல.

எழுக தமிழின் பிரகடனத்திலும் அத னுடைய சிந்தனைப் புலத்திலும் முஸ்லிம் களைப் பற்றியும் பிற சமூகத்தினரைப் பற்றியுமான கரிசனைகளும் கவனங்களும் துலக்கமாக இல்லை. குறிப்பாகக் கிழக்கின் அரசியல் மற்றும் சமூக நிலைமைகளைக் குறித்த தெளிவான வாக்கியங்களும் இல்லை. தமிழ் மக்கள் பேரவையோ அல்லது அதற்கு நெருக்கமான தமிழ்த் தேசிய மக்கள் முன்ன ணியோ முஸ்லிம்களைக் குறித்தும் கிழக்கின் பிரத்தியேக நிலைமையைக் குறித்தும் சிறப் பான கவனத்தைக் கொண்டதாக இல்லை. எத்தகைய தெளிவான சித்திரத்தையும் இது வரை அளித்ததில்லை.

இப்போது கிழக்கில் எழுக தமிழ் நிகழ் வைச் செய்ய முற்பட்டபோதே அங்கே முஸ்லிம்களைப் பற்றியும் சிந்திக்க வேண் டும், கிழக்கின் அரசியல் நிலைமைகளைக் குறித்துக் கவனம் செலுத்த வேணும் என்ற உணர்வு பிறந்திருக்கிறது. அந்தளவுக்கு கிழக் கின் அரசியல் மற்றும் சமூக நிலைமைகள் முற்றிலும் வேறாகி வளர்ச்சியடைந்துள்ளன. இதில் முஸ்லிம் சமூகத்தின் திரட்சியும் வலு வும் தனியான கவனத்திற்குரியதாக உள்ளது.

வடக்குக் கிழக்கு இணைப்பைப் பற்றிச் சிந்திப்பதாக இருந்தால், அதை யாழ்ப் பாணத்திலிருந்து கொண்டு மட்டும் பேசி விடமுடியாது. யாழ்ப்பாணத்தின் அறிவுறுத் தலை கிழக்குத் தமிழர்கள் அனுசரிக்க முற் பட்டாலும் முஸ்லிம்கள் அதற்கு இடமளிப் பர் என்பது கேள்வியே. ஆகவேதான் முஸ் லிம்களுடன் பேசியே ஆக வேண்டும் என்ற புரிதல் பேரவையினருக்கும் விக்னேஸ்வர னுக்கும் ஏற்பட்டிருக்கிறது.

அதாவது யதார்த்த நிலை மெல்லிய அள வில் உணரப்பட்டுள்ளது. இதன் விளைவே விக்னேஸ்வரனின் அழைப்பு. இதை அவர்கள் மட்டக்களப்பில் செயற்படத் தொடங்கிய பின்புதான் உணர்ந்திருக்கிறார்கள் என்பது நகைப்பிற்குரியது. தவிர, ஏற்கனவே சுமந் திரன் முஸ்லிம்களை நோக்கி அடித்த இணைப்பு மணியை இன்னொரு வகையில், இப்போது விக்னேஸ்வரன் அடித்திருக்கிறார். இதில்கூட இருவரும் ஒன்றாகவே உள்ளதைக் காண முடியும்.

சுமந்திரனும் சரி, விக்னேஸ்வரனும் சரி மனப்பூர்வமாக முஸ்லிம் சமூகத்தை நோக்கி இறங்கிப் பொது வெளிக்குப் போகத் தயா ரில்லை. முஸ்லிம்களை நோக்கி மட்டுமல்ல, கிழக்கிலுள்ள தமிழ் மற்றும் பிற சமூகத்தி னரை நோக்கியும் கூட. இதனை ஏற்கனவே பல சந்தர்ப்பங்களிலும் கிழக்குத் தமிழ்த் தலைமைகள் வருத்தத்தோடு குறிப்பிட்டு வந்துள்ளன.

குறிப்பாக, கடந்த ஆண்டுகளில் பிரித் தானியப் பிரதமர் டேவிற் கமரூன், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி போன்ற தலைவர் கள் வடக்கிற்கு வந்திருந்தனர். கிழக்கே செல்லவில்லை. இப்படி வெளிநாடுகளில் தலைவர்களும் பிரதானிகளும் வடக்கிற்கு கொடுக்கின்ற முக்கியத்துவத்தை கிழக்கிற் கும் கொடுக்க வேண்டும் என்ற வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடந்து கொள்ளவில்லை என்ற குறையைக் கிழக்குப் பிரதிநிதிகள் வெளிப்படுத்தியிருந்தனர்.

ஆகவே செயல்முறையிலான இடை வெளிகள் வடக்கிற்கும் கிழக்கிற்குமிடை யில் நிறைய உண்டு. இதனையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் மேலோட்ட மாக எதையும் பேச முடியாது. அப்படிப் பேசுவதால் பயனொன்றும் ஆகிவிடாது.

வடக்குக் கிழக்கு இணைப்பு, தமிழர் களுக்கான தனியான அலகு, காணி, பொலிஸ் அதிகாரங்கள் என்று நீளமானதொரு பட்டி யல் தமிழ்த் தரப்பிடம் உண்டு. இந்தப் பட்டி யலை வெற்றிகரமாக்க வேண்டுமாக இருந் தால், இந்தப் பட்டியல் உள்ளடக்கியிருக்கும் பிராந்தியத்தில் உள்ளவர்களை ஒரு முகப்படுத் துவது அவசியம். அதற்கான அரசியலை மேற்கொள்ள வேண்டும். அதற்கு அடிப்படை யான ஜனநாயகப் பண்புகளையும் பல்லின, பல்வகைமைப் பண்பாட்டையும் அதற்கான சிந்தனையையும் பின்பற்ற வேண்டும். இதையெல்லாம் செய்யும்போதே எதிர் பார்க்கப்படும் விடயங்களை நோக்கிய சாத் தியங்களை உண்டாக்க முடியும்.

தற்போது கிழக்கிற்குப் பயணம் செய்தி ருந்த விக்னேஸ்வரன், வடக்கின் முதல்வர் என்ற அடிப்படையிலும் வடக்குக் கிழக்கின் இணைப்பை விரும்புகின்றவர் என்ற வகை யிலும் ஒரு சம்பிரதாயச் சந்திப்பைக் கூட கிழக்கின் முதலமைச்சரோடோ அங்குள்ள மாகாண சபையினரோடோ செய்திருக்க வேண்டும். ஆனால், அதை அவர் செய்ய வில்லை. இதற்கு முன்னரும் அப்படி ஒரு சந்திப்பைச் செய்ய வேண்டும் என்று சிந் திக்கவில்லை. வடக்குக் கிழக்கு இணைப் பைப் பற்றிப் பேசுவோருக்கு இது அவசிய மான ஒரு பொறுப்பு.

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றவூப் ஸெய்ன்

# கிழக்கில் மாவட்ட நிருவாக உரிமையேனும் கிடைக்காதா?

## புறக்கணிக்கப்படும் இரு பெரும்பான்மை முஸ்லிம் மாவட்டங்கள்

**நல்லாட்சி அரசியல்**

பன்மைப் பாங்கான இலங்கையின் அரசியல் சூழமைவு ஆங்கிலேயரின் வருகைக்குப் பின்னர் படிப்படியாக இனக் குரோதங்களாலும் பகை உணர்வுகளாலும் பிளவுபடத் தொடங்கியது. பிரிட்டிஷ்காரர்கள் தமது பிரித்தாளும் தந்திரத்தின் மூலம் ஏற்படுத்திய வடுக்கள் சுதந்திரத்திற்குப் பின்னரும் நீடித்தன.

ஐரோப்பிய நாடுகளிலிருந்து அரசியல் சுதந்திரம் பெற்ற பெரும்பாலான நாடுகளில் உருவாக்கப்பட்டதெல்லாம் பெரும்பான்மையினரின் ஜனநாயகமாகவே (Majority Democrecy) மாற்றமடைந்தது. பல்வேறு இனங்கள் வாழும் நாடுகளில் அனைவரும் அதிகாரத்தில் பங்குகொள்வதற்கான வாய்ப்பு திட்டமிட்டு மறுக்கப்படும் சூழ்நிலை உருவாக்கப்பட்டது. இலங்கை இதற்கு நல்ல உதாரணம்.

சுதந்திரத்தின்போது தமிழ் சமூகம் சுதந்திரப் போராட்டத்திற்கு ஆதரவளிப்பதாயின் 50:50 கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டும் என்று நிபந்தனையிட்டது. முஸ்லிம்களோ நாட்டின் சுதந்திரத்திற்கே முன்னுரிமை வழங்கினர். இன்று இனக் கசப்பும் முரண்பாடும் தீவிரமடைந்துள்ளது. ஆயுதப் போராட்டத்தின் பின்னரும் இனங்களின் மனத் துயரங்கள் நீக்கப்படவில்லை.


மையத்திலிருந்து அதிகாரம் பிராந்தியங்களுக்குப் பகிரப்பட வேண்டும் என்ற கோரிக்கை 50 ஆண்டு காலமாக முன்வைக்கப்பட்டு வந்துள்ளது. ஆயினும், மாறி மாறி வந்த எந்த அரசாங்கமும் மக்களுக்கு வாக்களித்த அரசியல்வாதிகளும் வேண்டுமென்றே இந்தக் கோரிக்கையை புறக்கணித்து வந்துள்ளனர். தொடர்ந்தும் புறக்கணித்து வருகின்றனர். இதற்கு மைத்திரி-ரணில் நல்லாட்சி அரசாங்கம் கூட விதிவிலக்கல்ல.

1987 இலங்கை - இந்திய ஒப்பந்தத்தைத் தொடர்ந்து வடக்கு கிழக்கில் உருவான அரசியல் சூழ்நிலைகள் முஸ்லிம்களை அச்சம்கொள்ளச் செய்தது. மிகத் திணறலான அத்தகைய அரசியல் சூழலில், முஸ்லிம்களுக்கும் அதிகாரம் பகிரப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுப்பெற்றன. நிலத் தொடர்பற்ற மாகாண சபை, பாண்டிச்சேரி முறையிலான பிராந்திய சபை, தென்கிழக்கு அதிகார சபை, அம்பாறையில் ஒரு கரையோர நிருவாக மாவட்டம் என்றவாறான கோரிக்கைகள் முஸ்லிம் தரப்பிடமிருந்து அவ்வப்போது முன்வைக்கப்பட்டு வந்தன.

சிறுபான்மை மக்களுக்கு மைய அதிகாரத்தில் மண்ணளவும் பகிர்வதற்கு விரும்பாத அரசியல் தலைமைகள் தேசிய நீரோட்டத்தில் நீடிக்கும் காலமெல்லாம் இவை வெறும் கனவாகவே மாறியுள்ளது. சிறுபான்மைச் சமூகங்களுக்கு சனத்தொகை விகிதாசார அடிப்படையில் வழங்கப்பட முடியுமான உரிமைகளைக் கூட பேரினவாதிகளும் சிங்களக் கடும்போக்காளர்களும் இதுவரை அங்கீகரிக்கவில்லை. இன்று மாவட்ட நிருவாகத் துறையில் இலங்கை முஸ்லிம்கள் எவ்வாறு புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர் என்பது குறித்து நாம் சீரியஸாக சிந்திக்க வேண்டிய தருணத்தில் உள்ளோம்.

இலங்கையில் தற்போது 25 நிருவாக மாவட்டங்கள் உள்ளன. அதில் 6 மாவட்டங்கள் தமிழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டவை. 17 மாவட்டங்கள் சிங்களர்களை பெரும்பான்மையாகக் கொண்டவை. 2 மாவட்டங்கள் முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்டவை என்ற உண்மையை சற்றுத் தூக்கலாக வெளிப்படுத்த வேண்டிய தருணம் இது.

ஏனெனில், ஒரு மாவட்டத்தின் அனைத்து நிருவாக செயற்பாடுகளும் மத்திய அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாட்டிலுள்ள அரசாங்க அதிபரினாலேயே முன்னெடுக்கப்படுகின்றது. முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட அம்பாறை,




திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலும் இதுவரை ஒரு முஸ்லிம் அரசாங்க அதிபர் ஏன் நியமனம் பெறவில்லை என்ற கேள்வி முக்கியமானது.

முஸ்லிம் மாகாண சபை எப்படிப் போனாலும் கரையோர மாவட்டம் குறித்த கதையாடல்கள் எப்படிப் போயினும், முஸ்லிம்களின் அடிப்படையான உரிமை இந்த அரசாங்க அதிபரின் நியமனம் ஆகும். யாழ் மாவட்டத்தில் வேதநாயகமும், முல்லைத் தீவு மாவட்டத்தில் சதீஷ்வரனும், கிளிநொச்சியில் சுந்தரம் அருமைநாயகமும் அரசாங்க அதிபராக அதிகாரத்தில் நீடிக்கும்போது அம்பாறையிலும் திருமலையிலும் முஸ்லிம்களுக்கு இந்தப் பதவி மறுக்கப்படுவதேன்?

இலங்கையின் சிவில் நிருவாகப் பரப்பில் மாகாண சபைக்கு அடுத்ததாக மாவட்ட நிருவாகத்திற்குப் பொறுப்பாக இருப்பவர் அரசாங்க அதிபர் ஆவார். ஒரு மாவட்டத்தின் காணி, மீள்குடியேற்றம், நீர்ப்பாசனம், கால்வாய், விவசாயம், கிராமிய அபிவிருத்தி, மின்னிணைப்பு, மோட்டார் போக்குவரத்து, சமூக சேவை, நூலக வசதி, ஆயுள் வேத மருத்துவம், ஓய்வகம், மயானம் என்பன குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் மாவட்ட அரசாங்க அதிபருக்கே உள்ளது.

ஒரு மாவட்டத்திலுள்ள தரிசு நிலங்கள் இலங்கை காணிச் சட்டத்தின் பிரகாரம் அரசாங்கத்திற்கு உரியன. ஆனால், அவற்றை தகுதியானவர்கள் எனக் கருதுகின்றவர்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்கான தற்துணிவு அதிகாரம் ஒரு மாவட்ட அரசாங்க அதிபருக்கு உள்ளது. தபால் தொலைத் தொடர்புத் துறை மற்றும் மாவட்டத்தில் இடம்பெறும் தேர்தல்கள், அரசாங்கத்தின் வறுமை ஒழிப்புத் திட்டம் என்பன குறித்து மத்திய அரசாங்கத்திற்கு வகை கூறும் பொறுப்பு மாவட்ட அரசாங்க அதிபருக்கு உள்ளது. மறுபக்கம் மேற்போந்த முக்கியமான விடயங்களில் தீர்மானமெடுக்கும் உயர் அதிகாரமும் அவருக்கே வழங்கப்பட்டுள்ளது.

கண்டிய மன்னர் காலங்களில் திஸாவை எனும் பெயரில் இப்பதவி உருவாக்கப்பட்டிருந்தது. ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் அரசாங்க அதிபர் என இப்பதவி பெயர் மாற்றம் பெற்றது. 1948 இல் கொண்டு வரப்பட்ட சோல்பரி யாப்பின் பின்னர் அரசாங்க அதிபரின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டன.

ஆரம்பத்தில் உருவாக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கீழ் அவரது அதிகாரம் கொண்டு வரப்பட்டது. 1972 இல் கொண்டு வரப்பட்ட புதிய அரசியலமைப்பின்படி அரசாங்க சேவை ஆணைக்குழு நீக்கப்பட்டதோடு மாவட்ட அரசாங்க அதிபரின் அதிகாரம் அதிகரிக்கப்பட்டது.

1987 இல் கொண்டுவரப்பட்ட மாகாண சபை முறைமையை அடுத்து 1987 இன் 47 ஆம் பிரிவுச் சட்டத்தின் கீழ் கவர்னரின் கீழ் மாவட்ட நிருவாக அதிகாரம் கொண்டவராக அரசாங்க அதிபர் கருதப்பட்டார். மாகாண சபை முறைமையின் பின்னர் அரசாங்க அதிபரின் அதிகாரம் மேலும் அதிகரிக்கப்பட்டது.

இலங்கையில் 19 மாவட்டங்களில் சிங்கள சமூகத்தைச் சேர்ந்தவர்களே அரசாங்க அதிபர்களாக அமர்த்தப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் 3 தமிழ் அதிகாரிகள் இப்பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். அம்பாறை, திருமலை ஆகிய மாவட்டங்களில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக இருந்தும் மூப்பு அடிப்படையிலும் சேவை அடிப்படையிலும், தகுதி அடிப்படையிலும் தகுதியான முஸ்லிம் நிருவாக சேவை அதிகாரிகள் இருக்கின்ற நிலையிலும், இவ்விரு மாவட்டங்கள் எதிலுமே முஸ்லிம் அரசாங்க அதிபர் ஒருவர் இதுவரை நியமிக்கப்படவில்லை.

இங்கு முஸ்லிம் அரசாங்க அதிபர் ஏன் தேவை என்ற கேள்வி நியாயமானது. ஒரு மாவட்டத்திலுள்ள காணிகளை மக்களின் விதாசாரத்திற்கு ஏற்ப பகிர்ந்தளிப்பதில் இனப்பாகுபாடும் ஒதுக்கலும் பச்சையாகவே முன்னெடுக்கப்படும் சூழலில், இக்கேள்விக்குப் பதிலளிப்பது மிக எளிதானது. காட்டாக, அம்பாறை மாவட்டத்தில் 1981, 2001, 2012 ஆகிய மூன்று ஆண்டுகளிலும் மேற்கொள்ளப்பட்ட அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ தொகை மதிப்பீட்டின் படி முஸ்லிம்களே மாவட்டத்தில் பெரும்பான்மையானவர்கள். 1981 இல் 41.68 வீதமாகவும், 2001 இல் 41.31 வீதமாகவும் 2012 இல் 43.63 வீதமாகவும் முஸ்லிம்களே உள்ளனர்.

ஆனால், 38.61 வீதமான சிங்களவர்களே மாவட்டத்தின் நிர்வாகிகளாகவும் வளங்களை தமக்குள் சமநிலையற்ற விதத்தில் பகிர்ந்து கொள்கின்றவர்களாகவும் உள்ளனர். இம்மாவட்டத்தில் 20 பிரதேச செயலாளர் பிரிவுகள் உள்ளன. அவற்றுள் ஒப்பீட்டு ரீதியில் சனத்தொகை குறைந்த சிங்கள செயலாளர் பிரிவுகளுக்கு அளவுக்கதிமான காணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதேவேளை, முஸ்லிம்கள் அதிகமாக உள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு சனத்தொகையை விடக் குறைவான காணிகளே ஒதுக்கப்பட்டுள்ளன. சம்மாந்துறையும் லஹுகலையும் இதற்கு ஓர் எளிய உதாரணமாகும்.

75,000 மக்களைக் கொண்டுள்ள சம்மாந்துறைக்கு 198.40 சதுர கி.மீ. நிலப்பரப்பு ஒதுக்கப்பட்டுள்ளது. 8000 பேரைக் கொண்டுள்ள லஹுகல சிங்கள பிரதேச செயலாளர் பிரிவுக்கு 800 சதுர கி.மீ. நிலப் பரப்பு ஒதுக்கப்பட்டுள்ளது. ஒதுக்கப்படாதிருக்கும் நிலங்களை மென்மேலும் பெரும்பான்மை ம்க்களிடையே பகிர்ந்தளிப்பதற்கான ஏற்பாடுகளே நடைமுறையில் உள்ளது. இதனால், பெருகிச் செல்லும் முஸ்லிம் சனத்தொகைக்கேற்ற நிலப் பகிர்வு அம்பாறை மாவட்டத்தில் சாத்தியமில்லாமலே போய் விடும். ஏனெனில் அரச நிர்வாகத்தில் இருப்பவர் ஒரு சிங்கள அரசாங்க அதிபர் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இது போக இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள முஸ்லிம்களின் நிலங்களின் கதை வேறு.

மொத்தத்தில் மூன்று வகையான நிலப் பிரச்சினைகளை முஸ்லிம்கள் எதிர்கொண்டுள்ளனர். ஏற்கனவே அநீதியான முறையில் ஒதுக்கப்பட்டுள்ள நிலம், இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள நிலம், தரிசு நிலங்களைப் பகிர்வதில் அரசாங்க அதிபருக்குள்ள தற்துணிவு அதிகாரத்தினால் முஸ்லிம்களுக்கு ஏற்படும் இழப்பு என்று மூன்று வகையில் காணிப் பிரச்சினையை நாம் எதிர்கொண்டுள்ளோம்.

(பக்.14)

அம்பாறை மாவட்ட சனத்தொகை கணிப்பீடு 2012

| இனம் | சனத்தொகை | வீதம் |
|---|---|---|
| முஸ்லிம்கள் | 282,748 | 43.63 |
| சிங்களவர்கள் | 250,213 | 38.61 |
| தமிழர்கள் | 102,454 | 15.81 |
| கிறிஸ்தவர்கள் | 12,609 | 1.95 |
| ஏனையோர் | 35 | 0.01 |
| மொத்தம் | 648,057 | 100 |

திருகோணமலை மாவட்ட சனத்தொகை கணிப்பீடு 2012

| இனம் | சனத்தொகை | வீதம் |
|---|---|---|
| முஸ்லிம்கள் | 152,784 | 40.4 |
| தமிழர்கள் | 115,549 | 30.6 |
| சிங்களவர்கள் | 101,991 | 27.0 |
| இந்தியத் தமிழர்கள் | 6,531 | 1.7 |
| ஏனையோர் | 1,257 | 0.3 |
| மொத்தம் | 378,182 | 100 |

# கீத் நொயார் தாக்குதல் சூத்திரதாரிகளுக்குத் தண்டனை

## தாமதித்தும் நீதி கிடைக்குமா?

இலங்கையின் முன்னணிப் பத்திரிகையாளர் மற்றும் டெய்லி மிரர் பத்திரிகையின் பிரதி ஆசிரியர் கீத் நொயார் மீது 2008 மே 11 இல் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் சூத்திரதாரிகள் 9 ஆண்டுகளுக்குப் பின்னர் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளனர். தாக்குதல் குறித்து கைதுசெய்யப்பட்ட 5 இராணுவ அதிகாரிகள் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

2015 ஜனவரி 08 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் அரசாங்கம் தோற்கடிக்கப்பட்ட பின்னர் சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க கொலைச் சம்பவத்துடன் தொடர்பான இராணுவப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் சிலர் கைதுசெய்யப்பட்டனர். அதேவேளை, லங்கா ஈ நியூஸ் பத்திரிகையாளர் பிரதீப் எக்னலிகொட காணாமல் போன சம்பவம் குறித்தும் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. எனினும், அது குறித்து இதுவரை தீர்ப்புகள் வெளியிடப்படவில்லை.




திவயின மற்றும் ரிவிர பத்திரிகைகளின் முன்னாள் ஆசிரியர் உபாலி தென்னகோன் இவ்வாறு காடையர்களின் தாக்குதல்களுக்கு உள்ளானார். அவர் தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்பும் இதுவரை வெளியிடப்படவில்லை. நொயாரும் தென்னகோனும் இப்போதும் உயிர் வாழ்கின்றனர். லசந்த மறைந்து விட்டார். ஆனால், எக்னலிகொடயின் கதி என்னவென்று இதுவரை தெரியவில்லை.

தென்னகோனும் அவரது மனைவியும் ஏற்கவே தம்மைத் தாக்கியோரை தெளிவாக அடையாளம் காட்டியுள்ளனர். [illegible] கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்துவது காவல் துறையின் பொறுப்பாகும்.

2009 இல் எக்னலிகொட காணாமல் போனபோது அப்போதைய அரசாங்கத்திலிருந்த அமைச்சர் ஒருவரே அதற்குப் பொறுப்பு என்று கூறப்பட்டது. ஆனால் இதுவரை குற்றவாளி எவரும் தண்டிக்கப்படவில்லை.

இராணுவப் புலனாய்வுப் பிரிவோ இராணுவ அதிகாரிகளோ உண்மையான குற்றவாளிகள் அல்ல என்பது தெளிவானது. அவர்களுக்குப் பின்னணியில் இருந்த அரசியல்வாதிகளும் அதிகார வர்க்கமுமே உண்மையான சூத்திரதாரிகள். ஆனால், அவர்கள் திரைமறைவிலேயே பாதுகாக்கப்பட்டு வருகின்றனர்.

தமக்கு எதிராக அல்லது தாம் இழைக்கும் அநீதிகளை எதிர்த்து எழுதுகின்றவர்களை புலிச் சார்பானவர்கள் என்று முத்திரை குத்தி கைதுசெய்தும் கொலை செய்தும் தண்டித்தது முன்னைய ஆட்சி. இப்போதுள்ள நல்லாட்சி குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதில் மிகுந்த மெத்தனம் காட்டுகின்றது.

இராணுவமும் பொலிஸாரும் அரசியல்வாதிகளின் கட்டளைகளுக்கு அடிபணியாது செயல்பட வேண்டும். அரசியல் பழிவாங்கல்களுக்கு அல்லாமல் பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்தும் எவராக இருப்பினும் அவர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். ஜனநாயகத்தின் தூண்களில் ஒன்றான பத்திரிகைத் துறையைக் காப்பாற்றும் நேர்மையான பொறுப்பு ஜனநாயக அரசாங்கத்திற்கு உள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



இல்தியாஸ் பாக்கிர் மாக்கார்

## 'உங்களுக்கு சமாதானம் தேவையென்றால் சமூக நீதியை விதையுங்கள்'

பெப்ரவரி 20 ஆம் திகதியை ஐ.நா. சபை சமூக நீதிக்கான தினமாக பிரகடனப்படுத்தியுள்ளது. 2007 இல் இதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. சமூக நீதிக்கான தினத்தை கொண்டாடும் இன்றைய நாளில் இணையதளத்தில் அது விடயம் தொடர்பான செய்தியொன்று என் கண்ணில் பட்டது.

கனடாவின் மொன்ட்ரியோ நகரை அகதிகளாக இடம்பெயர்ந்து வருபவர்களுக்கான அபய பூமியாக பெயரிடப்பட்டுள்ளது என்பதுவே அச்செய்தி. பாதுகாப்பு கருதி இடம்பெயர்ந்து வருகின்ற அகதிகள் அமெரிக்காவிற்கூடாகவே அதிகம் வருகிறார்கள். இப்பின்னணியில் மொன்ட்ரியோ நகர் அபய பூமியாக அறிவிக்கப்பட்டிருப்பது சமூக நீதிக்கான தினத்தில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த விடயமாக நோக்கப்படுகின்றது.

இந்நிலையில் மொன்ட்ரியோ நகராதிபதி டுவிட்டர் மூலம் அமெரிக்க ஜனாதிபதிக்கு பின்வரும் செய்தியை அனுப்பி வைத்துள்ளார். "மொன்ட்ரியல் அபய பூமி இங்கு வருபவர்களையும் அகதிகளையும் அன்புடன் வரவேற்கிறது. பல்வகைமை எமது பலமாகும். அது எமது பரம்பரை அலகு" இந்நிலையில் கனடாவின் வான்குவர் மற்றும் டொரன்டோ நகரங்களும் அபய பூமிகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இது தவிர ஒடாவா, சஸ்கடூன், வெஜினா மற்றும் டினிபெக் நகரங்களும் அபய பூமியகளாக பிரகடனப்படுத்துவதற்கு ஆராய்ந்து வருகிறார்கள்.

உண்மையில் கனடா மக்களின் இத்தகைய மனோபாவம் உலக வாழ் மக்களுக்கு சிறந்ததொரு முன்மாதிரியை காட்டியுள்ளது.

உலகிலுள்ள அரசியல் தலைவர்களுக்கு மத்தியில் iq (அறிவு மட்டம்) உடன் eq (உணர்ச்சிகளை புரிந்துகொள்ளல்) இருப்பது முக்கியம். உணர்ச்சி என்பதில் தனது உணர்வுகள் பற்றிய அறிவும் அடுத்தவர்களின் உணர்வு தொடர்பிலான அறிவும் உள்ளடங்கும். நீதியான சமூகத்திற்கான பயணத்தில் நன்கு அறிவு படைத்த உணர்ச்சிகள் தொடர்பில் போதிய தெளிவுகள் உள்ளோர் தலைமை வகிக்க வேண்டும் என நான் நினைக்கிறேன்.

ஐ.நா.வின் கொள்கைக்கு உட்பட்டு நம்பிக்கை மற்றும் மனிதாபிமானத்திற்காக வேண்டி அர்ப்பணிப்பதற்கு ஐ.நா.வின் சகல அங்கத்துவ நாடுகளும் வாக்குறுதியளித்துள்ளன. நீதியான உலகிற்கும் சிறந்ததொரு எதிர்காலத்திற்கும் அவ்வாக்குறுதிகளை செயற்பாட்டிற்கு உட்படுத்துவதே எமது இன்றைய தேவையாக உள்ளது.

உலக நாடுகளுக்கு மத்தியில் ஐக்கியமான வளமானதொரு நல்லிணக்கத்தைப் பேணுவதற்கு தேவையான அடிப்படை மூலக்கூறொன்றாக சமூக நீதி காணப்படுகின்றது. இத்தினத்தை கொண்டாடுவதன் மூலம் வறுமையை ஒழிப்பதும் சகலருக்கும் தொழில்வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ளுதல் சர்வதேச தொழிலர் நிபந்தனைகள், சமூக நலனோம்புகைக்கான வாய்ப்புக்கள் உள்ளிட்ட சகலருக்குமான நீதி போன்ற விடயங்கள் புரிந்துகொள்ளப்படுகின்றது. இதன் மூலம் நாடுகளுக்கு மத்தியிலும் நாட்டிற்குள்ளும் சமூக நீதி, சமநிலை மற்றும் நல்லிணக்கம் போன்ற பெறுமானங்கள் பாதுகாக்கப்படுகிறது. சொத்துக்களை அனுபவிப்பதற்கு சமமான முறையில் வாய்ப்புக்களை வழங்குதல், வருமானங்கள் பிரிந்து செல்வதிலுள்ள முரண்பாடுகளை தணித்தல், சகலருக்கும் எவ்வித பேதங்களின்றி சமூக நீதியை உறுதிப்படுத்துதல் போன்றன இத்தினத்தினத்தின் குறிக்கோள்களாகும்.

உலகமயமாக்களுக்குள் பொருளாதார சமூக நீதியை பேணிச் செல்வது இன்று மிகப் பாரிய சவாலாக மாறியுள்ளது. உலகமயமாக்களுக்குள் உலகின் சகல நாடுகளும் அதன் பிரதிபலன்களை அடைய வேண்டும் என்றால் சர்வதேச ஒருமைப்பாடு அவசியமாகும். எந்தவொரு நாட்டிற்கும் உலகமயமாக்கலின் மூலம் பாதிப்பானதொரு நிலை ஏற்படாமல் இருக்க வேண்டும் என்றால் சர்வதேச ஒருமைப்பாடு கட்டாய நியந்தனையாக உள்ளது. இதற்கான சிறந்த கொள்கைகளும் நெகிழ்வுத் தன்மைகளும் நாடுகளுக்கு மத்தியில் காணப்பட வேண்டும்.

சர்வதேச தொழிலாளர் அமைப்பினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள 'நீதியானதொரு பூகோளமயமாக்கலுக்கான சமூக நீதிக்கான பிரகடனம்' சமூக நீதிக்கான அர்ப்பணிப்பையே காண்பிக்கிறது. உலகத்திற்குள் சமூக நீதியை பேணிச் செல்ல வேண்டும் என்றால் அதனோடு இணைந்த வகையில் மனித உரிமைகளை தெரிந்து கொள்வதும் அதனை மதிப்பதும் அவஷியமாகிறது. அரசாங்கங்கள் தமது பிரஜைகளுக்கான மனித உரிமைகள் தொடர்பில் கௌரவமான இடங்களை வழங்க வேண்டியதுடன் உலகின் ஏனைய நாடுகளுடன் இணைந்த வகையில் அந்நாடுகளின் மக்களது உரிமைகளை பாதுகாப்பதிலும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியுள்ளது.

# அறிஞர் சித்திலெப்பையின் சுதந்திரத்திற்கான பங்களிப்பு

(அறிஞர் சித்திலெப்பை அவர்களின் 120 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு சித்திலெப்பை ஆய்வு மன்றம் நடாத்திய நிகழ்வில் பேராசியர் ரோஹன லக்ஷ்மன் பியதாஸ ஆற்றிய உரையிலிருந்து...

• பேரா. ரோஹன லக்ஷ்மன் பியதாச
(வெகுஜன ஊடகப் பிரிவு, களனி பல்கலைக்கழகம்)

"சீதன முறை ஒழிக்கப்பட வேண்டும். பணம் படைத்தவர்களுக்கு வட்டிக்கு கோடுப்பது போன்ற சூது நிரம்பிய கோடுக்கல் வாங்கல்களிலிருந்து நமது சமூகம் மீட்டுப் பாதுகாக்கப்பட வேண்டும். ஓர் இனமாக நாம் எழுந்து நிற்பதற்கு சமூகத்தைப் பீடித்திருக்கும் இத்தகைய தளைகளிலிருந்து மீள வேண்டும். அத்தகைய முற்போக்கு சிந்தனைகளுடன் சுதந்திரத்திற்காக மேலெழ முடியுமாக இருக்கும்: சமூகம் முழுதும் பெரும்பான்மையானவர்களிடத்தில் பீடித்திருக்கும் அறிவற்ற தனம் போன்றவற்றிருந்து விடுபடுவதன் மூலமாக முஸ்லிம்களுக்கு ஒரு சமுதாயமாக முன்னோக்கி வர முடியும். அதற்காக நம்மை அர்ப்பணிக்க வேண்டும்."
இது1862 இல் முஸ்லிம் நேசனில் கூறியவை.

19 ஆம் நூற்றாண்டின் முதல் கூறுகளில் ஆங்கிலேயர்கள் முழு இலங்கை யையும் ஆக்கிரமித்தது, அவர்களிடமிருந்த முழுமையான ஆயுத பலப் பிரயோகத்தையும் பிரயோகித்த பின்பேயாகும்.

பிரித்தானியருக்கு முன்பு 1505 இல் இலங்கைக்கு வரும் போர்த்துக்கேயர்களுக்கு கரையோரப் பகுதிகளை ஆக்கிரமிக்க முடிந்தது. சுதந்திரமாக இருந்த தேசத்தையும் ஆக்கிரமிக்க முயற்சித்தார்கள். எட்டு அல்லது ஒன்பது யுத்த முயற்சிகளை முயன்றும் அவர்களால் மலையக இராச்சியத்தை ஆக்கிரமிக்க முடியாமல் போனது. அதன் பின் அதிகாரத்துக்கு வந்த ஒல்லாந்தராலும் கூட பல்வேறு முறைகளில் தாக்குதல்களை மேற்கொண்டும் மலையக தேசத்தை ஆக்கிரமிக்க முடியாமல் போனது. ஆங்கிலேயர்களும் ஆரம்பித்தில் பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டும் அதுவும் முடியாது போனது.

1815 இல் மலையக உடன்படிக்கையின் பின் ஆங்கிலேயர்கள் குறுகிய காலத்தில் முழு இலங்கையையும் ஆக்கிரமித்துக் கொண்டார்கள். இதன் விளைவாக 1818 இல் சுதந்திரத்துக்கான முதலாவது ஆயுத கிளர்ச்சி இடம்பெற்றது. இக்கிளர்ச்சியானது மலையகத்திலே இருந்த தேசாபிமானிகள் மத்தியில், சிங்கள பெரும்பான்மையினர் மத்தியில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் குழுக்களும் இருந்ததாக இலங்கையில் செய்யப்பட்ட ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. சிரேஷ்ட கல்வியியலாலரான தென்னகோன் விமலானந்தவின் ஆய்வினூடாக சிங்கள தேசாபிமானிகளோடு தமிழ், முஸ்லிம் தேசாபிமானிகளும் இணைந்து சுதந்திரத்துக்கென போராடினார்கள் என்பதை நாம் தெரிந்துகொள்ள முடியும்.

மலையக இராச்சியத்தின் கீழே பல்வேறு இனங்களும் ஒருவருக்கொருவர் புரிந்துணர்வுடனும் ஒருவரோடு ஒருவர் இணைந்தும் சமாதான பூர்வமாக நல்லிணக்கத்துடன் வாழ்ந்தனர் என்பதற்கான ஓர் உதாரணம் தான் மலையகத்தின் எசல பெரஹர நிகழ்வுக்கான 'ராஜகாரிய முறை' (தொண்டர் வேலை). இதிலே முஸ்லிம் மக்களும் இணைந்திருந்ததாகவும் தற்போது கண்டி, மீரா மக்காம் பள்ளிவாசல் கிடைக்கப் பெற்றதும் இத்தகைய நல்லிணக்கத்தின் விளைவாகவே ஆகும் எனவும் வரலாறு கூறுகின்றது.

1848 எழுச்சியின் பின் நாம் எழுச்சி பெறுவதற்கு ஆயுத ரீதியில் முயற்சிக்கவில்லை. 19 ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பகுதியில் இந்நாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் இரண்டாவது அத்தியாயம் துவங்குகின்றது. அது ஓர் இயக்கம் மூலமாக பரிணமிக்கிறது. 1818, 1848 களின் ஆயுத எழுச்சிகளின் பின்னரான காலத்தில் மீண்டும் எழுச்சி பெறுவது கலாசாரம் மற்றும் சமூக எழுச்சிகள் வழியாகவே.

உலகிலே காலனித்துவத்துக்கு உட்பட்டிருந்த ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா உள்ளிட்ட எல்லா பிரதேசங்களிலும் காலனித்துவ ஆட்சியாளர்களுக்கு எதிராக அந்த அந்த நாடுகளில் சுதேச மக்கள் கிளர்ந்தெழுந்து தமது நாடுகளில் காலனித்துவ ஆட்சியாளர்கள் அந்த சுதேச மக்களின் கலாசாரம், மொழி, மதம் மற்றும் உரிமைகளை சிதைத்தமையால் வந்த விழிப்புணர்வினாலே ஆகும் என ஆபிரிக்காவைச் சேர்ந்த பிரான்ஸ் பெனன் என்பவர் கூறியிருக்கிறார்.

இந்தப் பண்பானது இலங்கை, இந்தியா உட்பட எல்லா ஆசிய, ஆபிரிக்க நாடுகளுக்குமே பொதுவான பண்பாகும். நாம் இன்று நினைவு கூர்ந்து கொண்டிருக்கும் சித்திலெப்பை அவர்களது பணிகளை நோக்க வேண்டியதும் இப்பின்னணியிலேயே ஆகும்.

இந்நாட்டின் பெரும்பான்மை சிங்கள பௌத்த மக்களுக்குள் அநகாரிக தர்மபால, பியதாச சிறிசேன, ஹிக்கடுவே சிறி சுமங்கள தேரர், மிகெட்டுவத்தே குனாணந்த தேரர் போன்றவர்கள் எந்த வகையில் காலனித்துவ ஆதிக்கக்காரர்களது ஆக்கிரமிப்புக்களால் சிதைக்கப்பட்ட பௌத்த உணர்வு, சிங்கள உணர்வைத் தட்டி யெழுப்ப தமது பேச்சாற்றல், அமைப்பு ரீதியான இயங்கும் மட்டுமன்றி, பத்திரிக்கை நடாத்துதல் மூலமும் ஆற்றலையும் உபயோகப்படுத்தினர்.

சிங்கள பௌத்தயா, உடரட்ட தருணயா, சிங்கள ஜாத்திய, சிங்கள பலய, ருஹுனு ஹண்ட, சரசவி சந்தரச போன்ற பல்வேறு பத்திரிகைகளையும் ஆரம்பித்தது, தூங்கிப் போயிருந்த இந்த சிங்கள சமூகத்தைத் தட்டியெழுப்பவே ஆகும்.

இந்த தேசிய விடுதலைக்கு முக்கியமான அம்சம் எது[illegible]



சிதைத்து விட்ட மதம், மொழி, கலாசாரம், சுதேச பழக்க வழக்கங்கள் போன்றவற்றை மீளக் கையளிப்பதற்கே ஆகும். இதற்கென அவர்கள் வலிமை மிக்க மிஷனரிகளுக்கு எதிராக தீர்க்கமாக போராட வேண்டியிருந்தது. இவற்றுள் முக்கியமான மைல் கல்லாக 1868 இல் இடம்பெற்ற பாணந்துறை விவாதத்தைக் குறிப்பிடலாம்.

இந்த விவாதத்தை இரண்டு மதங்களுக்கு இடையிலான விவாதமாகப் பார்ப்பதை விடவும் காலனித்துவ ஆங்கிலேயர்களுக்கு எதிராக ஒரே அணியில் நின்ற போராட்டமாகப் பார்க்கலாம். மிகெட்டுவத்த குனானந்ததேரர் அணிக்கு மாற்றீடாக பாணந்துறை பள்ளியின் பிரதான மதகுரு நின்றார். அதனை டைம்ஸ் ஒப் சிலோன், இதனை ஜோன் கெப்பர் என்ற எழுத்தாளர் அமெரிக்கா வரைக்கும் எடுத்து சென்றார்.

இதன் மூலமாக கேர்ணல் ஸ்டீல் ஒல்கொட் எனும் அமெரிக்கர் கூட இலங்கையின் தேசிய விவகாரமொன்றில் இணைந்து கொள்ளும் நிலை ஏற்பட்டது. ஒல்கொட் அவர்கள் இந்த நாட்டுக்கு வந்ததோடு இந்த நாட்டின் தேசிய வியாபாரத்துக்கு பாரியதொரு பரிணாமம் கிடைத்தது. அதன் மூலமாக சிங்கள தேசப்பற்றாளர்களில் அநகாரிக தர்மபால போன்றவர்கள் உருவாக வழிசமைத்தது.

இப்போது நான் இலங்கையின் மற்ற பிரதான இனக்குழுவான இந்து சமூகத்தில் உருவான எழுச்சியலைகள் குறித்து குறிப்பிட விரும்புகிறேன். கரையோரமெங்கும் காலனித்துவவாதிகள் கைப்பற்றியதோடு ம்ாத்திரமல்லாமல் அங்கெல்லாம் தேவாலயங்களை அமைத்தனர். அங்கு அவர்களுடைய மதகுருக்களை அழைத்து வந்து தம்முடைய ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்வதற்கு எத்தனித்தார்கள்.

இலங்கையிலே முதன் முறையாக சொந்த மொழியில் பத்திரிகை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது தமிழ் மொழியிலாகும். அதனை 'உதய தாரகை' என்று சொல்வார்கள். அது பதிப்பிக்கப்பட்ட விதம் ஒரு மிஷனரியின் பிரசாரப் பதிப்பாகத் தான். இதன்போது ஆறுமுக நாவலர் போன்றோர் தமிழர்களின் மொழி, பண்பாடு, இந்து உணர்வு போன்றவை மிஷனரிகளால் தாக்குதலுக்கு உட்படுவதை எதிர்த்து பணியாற்றத் தொடங்கியிருந்தனர். இதன் போது இந்தியாவிலே ஏற்பட்டிருந்த தேசிய எழுச்சிகள் மற்றும் விவேகானந்தர் போன்றோரின் சிந்தனைகளின் பாதிப்பு ஆறுமுக நாவலரிடம் இருந்தது.

மிஷனரி முறைமைகளுக்கு எதிராக இந்து பாடசாலைகள், தமிழ்-இந்து கலாசார நிலையங்கள் போன்றவை ஆரம்பிக்கப்பட்டும் உதயபானு, சைவ நீதி போன்ற பத்திரிகைகள் ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்படுவதற்கு அவர் காரணகர்த்தாவாக இருந்தார். தெற்கிலே போன்று வடக்கிலேயும் இவ்வாறுதான் காலனித்துவத்துக்கு எதிரான போராட்டங்கள் ஆரம்பித்தன.

இத்தகையதொரு பின்னணிக் காரணிகள் இருக்கையிலேயே சித்திலெப்பை அவர்கள் [illegible] ஆட்சிக் காலப்பகுதியில் பிறக்கிறார்கள். இலங்கையின் மேற்குப் பிராந்தியத்தின் அளுத்கம பிரதேசத்தை சேர்ந்த அன்னவர்களுடைய தந்தையவர்கள் ஒரு சிறந்த வாழ்க்கைக்காக வேண்டி காலனித்துவப் பகுதிகளை விட்டும் மலையகப் பிரதேசத்துக்கு இடம்பெயர்ந்தார்.

இந்நிலையில் மலையக ராச்சியம் காலனித்துவவாதிகளிடம் வீழ்ந்ததுடன் மிஷனரிகள் மூலமாக தனது கல்வி நடவடிக்கைகளை ஆரம்பித்துச் செல்ல முடியுமாக அவருக்கு இருந்தது. குறைந்த தொகையினருக்கே கிடைக்கும் சலுகைகளோடு முஸ்லிம் சமுதாயத்தின் முதலாவது சட்டத்தரணியாக சித்திலெப்பை அவர்களுக்கு உருவாக முடிந்தது.

தனது திருமணத்தின் பின்பு ஐந்து பிள்ளைகள் கொண்ட அவரது குடும்பத்துக்கு வசிப்பதற்கென உதவத்தையில் மலைகளுக்கு மத்தியில் ரம்மியமான வசதியான வீடும் அமைத்துக் கொள்ள முடியுமாக இருந்தது.

கண்டி நகரின் ஊராட்சி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படும் அன்னவர்கள், அதன் மூலமாக பிரபல்யம் பெறவும் இல்குவாக மக்கள் செல்வாக்குப் பெறவும் முடியுமாக இருந்தது. 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்த நாட்டின் தேசிய போராட்டத்துக்கு விசாலமான பரிமாணமும் சர்வதேச கவனமும் இருந்தது. விசேடமாக இதனை நாம் முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் கண்டுகொள்ள முடியும்.

19 ஆம் நூற்றாண்டில் எகிப்திலே ஆங்கிலேயரின் காலனித்துவத்துக்கு எதிராக செயற்பட்டு இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட ஒறாபி பாஷாவுக்கு இந்நாடு அடுத்த புகலிடமாகியது. 1883 களோடு காலனித்துவத்துக்கு எதிராகப் போராடல், முன்னேற்றம், சுதந்திரம், தன்மானத்தின் முக்கியத்துவத்தை ஒறாபி பாஷா இந்நாட்டு முஸ்லிம்களுக்கு உணர்வூட்டினார். சித்திலெப்பை உட்பட பிரதான முஸ்லிம் தேசப்பற்றாளர்கள் விழிப்புணர்வு பெற்றது இவ்வாறே ஆகும்.

இப்பின்னணியிலே சித்திலெப்பை 1882 இலே 'முஸ்லிம் நேஷன்' என்ற சஞ்சிகையை ஆரம்பித்தார். பின்னர் அது பத்திரிகையாக பரிணாமம் பெற்றது. பின் அது நின்று போக 'ஞான தீபம்' என்ற பத்திரிகையை மீளவும் ஆரம்பித்தார். அவர்கள் இதன் மூலம் மிஷனரி கல்வி முறைக்கு உட்படுகின்ற முஸ்லிம்களது தனித்துவம் கெடுகின்றது என்பதை கண்ணுற்று அவற்றுக்கு மாற்றீடாக முஸ்லிம் பாடசாலைகள் அமைக்கப்படுவதற்கான தலைமைத்துவத்தை வழங்கினார்.

கண்டி முஸ்லிம் வித்தியாலயம் மட்டுமல்லாது, திருகோணமலையிலும் முஸ்லிம் வித்தியாலயங்களை ஆரம்பித்து ஈடு இணையற்ற பங்களிப்பை வழங்கினார். அன்னவர்கள் எழுத்தாளர், அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர் என்பவற்றுக்கு மேலதிகமாக அன்னவர்கள் பிரமிக்கத்தக்க ஒரு நாவலாசிரியர். அக்காலத்தில் காலனித்துவத்துக்கு துதி பாடிய சில முஸ்லிம் தலைவர்களுக்கு மாற்றீடாக காலனித்துவத்துக்கு எதிராக உணர்வூட்டிய தலைவராக அறிஞர் சித்திலெப்பை காணப்படுகிறார். அதற்காக சாதாரண மக்களுக்கும் புரிகின்ற மொழியில் மக்கள் மயப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார். சுதந்திரம் பற்றிய பிரக்ஞையை விதைத்து வந்தார்.

இன்று நாம் 69 வது சுதந்திர தினத்தைக் கொண்டாடிக் கொண்டிருக்கையில் 19ம் நூற்றாண்டிலேயே சுதந்திரத்தைப் பற்றி மக்களுக்கு சொல்லிக் கொடுத்த, உணர்வூட்டிய நூற்றாண்டாக இந்த நூற்றாண்டை நான் காண்கிறேன். தலைவர்களில் முக்கியமானவர்களாக நான் காண்பது அநகாரிக தர்மபால, ஆறுமுக நாவலர், மற்றும் சித்திலெப்பை ஆகியோராவர். அவ்வகையில் இவர்களுக்கென சர்வதேசப் பின்புலத்தை வழங்கியவர்களாக கேர்ணல் ஸ்டீல் ஒல்கொட், சுவாமி விவேகானந்தர் மற்றும் ஒறாபி பாஷா ஆகியோர் காணப்பட்டனர்.

ஒரு மலர்த் தட்டில் இருக்கும் பல்வேறு மலர்கள் போலவே இந்த சமூக மக்களும் நறுமணம் கமழும் சமுதாயமாக மாற வேண்டுமென்பதே இந்த நமது முன்னோடிகள் நம்மிடம் எதிர்பார்க்கும் விடயமாகும்.

தமிழில்: ஸியாப் முஹம்மத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்காணல்: ஹெட்டி ரம்ஸி

# ஹக்கீம் தலைமைக்குப் பொருத்தமில்லை

**பஷீர் சேகுதாவூத்**
முன்னாள் தவிசாளர்,
ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்



- **அண்மையில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளர் பதவியில் இருந்து இடைநிறுத்தப்பட்டீர்கள். அதற்கான காரணங்கள் என்ன?**

1994 முதல் எனது அரசியல் நடவடிக்கைகளின் ஊடகமாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் இருந்தது. கடந்த 04 ஆம் திகதி, என்னை கட்சியின் தவிசாளர் பதவியிலிருந்து தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளார்கள்.

நான் பல வழிமுறைகளில் கட்சியின் மேம்பாட்டிற்குப் பங்களித்துள்ளேன். தலைவர் அஷ்ரபின் காலத்திலும் அதற்கு பிந்திய காலத்திலும் எனது மனச்சாட்சி படி, என்னுடைய அரசியல் புரிதலுக்கமைய கருத்துக்களை வெளியிட்டுள்ளேன். சிலவேளைகளில் அக்கருத்துக்கள் கட்சித் தலைவர்களுக்கு பிடிக்காமல் இருந்தபோதிலும், அவற்றை சொல்வதில் நான் தயங்கவில்லை. குறிப்பாக 2005 முதல் 2010 வரையிலான காலப் பகுதியில் நான் அவ்வகையிலான கருத்துக்களை வெளியிட்டுள்ளேன். 2010 இற்குப் பிறகு கட்சியின் செயற்பாடுகள் தொடர்பில் அதிகமான விமர்சனங்களை முன்வைத்துள்ளேன்.

சிறுபான்மை சமூகத்துக்கென உருவாக்கப்பட்ட கட்சி என்ற அடிப்படையிலிருந்து மாறுகின்ற பொழுது, ஒரு சிறுபான்மை சமூகத்தினுடைய பிரச்சினைகளில் முகங்கொடுப்பதில் அசமந்தம் காட்டுகின்ற பொழுது அவற்றை எனது அரசியல் அனுபவங்களின் அடிப்படையில் எதிர்த்து வந்துள்ளேன். தற்பொழுதும் அவற்றை நிறுத்தவில்லை. தொடர்ந்தும் முன்வைப்பேன்.

- **புதியதொரு அரசியல் கூட்டணியை உருவாக்கப் போவதாக தெரிவித்துள்ளீர்கள். உங்களுடைய எதிர்கால அரசியல் திட்டங்கள் என்ன?**

ஒரு தேர்தல் மூலமாக பதவி என்னும் இலக்கை அடைவதற்கான வாகனமே அரசியல் கட்சி அல்லது கூட்டு முன்னணி என்ற நம்பிக்கை இன்று பெரும்பாலானவர்களிடம் உள்ளது. நான் அப்படிப் பார்க்கவில்லை. முஸ்லிம்களுக்கான கட்சி என்பது ஒரு அரசியல் பாசறையாக (Political Academy) இருக்க வேண்டும். புதிய பரம்பரைக்கு பழைய அனுபவங்களை கொண்டு நிகழ்கால அரசியல் போக்குகளை கற்பிப்பதும் எதிர்காலத்தில் எவ்வாறான நிலைமைக்கு நமது அரசியலும் சமூகத்தின் செயற்பாடுகளும் நகர வேண்டும் என்பது பற்றிய கலந்துரையாடல்களை இளைஞர்களிடம் மேற்கொண்டு அவர்களுக்கு கற்பிப்பதாகவே இனிமேல் உருவாக்கப்படுகின்ற அரசியல் கட்சியின் பணியாக இருக்க வேண்டும்.

தேர்தலில் பங்குபற்றுவதாக இருந்தால், இதுவரை காலமும் தேர்தலில் பங்குபற்றுவதனை மாத்திரம் இலக்காக கொண்டு மக்களை கணக்கில் எடுக்காமல் சொந்த அரசியல் இலாபங்களுக்காய் செயற்பட்டவர்களை அம்பலப்படுத்துவதற்கானதொரு அரங்கமாக தேர்தல் மேடைகளைப் பயன்படுத்துவேன். அவ்வாறானவர்களை தேர்தலில் இருந்து அகற்றி விட்டு, புதியதொரு பரம்பரையை உள்நுழைத்து, வேகமானதும் விவேகமானதுமான சமூகத்துக்கு பாதுகாப்பான அரசியலை மேற்கொள்வதற்குமான தூண்டும் சக்தியாக அவ்வமைப்பினை உருவாக்குவேன்.

முஸ்லிம் சிறுபான்மை மக்களின் அரசியலை காப்பாற்றுவதே எனது பணி. அது காப்பாற்றப்படும் வரையில் எனது போராட்டம் தொடரும். எனது கருத்துக்களை நிறுத்த மாட்டேன். நீங்கள் ஒரு கோட்பாட்டு ரீதியாக செயற்படும் ஒருவராக இருந்தால் அதற்கு சமூகத்தில் பெரிய ஆதரவு கிடைக்காது. ஆனால் ஆதரவு உறுதியாக இருக்கும். தற்பொழுது மக்கள் திரள் அரசியல் கோட்பாடு மேலோங்கியுள்ளது. அதாவது, தலைவர்கள் இல்லாத அரசியல். உலகில் பல நாடுகளில் உள்ளது. அமெரிக்காவில் வோல் ஸ்ட்ரீட் போராட்டம், அரேபிய தேசிய விடுதலைப் போராட்டம், இந்தியாவில் ஜல்லிக்கட்டு போன்றவற்றை அண்மைய உதாரணங்களாகக் குறிப்பிடலாம். மக்கள் திரள் அரசியலும் கூட்டு முன்னணி அரசியலும் ஓங்கி வருகின்ற காலமே இது.

- **கூட்டு முன்னணி உருவாக்கத்திற்கான ஆயத்தங்கள் தற்பொழுது எவ்வாறு உள்ளது?**

அது இரண்டு விடயமாக உள்ளது. ஒன்று, அரசியல் பாசறையாக பதியும் முயற்சிகள் நிறைவடைந்துள்ளன. இரண்டாவது, முஸ்லிம்களுக்கான முஸ்லிம் கட்சிகளை கொண்ட அல்லது வட கிழக்கில் தேசிய கட்சிகளில் உள்ள முன்னை நாள் சிறுபான்மை அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களாக இருந்த எல்லோரையும் இணைத்து ஒரு கூட்டு முன்னணியை உருவாக்கும் வேலைத் திட்டத்தில் இறங்கியுள்ளேன். கொள்கையளவில் அதனை எல்லோரும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். அதனை ஒரு வடிவமைத்து சமூகத்திற்கு அது எவ்வாறு பங்களிக்கப் போகிறது என்பது தொடர்பில் எல்லோரும் ஒன்றிணைந்து ஒரு மேசையில் இருந்து பேச வேண்டும். அது இன்னும் தொடங்கவில்லை. விரைவில் அதனை ஆரம்பிப்போம்.

- **உங்களுடைய கட்சி உறுப்புரிமை நீக்கப்பட்டுள்ளதா?**

இன்னும் இல்லை. ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் யாப்பின் அடிப்படையில் நான் நீக்கப்படுவதற்கான அனைத்து தகுதிகளையும் பெற்றுள்ளேன். இதுவரையில் நீக்கவில்லை.

- **அனைத்து தகுதிகளையும் பெற்றுள்ளீர்கள் என நீங்கள் எதனை சொல்ல வருகிறீர்கள்?**

அரசியலமைப்பில் உள்ளதைப் போன்று எல்லோரும் கட்டுப்பட்டு தலைவருடன் உறைந்து போய் இருக்க வேண்டும் என்பது போன்ற சில விடயங்கள் யாப்பில் சொல்லப்பட்டுள்ளது. அந்த உறை நிலையை தகர்த்து நான் ஒரு திரவ நிலைக்கு அதை கொண்டு வந்துள்ளேன்.

- **முஸ்லிம் காங்கிரஸிற்குள் அண்மையில் இடம் பெற்ற இது போன்ற நிகழ்வுகள் அனைத்தும் உட்கட்சிப் பூசல்களையே வெளிப்படுத்துகின்றன. மு. கா.விற்குள் உண்மையில் இடம்பெற்று வருகின்ற பிரச்சினைகள் என்ன?**

நீண்ட காலமாகவே கட்சிக்குள் பிரச்சினைகள் உள்ளன. ஸ்தாபகத் தலைவர் அஷ்ரப் அவர்களின் மறைவுக்கு பிந்திய உடனடியான கால கட்டத்திலிருந்தே பிரச்சினைகள் தொடர்ந்த வண்ணமுள்ளன. ஒவ்வொரு பிரச்சினைகளினதும் வடிவம் வெவ்வேறானது. எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு ஒரு ஸ்தாபனமயப்படுத்தப்பட்ட செயற்பாட்டிலே இருந்து வந்த சமூகத்தை நாங்கள் வேறு யாரிடமும் அடகு வைக்க முடியாது என்ற அடிப்படையிலேயே நாம் செயற்பட்டோம்.

ஆனால் 2015 ஆம் ஆண்டின் இறுதியில் இடம்பெற்ற யாப்பு மாற்றத்திற்கூடாக ரவூப் ஹக்கீம் என்றொரு தனிநபரின் கம்பனி போல கட்சி மாற்றப்பட்டது. அவராலேயே வலிந்து அக்கட்சி அவரிடம் அடகு வைக்கப்பட்டது. அதனை முறியடிக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்தே பிரச்சினை பெரிதாக மாறியது.

தற்போதைய தலைவர் ரவூப் ஹக்கீம் 2000 முதல் 2005 வரையில் வகித்த பாத்திரத்தை விட அதற்கு பிந்திய காலப்பகுதியில் மிக மோசமானதொரு, மிகவும் பின்னடைவானதொரு பாத்திரத்தை வகித்திருக்கிறார். எனது அனுபவத்தில் கண்டதே இது. அரசியலில் மயக்க மருந்தை அடித்து கிழக்கு மாகாண முஸ்லிம்களை மயக்கத்திலேயே வைத்திருக்கின்ற மாபெரும் பாதகத்தை அவர் செய்துள்ளார். எனவே அவர் தலைவராக இருக்கின்ற அமைப்பினால் எந்தவிதமான அரசியல் அடைவுகளையும் கிழக்கு முஸ்லிம்களுக்கு அடைந்து கொள்ள முடியாது. ஆகவே தலைமைக்கு அவர் பொருத்தமில்லை. இன்னொருவர் வரலாம். அவர் கண்டியிலிருந்தோ அல்லது வேறு பகுதியிலிருந்தோ வரலாம். தலைமை கிழக்கை மையப்படுத்தி அமைய வேண்டும் என்பது அவசியமல்ல.

இன்றிருப்பது மர்ஹூம் அஷ்ரப் உருவாக்கிய முஸ்லிம் காங்கிரஸ் அல்ல. ரவூப் ஹக்கீம் தட்டி, வளைத்து, நேராக்கி வைத்திருக்கின்ற ஒரு வித பாத்திரமே இது. முஸ்லிம் சமூக அபிலாஷைகளை நிறைவேற்றுவதே கட்சியின் இலட்சியமாக இருந்தது. தற்பொழுது ஹக்கீமின் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் கட்சி உள்ளது. வடக்கு கிழக்கு இணைந்தால் அதில் முஸ்லிம்களுக்கு தனியலகு வேண்டும் என்பதே கிழக்கு மாகாண முஸ்லிம்களின் விருப்பம். தனியலகு கிடைப்பதை விட கண்டியில் பாதுகாப்பாக ஐ.தே.க.வில் ஒரு தொகுதி கிடைப்பதே அவருக்கு பெரிய விடயமாக உள்ளது.

தேர்தல் முறை மாற்றம் வருகிறது. அதில் மாவட்ட அடிப்படையிலான தேர்தல் முறையிலேயே முஸ்லிம்களுக்கான பேரம் பேசும் சக்தி வந்தது. தற்பொழுது தொகுதி முறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. பேரம் பேசும் சக்தி போனாலும் பரவாயில்லை தனக்கு கண்டியில் சிங்கள முஸ்லிம் வாக்குகளை பெறக்கூடிய ஒரு தொகுதி கிடைத்தால் போதும் என அவர் நினைக்கிறார். இவ்வகையில் அவர் தனது சுய அரசியல் இலக்குகளை நோக்கி நகர்கிறார்.

- **மு. கா.விற்குள் தலைமைத்துவ மாற்றம் ஏற்பட்டால் எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைத்து விடுமா? அல்லது கட்சியில் வேறு எவ்வாறான மாற்றங்கள் நிகழ வேண்டும் என நீங்கள் கருதுகிறீர்கள்?**

தலைவரே இந்த மோசமான கும்பலுக்கு தலைமை தாங்குகிறார். அதில் மிக நல்லவர்கள் உள்ளார்கள். நான் அவர்களை வெறுக்கவில்லை. மு. கா.வின் யாப்பு தலைவர் அஷ்ரப் அவர்கள் யாத்ததை போல 1998 வரைக்கும் இருந்ததை போன்று அமைய வேண்டும். 1998 இற்கு பின்பிருந்த எல்லாம் மாற்றப்பட வேண்டும். ஆகக் குறைந்தது 2010 ஆம் ஆண்டு யாப்பாவது அமுல் படுத்தப்பட வேண்டும். 2011 பிழையானது. அதனை தொடர்ந்து 2015 இலேயே பாரியதொரு மாற்றம் இடம்பெற்றுள்ளது. எனவே இவையிரண்டு மாற்றங்களும் இல்லாமல் செய்யப்பட்டு, 2010 ஆம் ஆண்டு யாப்பு வந்தால் நாம் இறங்கி வேலை செய்வோம். அப்படியமைந்தால் மாத்திரமே அவர்களுடன் இணைந்து பணியாற்றலாம்.

- **கட்சியின் 2010 ஆம் ஆண்டு யாப்பு குறித்து குறிப்பிடுவதாயின்?**

2010 யாப்பில் 'பொலிட் பியுரோ' என்றும் 'ஹய் கொமாண்ட்' என்றும் இரண்டு அமைப்பிருந்தது. ஹய் கொமாண்ட்டில் 23 பேர் இருந்தார்கள். பொலிட் பியுரோவையும் ஹய் கொமாண்டையும் இணைத்து ஹய் கொமாண்டில் தீர்மானம் எடுக்கும் குழுவினை விஸ்தாரமாக்கினார்கள். முதலில் இருந்த தீர்மானம் எடுக்கின்றவர்களுள் பெரும்பாலானவர்கள் சொந்தக் கருத்தில் நிற்பவர்களாக இருந்தார்கள். சமூகத்தின் பால் அதிக அக்கறை கொண்டவர்களாக இருந்தார்கள்.

சொல்வதைக் கேட்டுக் கொண்டு அல்லது சம்பளம் எடுத்துக் கொண்டு, வேலை செய்து பதவிகளை பெற்றுக் கொண்டு வாய் பிளந்து தலைவருக்கு பின்னால் நின்றவர்கள் அல்ல அவர்கள். அதிலே ஒரு சுயாதீனத் தன்மை காணப்பட்டது. ஆனால் பின்பு ஒருவர் விரும்புவதை நிறைவேற்றிக் கொடுக்கின்ற ஒத்தோடிகள் அதிகரித்து விட்டார்கள். 2010 யாப்பில் அவ்வாறு காணப்படவில்லை.

2010 இற்கு பிந்திய அரசியலமைப்பில் தான் விரும்பியவர்களை அரசியலமைப்பில் 56 பேரை தலைவர் நியமிக்கலாம். மு.கா.வின் யாப்பில் ஒரு கூட்டம் கூட்டுவதற்கு மூன்றில் ஒரு பெரும்பான்மையே வேண்டும். 90 பேரில் மூன்றில் ஒன்று 30. தானே 56 பேரை நியமிக்க முடியும் என்றிருந்தால் இதுவென்ன கார்னிவெல்லா? கார்னிவெல்லில் கூலிக்கு வேலை செய்கின்ற பட்டாளம் போல. எனவே நான் இதனை எதிர்க்கிறேன். இறுதியாக வரையப்பட்ட 2016 ஆம் ஆண்டு யாப்பின் மூலம் அது முழுமையாக கம்பனியின் சட்ட திட்டங்களை போல வந்தது.

- **கட்சிக்குள் இருந்தே தலைமைத்துவத்தை மாற்றுவதற்கான முயற்சிகளை ஏன் கொண்டு வர முடியாது?**

முஸ்லிம் காங்கிரஸின் யாப்பில் பெரும்பான்மை தொடர்பில் குறிப்பிடப்படவில்லை. அங்கு மசூரா பற்றியே குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு நபரை மாற்றுவதில் அர்த்தமில்லை. ஒட்டுமொத்த கொள்கையிலும் மாற்றம் ஏற்பட வேண்டும். கட்சியின் யாப்பில் மசூரா முடிவு பற்றி குறிப்பிடப்பட்டிருந்தும் அதை மீறி செயலாளரை நியமிக்கும் அதிகாரத்தை தலைவர் தன் வசம் பெற்றுள்ளார். யாப்பை மீறியவர் எப்படி தலைவராக இருக்க முடியும். அதியுயர் பீடத்திற்கு அது விளங்க வேண்டும். எந்த முடிவுகளையும் மசூரா அடிப்படையிலேயே எடுக்க வேண்டும் என அழகாக யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வளவு காலமும் செயலாளரை நியமிக்கும் அதிகாரம் அதியுயர் பீடத்திடம் இருந்தது. இதை இவர் எப்படி மாற்றியெழுதுவார்?

(பக்.14)




அபூ ஷாமில்

## மூளைக்காய்ச்சல் நம்மளுக்கு வராது

இலங்கை நாடு சிங்களவர்களால் ஆளப்படுகின்ற ஒரு நாடு என்பதும் அது பௌத்த மதத்துக்கு முன்னுரிமை அளிக்கிறது என்பதும் நாட்டு மக்கள் எல்லோரும் கற்றுக் கொண்ட அகர பாடம். இது ஒரு ஜனநாயக நாடு என்பது பாடசாலை சென்ற எல்லோரும் கற்ற பாடம். ஜனநாயகத்துக்கும் அப்பால் இது ஒரு நல்லாட்சி நடைபெறும் நாடு என்பதுதான் நாட்டு மக்களுக்கு தற்போது சொல்லித் தரப்படும் பாடம்.

இந்த எல்லாப் பாடங்களதும் அடிப்படை நாட்டில் ஜனநாயகம் நிகழ வேண்டும் என்பது. ஜனநாயகம் என்பது மக்களது குரலுக்குச் செவி சாய்க்கின்ற, மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற, மக்கள் பிரதிநிதிகளுக்கு தங்களை ஆளும் அதிகாரத்தை மக்களே வழங்குவது. இந்த ஜனநாயகம் பாதிக்கப்படும்போது மக்களே தாம் தெரிவு செய்த பிரதிநிதிகளை மாற்றுகின்ற சக்திகளாகத் தொழிற்படுவார்கள்.

இஸ்லாம் சொல்லும் ஜனநாயகம் இந்த ஜனநாயகக் கோட்பாட்டுக்கு முரணானதல்ல. ஆனால் இதனை விடச் சிறந்தொரு ஜனநாயகக் கோட்பாட்டை அது உலகுக்கு முன்வைக்கிறது. இந்த ஜனநாயகக் கோட்பாடுகள் எங்காவது நடைமுறையில் இருக்கிறதுவா? அல்லது இது எங்கே நடைமுறையில் இருக்க வேண்டும்? குழந்தைகள் தமது ஆரம்பப் பாடத்தை வீட்டிலேதான் துவங்குகிறது என்பது போல முஸ்லிம் சமூகம் தனது படிப்பினைகளை பள்ளிவாசல்களிலே தான் பெறுகிறது. ஆனால் ஜனநாயகத்தை முஸ்லிம் சமூகம் பயில்வதற்கான இடமாக பள்ளிவாசல்கள் இருக்கின்றனவா?

கால் நூற்றாண்டுகளாக (25 வருடங்களுக்கும் மேலாக) நிர்வாகத் தெரிவுக்கான தேர்தலே நடத்தாத எத்தனையோ பள்ளிவாசல்கள் நாட்டிலே இருக்கின்றன. அதாவது சில பிரதேசங்களில் வாழும் இளைஞர்கள் பள்ளிவாசலில் ஜனநாயகச் செயற்பாடொன்று நடைபெறுவதை தங்களது வாழ்நாளிலேயே கண்டதில்லை. பெரும்பான்மை ஜமாஅத்தினருக்குச் செவிசாய்க்காமல் ஒரு சிறு குழுவினரின் அகம்பாவத்தில் நடத்தப்படும் பள்ளிவாசல்கள் ஏராளமாக இருக்கின்றன.

ஜனநாயகத்தின் அடிப்படைகளையே கழுத்தை நெறித்துக் கொன்று போட்டு குழிதோண்டிப் புதைத்து விட்டு ஆதிக்க வெறியுடன் நிர்வாகம் செய்யும் பள்ளிவாசல்கள் நிறையவே இருக்கின்றன. மாற்றுக் கருத்துடையோரை அடக்கி வைக்கும் சர்வாதிகாரப் பள்ளிவாசல்களும் நமக்குள்ளால் நிறைந்திருக்கின்றன.

இஸ்லாம் சொல்லும் ஜனநாயகமும் நல்லாட்சியும் எப்படிப் போனாலும் நாட்டில் அராஜகம் புரிந்தவர்கள் நடைமுறைப் படுத்திய ஜனநாயகமாவது இஸ்லாத்தின் பெயரில் இயங்கிக் கொண்டிருக்கும் பள்ளிவாசல்களில் இருப்பதில்லை. இந்த வகையில் இந்தப் பள்ளிவாசல் நிர்வாகிகள் இஸ்லாம் சொன்ன ஜனநாயகத்தையும் மதிப்பதில்லை. வக்ப் சட்டத்தை மீறுவதனூடாக நாட்டு சட்டத்தையும் மதிப்பதில்லை. சட்டத்தை மதிக்காமல் காட்டு தர்பார் நடத்துபவர்கள் சமூகத்தில் இஸ்லாத்தை நிலைநாட்டுவார்கள் என்று சமூகம் எப்படி எதிர்பார்ப்பது?

ஆச்சரியத்துக்குரிய விடயம் என்னவென்றால், நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டாதவர்களை மாற்றுவதற்கு முன்னிற்பவர்கள் எல்லாம், தமது நேரடி அதிகார மையத்தில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதை ஒரு கடமையாக எடுத்துச் செய்யாமலிருப்பது தான். இஸ்லாத்துக்கு முரணான முறைமையில் தாங்கள் ஆளப்படுகிறோம் என்பதை உணராத, அதனை மாற்றுவதற்கு முயற்சிக்காத ஒரு சமூகத்தை யூதன் ஆண்டால் என்ன, வழிகெட்ட சிந்தனைகள் ஆண்டால் என்ன? எல்லாமே ஒன்றுதான்.

நாட்டிலே நல்லாட்சியைப் பலப்படுத்துவதற்கு தகவல் அறியும் உரிமை மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. மக்கள் கேள்வி கேட்கும் வகையில் ஊடக சுதந்திரம், கருத்துச் சுதந்திரம், எதிர்த்துப் பேசுவதற்கான சுதந்திரம் என மக்கள் பலப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். குறைந்த பட்சம் தியவன்னா ஓயவின் பாராளுமன்றத்துக்குள்ள அந்தஸ்திலாவது நமது பள்ளிவாசல்கள் இயங்க மாட்டாதா ? அது தப்லீக் பள்ளியாகவோ, தரீக்கா பள்ளியாகவோ, தௌஹீத் பள்ளியாகவோ இருக்கட்டும். ஆனால் ஜனநாயகம் அதில் அதிகாரம் செலுத்தட்டும். குரலற்ற மக்களுக்கும் அது செவி சாய்க்கட்டும். சிறுபான்மையாக உள்ளவர்களை பள்ளிவாசல்களே நசுக்குகின்ற ஒரு சமூகம், எப்படி இந்த நாட்டில் சிறுபான்மையின் உரிமைக்காக போராடுவது?

வாக்காளர்கள் துணிந்தெழாவிட்டால் அராஜகத்தை மாற்ற முடியாது. ஜமாஅத்தார்கள் துணிந்தெழாவிட்டால் பள்ளிவாசலில் இஸ்லாம் சொல்லும் ஜனநாயகத்தை நடைமுறைப்படுத்த முடியாது. முஸ்லிம் சமூகம் இந்த விடயத்தில் முன்வராவிட்டால் முஸ்லிம் சமூகத்துக்கு விடிவு வருவதற்கான வாய்ப்பில்லை.

மர்ஹூம் நியாஸ் மௌலவி சொன்னது போல முஸ்லிம் சமூகத்துக்கு மூளைக்காய்ச்சலே வராது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அமெரிக்க நிர்வாகத்தை சவூதி சாதகமாகவே நோக்குகிறது

**சவூதி வெளிவிவகார அமைச்சர் ஆதில் அல் ஜுபைர்**



ஜெர்மனியின் 'தெர் ஷபெகல்' பத்திரிகை சவூதி வெளிவிவகார அமைச்சர் ஆதில் ஜுபைருடன் மேற்கொண்ட நேர்காணலில் முஸ்லிம்கள் தொடர்பான ட்ரம்புடைய நிலைப்பாடு தொடர்பில் பல கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அப்பேட்டியில் அவர் புதிய அமெரிக்க நிர்வாகத்தை சவூதி அரேபியா சாதகமாகவே நோக்குவதாகவும் முன்பை விடவும் அதிகமாக ஒத்துழைப்புக்களை வழங்குவதற்குத் தாம் தயாராக உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ட்ரம்பையும் அவரது கொள்கைகளையும் ஏனையோர் நோக்குவது போன்று தாம் ஸைப்த்தியக்காரத்தனமானதாக நோக்கவில்லையென்றும் புதிய அமெரிக்க நிர்வாகமானது விஷேடமானதொரு அரசியல் கருத்தியலின் படி பயணிக்கத் துவங்கியுள்ளதாகவும் அது முஸ்லிம்களைப் பிரத்தியேகமாக தாக்குவதல்ல என்பதாகவே தாம் நோக்குவதாகவும் இப்பேட்டியில் அவர் தெரிவித்துள்ளார். அவ்வகையில் அமெரிக்க வெளிவிவகார அமைச்சு, மத்திய உளவுப் பணியக (CIA) பணிப்பாளர் ஆகியோரைப் பாராட்டுவதாகவும் கருத்துக் கூறியுள்ளார்.

ஜுபைரின் கருத்தின்படி ஐசிஸ் அமைப்பு மற்றும் ஈரானுக்கு எதிரான பொருளாதாரத் தடை நடவடிக்கைகளில் வாஷிங்டன், ரியாதுக்கு இடையிலான பரஸ்பர ஒத்துழைப்பு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பை மேற்குலகில் தடை செய்யப் போவதாகவும் அறிவித்துள்ள ட்ரம்ப் நிர்வாகத்தை எதிர்கொள்ள தாம் தயார் என்று அவ்வியக்கத்தினர் அறிவித்துள்ளனர். தாம் நடுநிலையான மிதவாதப் போக்குடைய அமைப்பினர் என்பதை மேற்குலகு நன்கறியும் என்பதை அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனினும், நடைமுறையிலுள்ள இனவாத அரசுகள் இவற்றை மீறிச் செயற்பட முயற்சிப்பதாகவும், மேற்கிலுள்ள நாகரிகமான முற்போக்கு மக்கள் சக்திகளுடன் தாம் தொடர்ந்தும் உரையாடல்களில் ஈடுபட்டுவருவதாகவும், அவ்வமைப்பின் பேச்சாளர் தலஅத் பஹ்மி, அல் மிஸ்ரிய்யூன் இணையத் தளத்துக்குத் சுட்டிக்காட்டியுள்ளார்.

முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பு ஸுன்னி முஸ்லிம் உலகில் பெரும்பான்மை அங்கீகாரம் பெற்ற மக்கள் இயக்கம் என்பது குறிப்பிடத்தக்கது.

# சர்வதேசப் பார்வை

# அர்துாகானின் வளைகுடா விஜயத்தில் யூ.ஏ.ஈ. புறக்கணிப்பு



துருக்கியுடனான மூலோபாய ஒத்துழைப்புக்களை மேம்படுத்திக் கொள்ளும் பொருட்டு கடந்த வாரங்களில் துருக்கிய அதிபர் ரஜப் தய்யிப் அர்துகான் மத்திய கிழக்குக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

பஹ்ரைன், சவூதி அரேபியா, கத்தார் ஆகிய நாடுகளை உள்ளடக்கிய இவ் விஜயத்தில் ஐக்கிய அரபு அமீரகம் தவிர்க்கப்பட்டமை மத்திய கிழக்கு அரசியல் அவதானிகளின் கவனத்தை ஈர்த்துள்ளது.

இது தொடர்பில் இரு தரப்பும் சந்திப்பதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகள் கடைசி நேரத்தில் கைகூடவில்லை எனக் கூறப்படுகிறது. கடந்த 2013 ஆம் ஆண்டு எகிப்தின் மக்களால் தேர்வு செய்யப்பட்ட அதிபர் கலாநிதி முஹம்மத் முர்ஸிக்கு எதிரான இராணுவ சதிப்புரட்சிக்கு ஆதரவான நிலைப்பாட்டை கலீபா அல் நாஹியானின் அரசு எடுத்ததிலிருந்து இருதரப்பு உறவுகளும் சுமுகமாக இல்லை என்பது கவனிக்கத்தக்கது.

எனினும் கடந்த ஆண்டின் இறுதியில் துருக்கிய வெளிவிவகார அமைச்சர் மவ்லுத் ஷவிஷ் ஒக்லு மற்றும் அமீரக வெளிவிவகார அமைச்சர் அப்துல்லாஹ் பின் ஸாயித் ஆகியோர் மேற்கொண்ட பரஸ்பர விஜயங்கள், பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து இரு தரப்பு உறவுகளைச் சீராக்குவது குறித்தும், பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் முதலீட்டு ஒப்பந்தங்களை மேற்கொள்வது குறித்தும் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஆப்கானில் சிவிலியன்களைக் கொல்லும் அமெரிக்க அரசியல்:



அமெரிக்காவில் புதிய ஜனாதிபதி பதவியேற்றதைத் தொடர்ந்து வந்துள்ள கடந்த ஒரு மாத காலப்பகுதிக்குள் ஆப்கானில் பல்வேறு பிராந்தியங்களிலும் சிவிலியன்களை இலக்கு வைத்துக் கொலைசெய்யும் தாக்குதல் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

ட்ரம்ப் பதவியேற்றுள்ள காலப்பகுதியின் பின்னர் 'தாலிபான்' அமைப்பினரது நடவடிக்கைகளுக்குப் பதிலடியாக சிவிலியன்கள் மீது கொடூர மிலேச்சத்தனம் மிகு தாக்குதல்கள் பல இடம்பெற்றுள்ளதோடு, சிவிலியன்களை அவர்களது வீடுகளை நிர்மூலமாக்கி அங்கிருந்து துரத்தும் நடவடிக்கைகள் பலவும் இடம்பெற்றுள்ளன. பல போது அப்பாவி மக்கள் தாம் எதற்காகத் தாக்கப்படுகிறோம் என்று அறியாமலேயே இவை நிகழ்கின்றன.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த பிரபல அரசியல் பகுப்பாய்வாளர் அஹ்மத் ஸுல்தான் ''இது தாலிபானுக்குத் தகவல் தெரிவிப்போர்' எனக் குற்றஞ் சாட்டப்படுபவர்களை அச்சுறுத்திப் பணிய வைக்கும் செயற்பாடாகும். உண்மையில் இந்த சிவிலியன்கள் அப்பாவிகள் அன்றி வேறில்லை. தாலிபான்களிடமிருந்து தொடர் தாக்குதல்களை முகங்கொடுத்து வரும் அமெரிக்க இராணுவத்தினர் தோல்வி முகத்துடன் சிவிலியன்களைப் பழிவாங்குகின்றனர்'' எனக் கடுமையாகக் குற்றம் சாட்டினார்.

பதிவு செய்யப்பட்ட இரண்டு நாட்களில் மாத்திரம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் 50 க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டும் 150 க்கும் அதிகமானவர்கள் காயமுற்ற நிகழ்வுகளும் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இவர்களில் அநேகமானவர்கள் பெண்களும் குழந்தைகளுமாவர். இவை அமெரிக்க நிர்வாகத்தைப் புதிதாகப் பொறுப்பேற்றிருக்கும் ட்ரம்பின் நிர்வாகத்தின் மாறிவரும் அடக்குமுறை எண்ணம் கொண்ட உளவியலைப் பிரதிபலிக்கின்றதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

# புதிய அரசியல் யாப்புக்குள் நுழைகிறது துருக்கி:



கடந்த ஞாயிறு (19) அன்று பொது மக்கள் மத்தியில் பேசிய அர்துகான் 'வரும் ஏப்ரல் 16 ஆம் திகதி துருக்கி மீளவும் பிறக்கிறது' என மக்களது பெரும் ஆரவாரங்களுக்கு மத்தியில் அறிவித்தார். வரும் ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதியன்று இடம்பெறவுள்ள புதிய அரசியலமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுவதற்கான சர்வஜன வாக்கெடுப்பு நடைபெறுவதனையே அர்துகான் இவ்வாறு 'மீள்பிறப்பு' என வர்ணித்தார்.

காஸியான்ரிப் உட்பட தென்கிழக்கு மாகாணங்களில் இடம்பெறும் பாரிய உட்கட்டமைப்பு அபிவிருத்திகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வுகளின் போதே இதனைக் குறிப்பிட்டார். அறிமுகம் செய்யப்படும் புதிய அரசியல் யாப்பானது துருக்கியின் ஜனநாயகத்திற்கு நன்மைகளை தந்து மேலும் பலப்படுத்துமெனவும் அவர் உறுதியளித்தார்.

'ஏப்ரல் 16 என்பது ஒரு மீள் பிறப்பு. இது ஒரு புதிய அடைவாக இருக்கும். அதுவே எழுச்சியின் அடையாளமாக இருக்கும். இதன் வெளியீடுகளாக உங்களை நம்பாதவர்கள் வெட்கித் தலைகுனியக் கூடிய விளைவுகள் இருக்கும்' என அர்துகான் அங்கு கூறினார்.

சீர்திருத்தப்பட்ட அரசியலமைப்பின் படி 2014 ஆம் ஆண்டு துருக்கி ஜனாதிபதியாக அர்துகான் பொறுப்பேற்றதிலிருந்து புதிய யாப்பு பல்வேறு கட்டங்களில் உத்தியோகபூர்வமாக கலந்துரையாடல் செய்யப்பட்டு வருகின்றது. அர்துகான் முன்னெடுக்கும் புதிய அரசியல் யாப்பு அறிமுகத்துக்கு சாதகமாகவும் பாதகமாகவும் பல கருத்துக்களும் விமர்சினங்களும் முன்வைக்கப்பட்டு வருவது அவதானிக்கத்தக்கது.

சர்வஜன வாக்கெடுப்புக்கு விட உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய அரசியல் யாப்பிலே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை அறிமுகப்படுத்தப்படுவதுடன் பிரதமர் முறை ஒழிக்கப்படவுள்ளது.

# எலொர் அஸாரியாவுக்கு 18 மாத சிறைத் தண்டனை



ஆக்கிரமிப்பு இஸ்ரேல் படைவீரரொருவருக்கு அப்பாவி பலஸ்தீனர் ஒருவரைக் கொலை செய்த குற்றத்துக்காக 18 மாத சிறைத் தண்டனையை இஸ்ரேல் இராணுவ நீதிமன்று விதித்துள்ளது. டெல் அவிவில் அமைந்துள்ள இராணுவ நீதிமன்றின் நீதிபதி மாயா ஹெல்லர் கடந்த செவ்வாயன்று இத்தீர்ப்பை வழங்கினார்.

இதன் போது பலர் இத்தீர்ப்புக்கு எதிர்ப்பு தெரிவித்தும் இஸ்ரேலிய சிப்பாயான எலோர் அஸாரியாவை ஆதரித்தும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். அப்துல் பத்தாஹ் அல் ஷரீப் என்ற பலஸ்தீனியரை நிராயுதபாணியாகிய நிலையில் கொன்ற குற்றச்சாட்டுக்கு இலக்காகியிருந்த அஸாரியாவுக்கு குறைந்தபட்சம் 3-5 ஆண்டுகளிலிருந்து இருபது ஆண்டுகள் வரைக்கும் சிறைத் தண்டனை கிடைக்குமென அரசியல் அவதானிகள் எதிர்பார்த்திருந்தனர். அதேவேளை இத் தண்டனையானது பலஸ்தீனுக்கு எவ்வித நீதியையும் பெற்றுத்தர மாட்டாது என பலஸ்தீனத் தலைவர்களும் மனித உரிமை அமைப்புக்களும் கருத்துத் தெரிவித்துள்ளன.

# 'இஸ்லாமோபோபியா' மேற்குலகின் உளவியல் நெருக்கடி

மேற்குலகில் கட்டம் கட்டமாக இஸ்லாம் மீதான வெறுப்புணர்வும் அச்சவுணர்வும் இருந்ததை விடவும் திட்டமிடப்பட்டு அதிகரிக்கப்பட்டு வருவதை நிகழ்வுகளை அவதானிக்கும் எவரும் அறிந்துகொள்ளலாம்.

எனினும் தற்போது முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் இந்த யுத்தம், வெள்ளை இன மேலாதிக்க உணர்வாக ஏனைய நம்பிக்கைகள் கொண்ட சமூகங்கள் மீதும் [illegible] என சமூகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர். மேற்குலகில் இஸ்லாம் மீது நாளாந்தம் படியச் செய்யப்படும் வெறுப்பு மற்றும் அச்சம் காரணமாக முஸ்லிம் தனிநபர்கள், நிறுவனங்கள் மற்றும் பல அறக்கட்டளைகளும் இயக்கங்களும் தாக்குதல்கள் பலவற்றுக்கு முகங்கொடுத்து வருகின்றன.

பொது இடங்களில் தெருவில் பார்த்து [illegible] வரும் முஸ்லிம்கள் வசைச் சொல் [illegible] சாதாரண அம்சமாக மேற்குலகில் மாறியுள்ளது. அதேவேளை உடல் ரீதியான தாக்குதல்களையும் அவர்கள் கணிசமாக எதிர்கொள்கின்றனர்.




இதேவேளை அமெரிக்காவில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின்படி அமெரிக்கர்களில் பெருமளவு தொகையினர் இஸ்லாத்தை மதமாக அன்றி 'அரசியல் சித்தாந்தமாக'வே நோக்குவதாக வாஷிங்டன் போஸ்ட் இணையம் தகவல் வெளியிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதிக்கப் போருக்கு பெரும் விலை கொடுக்கும் காஷ்மீர் குழந்தைகள்

• றவூப் ஸெய்ன்



போருக்கு உலகெங்கும் பெரிய விலை கொடுப்பவர்கள் குழந்தைகள்தான். மொட்டில் அவர்களை கருகிச் சாம்பலாக்கும் யுத்தங்கள் உலகம் முழுவதும் பல்வேறு வடிவங்களில் நிகழ்ந்த வண்ணமுள்ளன. 10 நிமிடங்களுக்கு ஒரு குழந்தை யெமனில் பட்டினியால் இறக்கின்றது. எதியோப்பியாவிலும் சோமாலியாவிலும் போர், வறுமை, பட்டினி என்பவற்றால் நாளாந்தம் இறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை கணிப்பிற்கு அப்பாற்பட்டது.

சிரியாவில் போரினால் பாதிக்கப்பட்டவர்களில் 30 விழுக்காட்டினர் குழந்தைகள். இலட்சக் கணக்கான குழந்தைகள் ஈராக்கின் முக்கிய நகரங்களில் பிச்சை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். ஆப்கானிஸ்தான், லிபியா என குழந்தைகள் போருக்கு விலை கொடுக்கும் நாடுகளின் பட்டியல் நீள்கின்றது. இப்போது காஷ்மீர் குழந்தைகள் பற்றிய செய்திகள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

1987 இல் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு எதிராக வெகுண்டெழுந்த மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் காஷ்மீரில் ஆயுத வடிவம் பெற்றது. ஆயுதப் போரைக் குழப்பும் வகையில் இந்திய, பாகிஸ்தான் அரசுகளால் பாரா இராணுவக் குழுக்கள் களத்தில் இறக்கப்பட்டன. ஜம்மு காஷ்மீர் பள்ளத்தாக்கு போர்க்களனாய் மாற்றப்பட்டது.

உலகிலேயே மிக அடர்த்தியாகவும் செறிவாகவும் ஆக்கிரமிப்பு இராணுவம் குவிக்கப்பட்டுள்ள பிராந்தியம் காஷ்மீர் பள்ளத்தாக்கே. அங்கு 17 காஷ்மீரியர்களுக்கு ஒரு இந்திய இராணுவம் என்ற வகையில் இந்தியாவின் ஆளும் வர்க்கம் தனது இராணுவத்தை நிலைநிறுத்தியுள்ளது.

பதட்டம் திட்டமிட்டு உருவாக்கப்படுகின்றது. தொடர்ந்து ஊரடங்கு நடைமுறை அமுலுக்கு வருகின்றது. சுற்றிவளைத்தல், இளைஞர்கள் பெண்களைக் கைதுசெய்தல், கடத்திச் செல்லல், தடுப்புக் காவலில் வைத்தல் என்றவாறு ஆக்கிரமிப்பு இராணுவத்தின் வன்கொடுமைகள் சகிக்க முடியாத வடிவங்களில் அரங்கேறுகின்றன.

இந்திய இராணுவம் விரித்துள்ள இரும்புத் திரைக்குப் பின்னால் நிகழும் இந்த கர்ண கொடூரங்களுக்கு ஆகப் பெரிய விலை கொடுப்பவர்கள் குழந்தைகளும் பெண்களும்தான். இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளினதும் குருட்டுத் தேசிய வாதமும், மானப் பிரச்சினையும் காஷ்மீரியர்களை பலிகொண்டு வருகின்றது.


பசும் கம்பளம் போர்த்திய மலை முகடுகளில் உருகி வடியும் பனிப் பாறைகளிடையே கம்பீரமாய்க் காட்சியளிக்கும் பச்சைப் பசேல் என்ற புல்வெளிகளில் குழந்தைகளின் இரத்தம் தோய்ந்த உடல்கள் சிதறிக் கிடக்கின்றன. அவை ஒவ்வொரு கணமும் நேருவின் வஞ்சகத்தையும் இன்றைய மோடியின் மோசடித் தனத்தையும் பறைசாற்றிக் கொண்டே இருக்கின்றது.

தேச பக்தி என்ற குருட்டு மந்திரத்தைப் பாடிக் கொண்டே ஒரு மக்கள் திரள் மூன்று தசாப்தங்களாக வேட்டையாடப்படும் துயர வரலாறு ஜம்மு காஷ்மீரில் நீள்கின்றது. காஷ்மீரியர்கள் கண்ணீரில் மூழ்கிக் கிடக்கின்றனர். அவர்களில் குழந்தைகளின் நிலமைகள்தான் மிகவும் சோகமானது.

ஸாபிர் அஹ்மத் 6 வயதாக இருந்த போது இந்திய இராணுவத்தின் ஷெல் தாக்குதலில் இடது காலை இழந்தான். இப்போது அவனுக்கு 14 வயது. அந்தத் தாக்குதலில் 9 வயதான அவனது மூத்த சகோதரன் உயிரிழந்து விட்டான். அவனது தந்தையோ ஒரு கூலித் தொழிலாளி. சூத்திபுரா எனும் கிராமத்தில் 8 ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த இந்தக் கதை இன்னும் தொடர்வதுதான் சோகமானது.

இந்திய இராணுவம் பொறுப் புணர்ச்சியற்ற வகையில் சிவிலியன்கள் வாழும் பிரதேசங்களை நோக்கி ஷெல் வீசுவது வழக்கம். அதில் குழந்தைகள் கொல்லப்படுகின்றனரா? கிளர்ச்சியாளர்கள் கொல்லப்படுகின்றனரா என்ற அக்கறை அவர்களுக்கு இல்லை என்கிறார் ஸாபிரின் தந்தை யூஸுப் ஷேக்.

இராணுவ முகாம்களுக்கு வெளியே கொட்டப்படும் குப்பைகளோடு வெடிபொருட்களும் குண்டுகளும் வந்து விழுகின்றன.



குழந்தைகள் நடமாடும் இடங்களில் அவை வெடித்துச் சிதறுகின்றன. இதன் மூலம் பெருமளவு குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளன. ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு எதிரான ஆயுதக் கிளர்ச்சி 1987 இல் தொடங்கியது. கடந்த 3 தசாப்தங்களாக இரு தரப்புக்கும் இடையில் இடம்பெறும் குறுக்குச் சமரில் (Cross Fire) சிக்குண்டு இறப்பவர்களில் குழந்தைகள்தான் அதிகம்.

காஷ்மீரிலுள்ள இந்திய-பாகிஸ்தான் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டில் மட்டுமன்றி, சிவிலியன்கள் நடமாடும் நிலங்களில் எல்லாம் கன்னிகள் புதைக்கப்பட்டுள்ளன. இதுவரை கொல்லப்பட்ட ஒரு லட்சத்திற்கும் அதிகமான காஷ்மீரியர்களில் 30 வீதத்திற்கும் அதிகமானவர்கள் குழந்தைகள் என்பதுதான் மிகுந்த கவலைக்கிடமானது. தவிரவும் உடல் ஊனமுற்ற குழந்தைகள், பிறப்பிலேயே உருச் சிதைக்கப்பட்ட குழந்தைகள், உறுப்புக்களை இழந்தவர்கள், ஊமையானவர்கள், உள வடுவினால் பாதிக்கப்பட்டு வாழ்நாள் நீடித்த உளப் பாதிப்பை எதிர்கொண்டவர்கள் என காஷ்மீர் குழந்தைகளின் உலகம் இருண்டு கிடக்கின்றது.

பாரிஸை தளமாகக் கொண்ட சர்வதேச மாற்றுத் திறனாளிகள் நிலையம் (Handicap International) கடந்த 30 ஆண்டு கால இடைவெளியில் 25,000 குழந்தைகள் போரின் பல்வேறுபட்ட வடிவங்களால் கொலையுண்டு போயுள்ளனர் என்கிறது. ஷெல் வீச்சுத் தாக்குதலுக்குப் பலியாகும் குழந்தைகளின் எண்ணிக்கை சற்று உயர்வானது. குழந்தைகள் பரிதாபமாக இறப்பதற்குக் காரணமாய் இருக்கும் அடுத்த அம்சம் கன்னிவெடிகள்தான்.

காஷ்மீரிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளைப் படித்தால், கடந்த 2 ஆண்டுகளில் மாத்திரம் 30 குழந்தைகள் இந்தப் போரினால் உயிரிழந்துள்ளனர். 17 பேர் அதிர்ச்சியினால் ஊமையாகியுள்ளனர் என்கிறது அந்த நிறுவனம்.

ஜம்மு காஷ்மீரில் இயங்கும் சிவில் சமூக நிறுவனங்களின் கூட்டமைப்பு (Coalition of Civil Society) தலைவர் குர்ரம் பர்விஷ் இந்திய இராணுவம், முகாம்களைச் சூழவுள்ள சிவிலியன்கள் வாழும் பகுதிகளை கவனமாகக் கண்காணிக்க வேண்டும். வெடிபொருட்கள், நிலக் கன்னிகள் என்பவற்றின் மூலம் குழந்தைகளும் பெண்களும் அநியாயமாக தமது உயிர்களை மாய்த்துக் கொள்ளும் நிலை பள்ளத்தாக்கின் பல பிரதேசங்களிலும் உள்ளது. இராணுவம் எந்தப் பொறுப்புணர்ச்சியுமின்றி சிவிலியன்களின் உயிர்களை மதிக்காத நிலையே நீடிக்கின்றது.

ஏற்கனவே இராணுவம் கண்மூடித்தனமாக மேற்கொண்ட தாக்குதலில் ஸாபிர் அஹ்மத் இடது காலை இழந்தான். அவனது சகோதரன் இறந்து போனான். ஆனால், இந்திய அரசு அக்குடும்பத்திற்கு நஷ்டஈடாக வழங்கிய தொகை வெறும் 75,000 ரூபாய்தான். ஜனநாயகத்தை கேலிக்கூத்தாக்கும் இந்திய அரசாங்கம் இராணுவத்திற்கு வழங்கியுள்ள சிறப்பதிகாரம் மீளப் பெறப்பட வேண்டும். தவறினால் காஷ்மீரியர்களிடையே குழந்தைகள் உயிர் பிழைப்பது சாத்தியமில்லாமல் போய்விடும் என்கிறார் குர்ரம் பர்விஷ்

51 வயதான குல்ஸார் மிர், குப்வாரா மாவட்டத்தில் வர்சூம் எனும் கிராமத்தில் வசிக்கின்றார். நிலக் கன்னியினால் 2 கால்களையும் இழந்து இந்திய இராணுவத்திற்கு எதிராக அவர் தாக்கல் செய்த வழக்கில் வெற்றி பெற்ற ஒரேயொரு காஷ்மீரியர் இவர் மட்டும்தான். ஆனால், அவருக்கு 6 பெண் குழந்தைகள், 3 ஆண் குழந்தைகள். அவர்கள் நாதியற்று நடுத்தெருவில் நிற்பதற்கு இந்திய இராணுவம்தான் காரணமானது. அவர்களின் உடைந்து போன கனவை இனி சரிப்படுத்த முடியாது. ஏமாற்றத்துடனும் ஏக்கப் பெருமூச்சுடனும் காலம் கழிக்கும் குல்ஸாரின் குடும்பத்திற்கு இந்த அரசு வழங்கிய நஷ்டஈடு யானைப் பசிக்கு சோளப் பொரி கொடுத்த கதையே.

ஒரு காலத்தில் ஜம்மு காஷ்மீர் பூலோக சொர்க்கம் எனக் கருதப்பட்டது. அப்பிள் தோட்டங்களும் ஆரஞ்சு மரங்களும் அங்கு அணிவகுத்து நின்றன. இன்று இந்த பூலோக சொர்க்கம் மனித உயிர்களைக் காவுகொள்ளும் நரகமாக மாற்றப்பட்டுள்ளது. குழந்தைகளும் இளைஞர்களும் பெண்களும் திட்டமிட்டுக் கொல்லப்படுகின்றனர். பாகிஸ்தானும் இந்தியாவும் ஈடுபட்ட மூன்று போர்களுக்கும் ஒப்பீட்டு ரீதியில் பெரிய விலை கொடுத்தவர்கள் காஷ்மீர் குழந்தைகளே.

காஷ்மீர் ஒரு நிலம் குறித்த பிரச்சினை என்பதைக் காட்டிலும் கூடுதல் முக்கியத்துவம் கொண்டது. அது தேசிய கௌரவம் தொடர்புள்ள ஒரு விடயம். அல்லது இந்தியாவின் மதச்சார்பின்மைக்கு ஒரு அச்சுறுத்தல் என்ற கூடுதல் அம்சம் கொண்டது. காஷ்மீரில் நடந்து வரும் மனிதப் படுகொலைகள் குறித்து இந்தியா எந்த உணர்ச்சியும் காட்டாத நிலை நீடித்தால் இந்தியா ஒரு பண்பட்ட நாடு என்ற இருப்புக்கே அது பேரச்சுறுத்தலாக மாறிவிடும்.

## பொஸ்பரஸ் கரையினிலே...

### துருக்கியின் வீழ்ச்சியும் எழுச்சியும் - 13

1909ம் ஆண்டு ஆட்சிக்கு எதிராக செயல்பட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் மீண்டும் இராணுவ நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டார். நீதிமன்ற வாசலில் 15 பேர் தூக்கிலிடப்பட்ட காட்சி அவருக்குக் காண்பிக்கப்பட்டது. அவர்களைக் கண்டு நூர்ஸி அஞ்சுவார் என்றே அதிகாரிகள் அவ்வாறு செய்தனர். பிரதம நீதிபதி குர்ஷித் பாஷா கூண்டில் நிறுத்தப்பட்டிருந்த நூர்ஸியை நோக்கி பின்வருமாறு கூறினார்.

''ஷரீஆவை நடைமுறைப்படுத்த வேண்டும் எனக் குரல் கொடுப்பவர்களில் நீரும் ஒருவர் அல்லவா? இந்தக் கோஷத்தை எழுப்புகின்றவர்கள் இவ்வாறுதான் தூக்கிலிடப்படுவார்கள்'' என அவரது கையால் தூக்கிலிடப்பட்டவர்களைச் சுட்டிக் காட்டினார்.

அதனைக் கேட்ட பதிஉஸ் ஸமான் எழுந்து நின்றார். ''எனக்கு ஆயிரம் உயிர்கள் இருந்தாலும் அவை அனைத்தையும் ஒரு சத்தியத்திற்காக அர்ப்பணிக்கத் தயங்க மாட்டேன். அந்த சத்தியமே இஸ்லாம். நான் அறிவைத் தேடும் ஒரு மாணவன். எனவே, நான் அனைத்தையும் ஷரீஆ எனும் தராசில் வைத்து எடை போட்டு நோக்குவேன். நான் இஸ்லாமியக் கோட்பாட்டைத் தவிர எதனையும் ஏற்றுக் கொள்ள மாட்டேன். நான் ஒன்றை உங்களுக்கு மிக உறுதியாகக் கூற விரும்புகின்றேன். மறுமைப் பயணத்திற்காக மிக ஆர்வத்தோடும் வேட்கையோடும் காத்திருக்கின்றேன். இங்கு தூக்கில் தொங்கும் தியாகிகளுடன் பயணம் செய்ய நான் தயாராக உள்ளேன்.'' இதைக் கேட்ட நீதிபதி, நூர்ஸி நிரபராதி என்று தீர்ப்பளித்து அவரை விடுதலை செய்தார்.

பதிஉஸ் ஸமான் நூர்ஸி துருக்கியின் பல்வேறு பகுதிகளுக்குப் பயணம் சென்று இஸ்லாமிய சொற்பொழிவுகளை ஆற்றி வந்தார். 1910 இல் துருக்கியில் குர்திஷ் மக்கள் வாழும் பகுதிகளுக்குச் சென்று அவர்களுக்கு இஸ்லாம் பற்றிய அறிவூட்டினார். 1911 இல் டமஸ்கஸுக்கு பயணமான நூர்ஸி, உமையாப் பள்ளியில் உரையாற்றினார். அவ்வுரை 'அஷ் ஷாபிய்யா' எனப் புகழ்பெற்றது. அதில் முஸ்லிம்களைப் பீடித்துள்ள நோய்களையும் அதற்கான ஆன்மீக நிவாரணங்களையும் அவர் எடுத்துரைத்தார். துருக்கியின் இறைமை பாதுகாப்பு என்பவற்றிலும் நூர்ஸி கண்ணும் கருத்துமாக இருந்தார்.

1912 இல் ரஷ்யப் படைகள் அர்ளு ரூம் எனும் துருக்கியப் பிரதேசத்திற்குள் ஊடுருவியபோது நூர்ஸியும் அவரது மாணவர்களும் ரஷ்யப் படையை எதிர்த்துப் போராடினர். அப்போரில் நூர்ஸி காயமடைந்தார். தப்பிச் செல்ல முடியாத வகையில் புடைசூழப்பட்ட நூர்ஸியை ரஷ்யப் படையினர் இழுத்துச் சென்று சிறையிட்டனர். இரண்டு வருடமும் நான்கு மாதங்களும் சிறை வாழ்வை அனுபவித்த பின்னர் ரஷ்யாவில் ஏற்பட்ட போல்ஷவிக் புரட்சியின் பொழுது நூர்ஸி சிறையிலிருந்து தப்பிச் சென்றார்.

அவர் சிறைவாசம் அனுபவித்த காலத்தில் ரஷ்ய மன்னரையும் இராணுவத்தையும் அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். ஒரு தடவை ரஷ்ய மன்னனின் மாமனாரும் ரஷ்யப் படையின் பிரதம தளபதியுமான நிக்கலோ நிகோபிச் சிறைக் கைதிகளை பார்வையிடச் சென்றிருந்தார். அப்போது ஸஈத் நூர்ஸியைத் தவிர அனைவரும் அவருக்கு எழுந்து நின்று மரியாதை செய்தனர். இதனை அவதானித்த தளபதி, அவர் எழுந்த நிற்க வேண்டும் என்ற எதிர்பார்ப்போடு இரண்டாவது தடவையாகவும் நூர்ஸியை கடந்து சென்றார். ஆனால், நூர்ஸி இத்தடவையும் எழுந்து நிற்கவில்லை.

நீதிமன்ற விசாரணையின் பின்னர் தூக்குத் தண்டனை தீர்ப்பாகியது. அவரைத் தூக்கிலிட குறித்த நாளன்று பிரதம தளபதியும் ஏனைய படை வீரர்களும் அங்கு வந்தனர். மேடையை நெருங்கியபோது நூர்ஸி அமைதியான புன்னகையுடன் ரஷ்ய இராணுவ அதிகாரிகளை நோக்கி புன்சிரிப்புடன் அவரது இறுதிக் கடமையை நிறைவேற்ற சிறிது அவகாசம் கேட்டார். அவகாசம் வழங்கப்பட்டது. அவர் வுழூ செய்துகொண்டு இரண்டு ரக்அத்துக்கள் தொழுதார். தொழுகை முடிந்ததும் அவரை நோக்கிய இராணுவ அதிகாரி, உங்களிடம் நான் மன்னிப்புக் கோருகின்றேன். நீர் எனக்கு எழுந்து நின்று மரியாதை செலுத்தாதது என்னை அவமதிப்பதற்காகவே என நான் எண்ணினேன். ஆனால், நீர் உமது விசுவாசக் கோட்பாட்டிற்கு ஏற்பவே அப்படி நடந்து கொண்டீர் என்பது எனக்கு இப்போது உறுதியாகத் தெரிகிறது. நான் உமக்கு எதிரான இராணுவத் தீர்ப்பை ரத்துச் செய்கின்றேன். உமது விசுவாசக் கோட்பாட்டில் நீர் கொண்டுள்ள உறுதியான விசுவாசத்திற்காக உம்மைப் பாராட்டுகின்றேன்.

போராட்டம் நிறைந்த அவரது வாழ்க்கையில் அவர் இஸ்லாம் குறித்து பல்வேறு நூல்களையும் எழுதியுள்ளார். 1932க்குப் பின்னர் அவரது வாழ்வில் இரண்டாம் கட்டம் ஆரம்பிக்கின்றது. அவர் அங்காராவிலிருந்து சற்றுத் தொலைவிலுள்ள மக்கள் நடமாட்டம் குறைந்த ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்து அங்குள்ள மலைப் பிரதேசமொன்றில் அமைதியான இறை வணக்கத்தில் ஈடுபடத் தொடங்கினார். அவரது இறை தியானமும் பற்றுள்ள ஆன்மீக வாழ்வும் கூட அவரது கருத்துக்கு சார்பான மக்களைத் திரட்டும் என்று அஞ்சிய முஸ்தபா கமால், அவரைக் கைது செய்து ஸ்தன்பூலுக்கு அழைத்து வர திட்டமிட்டார். அங்கிருந்து மிகக் குளிரான பிரதேசமொன்றுக்கு நாடு கடத்தப்பட்டார்.

பார்லா எனும் இடத்தில் ஒரு தச்சன் அவருக்காக மரத்தால் ஒரு சிறிய அறையை அமைத்துக் கொடுத்தான். . உயர்ந்த மரங்களால் சூழப்பட்ட அந்த அறையில் தனது பெரும்பாலான நேரத்தை இறை வணக்கத்தில் கழித்தார். அங்கிருந்தே 'ரஸாஇலுந் நூர்' எனும் சஞ்சிகையைத் தொகுத்தார். இவ்வாறு இறுதிக் காலத்தில் ஆன்மீக வாழ்க்கையில் தன்னை முழுமையாக அர்ப்பணித்த அவர் 1960 ஜனவரி 20ல் வபாத்தானார்.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பள்ளிவாயல்களை மீண்டும் சமூகத்தின் மையமாக மாற்ற வேண்டிய தேவை இருக்கின்றது

**அஸ்லம் ஒஸ்மான்**

தலைவர்- ஆலோசனைக்கும் நல்லிணக்கத்துக்குமான பேரவை (ARC)

**Advocacy & Reconciliation Council**

උපදේශක සහ සංහිඳියා සභාව ஆலோசனை மற்றும் நல்லிணக்க பேரவை

அஸ்லம் ஒஸ்மான் சிறந்த சமூக சேவையாளர். கொழும்பு கொம்பனித்தெருவை சேர்ந்தவர். முஸ்லிம்களோடு சம்பந்தப்பட்ட விடயங்களில் முன்னணியில் நின்று கரிசனையோடு செயலாற்றுகின்ற ஒரு சமூக செயற்பாட்டாளர். ஆலோசனைக்கும் நல்லிணக்கத் துக்குமான பேரவை, கொழும்பு மாவட்ட பள்ளிவாயல்கள் சம்மேளனம் மற்றும் இலங்கை முஸ்லிம்களின் மத உரிமைகளுக்கான அமைப்பு என்பவற்றின் தலைவராகவும் இவர் செயற்படுகின்றார்.

இலங்கையிலுள்ள பள்ளிவாயல்களின் வினைத்திறனை அதிகரித்து, முஸ்லிம் சமூகத்தின் மத்தியஸ்த்தலமாக அவற்றை மாற்றும் நோக்குடன் ஆலோசனைக்கும் நல்லிணக்கத்துக்குமான பேரவை (ARC), National Masjid Awards என்ற திட்டத்தை முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தோடு இணைந்து செயற்படுத்த உள்ளமை குறிப்பிடத்தக்கது. இது தொடர்பில் ஆலோசனைக்கும் நல்லிணக்கத்துக்குமான பேரவையின் தலைவர் அஸ்லம் ஒஸ்மான் மீள்பார்வைக்கு வழங்கிய நேர்காணலே இது.

- **ARC அமைப்பைப் பற்றிய ஓர் அறிமுகத்தை தர முடியுமா?**

Advocacy and Reconciliation Council என்பதுதான் இதன் விரிவாகும். நாம் இந்த அமைப்பை 6 வருடங்களுக்கு முன் Campaign for Justice என்ற பெயரில் ஆரம்பித்து, முஸ்லிம்களுக்கு அப்போது காணப்பட்ட சவால்கள், பிரச்சினைகள் குறித்தான அறிக்கைகளைத் தயாரித்தோம். இவ்வாறு கிட்டத்தட்ட 400 முறைப்பாடுகள் தொடர்பில் அவதானம் செலுத்தினோம்.

எங்களிடம் வந்து முறைப்பாடுகளைத் தெரிவித்தவர்களிடம் முதலில் பொலிஸ் நிலையத்தில் குறித்த பிரச்சினையை பதிவு செய்யுமாறு அறிவுறுத்தினோம். எமது சமூகத்திடம் உள்ள பெரியதொரு குறைபாடுதான் எமக்கு நடக்கும் பிரச்சினைகளைக் கணக்கெடுக்காமல், அது தொடர்பில் எத்தகைய நடவடிக்கையும் எடுக்காமல் விட்டுவிடுவது. இவ்வாறு எமது பிரச்சினைகள் தொடர்பில் உரிய தரப்பிடம் முறையிடாமல் இருப்போமாக இருந்தால் எமது பிரச்சினைகள் பற்றிய எத்தகைய ஆதாரங்களும் இல்லாமல் போகும்.

நாம் Campaign for Justice என்ற அமைப்பை உருவாக்கியபோது நூற்றுக் கணக்கான முறைப்பாடுகளை மக்கள் தொலைபேசி மூலமாக தெரிவித்தார்கள். அந்த நேரத்தில் முஸ்லிம் சமூகத்திற்கு ஒரு பிரச்சினை ஏற்பட்டால் அவர்கள் தங்களது பிரச்சினைகளை முறையிடுவதற்கான ஒரு சந்தர்ப்பம் எமது அமைப்பு மூலமாக ஏற்படுத்தப்பட்டது.

இந்த நாட்டில் முஸ்லிம் சமூகம் அவர்களது மார்க்க விடயங்களை வைத்து தனிமைப்படுத்தப்படுகிறார்கள் என்று தெளிவான போது, முஸ்லிம் சமூகத்திற்கு சட்ட ரீதியான வழிகாட்டல்களை வழங்குவதற்காக RRT என்ற அமைப்பை உருவாக்கி, ஒரு குழு இந்த அமைப்பிலிருந்து தனித்து செயற்பட்டார்கள். அதேபோன்று முஸ்லிம்கள் இந்த நாட்டில் எதிர்நோக்கும் இன ரீதியான சவால்களை தடுத்து மக்களை அறிவுறுத்தி, சகவாழ்வை நோக்கி இந்த நாட்டு மக்களை ஒன்றிணைப்பதற்காகத்தான் ஆலோசனைக்கும் நல்லிணக்கத்துக்குமான பேரவை உருவாக்கப்பட்டது.

இதன் மூலமாக நாங்கள் கொம்பனித் தெரு மற்றும் மருதானை பொலிஸ் நிலையங்களில் இரத்ததான முகாமை நடாத்தினோம். ஆபாசப் படங்களை தடைசெய்யக் கோரி கோட்டை புகையிரத நிலையம், காலி பஸ் நிலையம் என்பவற்றுக்கு முன்னால் கையெழுத்து வேட்டையொன்றையும் நடாத்தினோம்.

அதன் பிறகு அளுத்கமையிலுள்ள விகாரையொன்றில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பணியாற்றுகின்ற வைத்தியர்களைக் கொண்டு இலவச மருத்துவ முகாமையொன்றையும் நடாத்தினோம். இதில் 2400 பேர் பயன் அடைந்தனர். ஷபாப் நிறுவனத்தின் அனுசரணையோடு 500 பேருக்கு மூக்குக் கண்ணாடிகளும் இலவசமாக வழங்கப்பட்டன. இவையனைத்தையும் நாம் செய்ததன் நோக்கம், இந்த நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான்.

எமது சமூகத்தின் செயற்பாடுகள் அனைத்தும் பள்ளிவாயல்களை மையப் படுத்தியதாக அமைய வேண்டும் என்ற சிந்தனை ஏற்பட்டது. இதன் முக்கியத்துவத்தை மக்களுக்கு உணர்த்த வேண்டிய தேவையும் காணப்பட்டது. நபி (ஸல்) அவர்களின் காலத்தில் பள்ளிவாயல்களை மையப்படுத்தியே முஸ்லிம்களின் எல்லா செயற்பாடுகளும் இடம்பெற்றன. காலப்போக்கில் முஸ்லிம்களின் செயற்பாடுகள் அனைத்தும் பள்ளிவாயல்களை விட்டு வெளியே வந்துவிட்டன. இது பெரியதொரு குறைபாடாகும். எனவே பள்ளிவாயல்களை மீண்டும் சமூகத்தின் மையமாக மாற்ற வேண்டிய தேவை இருக்கின்றது.

குறித்ததொரு மஹல்லாவில் உள்ள ஒரு குடும்பம் வறுமையில் உள்ளதென்றால் அந்தப் பிரச்சினையை பள்ளிவாயலின் நிர்வாகி அறிந்திருக்க வேண்டும். இன்று பள்ளிவாயல்களின் நிர்வாகிகள் பள்ளிவாயலுக்கு நிறம் பூசவும், மின்விளக்குகளை மாற்றவும், இமாம், முஅத்தினை கண்காணிக்கவும்தான் இருக்கிறார்கள். பள்ளிவாயல் நிர்வாகிகளுக்கு சமூகத்தில் மிகக் கனதியான பொறுப்பு காணப்படுகின்றது என்பதை உணர வேண்டும். எனவே இந்த சிந்தனையை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும் என்ற அடிப்படையில் தற்போது செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

தற்போது, இலங்கையில் 2400 பள்ளிவாயல்கள் இருக்கின்றன. சில முக்கியமான விடயங்களை அடிப்படையாக வைத்து National Masjid Awards என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தி, பள்ளிவாயல்களின் வினைத்திறனை அதிகரிக்க வேண்டும் என்ற முடிவுக்கு எமது அமைப்பு வந்தது. பின்வரும் 4 விடயங்களை அடிப்படையாக வைத்தே இந்த விருதுகளை வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளோம்.

1. கல்வி ரீதியாக சமூகத்தை வழிநடாத்துவதில் பள்ளிவாயலின் வகிபாகம்.
2. சமூக சேவைகள் மூலமாக குடும்பங்களை வலுப்படுத்துவதில் பள்ளிவாயலின் வகிபாகம்.
3. சக வாழ்வை ஏற்படுத்துவதில் பள்ளிவாயலின் வகிபாகம்.
4. வாழ்வாதார உதவிகளை வழங்குவதில் பள்ளிவாயலின் வகிபாகம்.

மேற்சொன்ன 4 பிரிவுகளில் இருந்தும் ஒவ்வொரு பிரிவுக்கும் தங்கம், வெள்ளி, வெண்கலம் என மூன்று வகையான விருதுகளை அறிமுகப்படுத்தி இருக்கின்றோம். இந்த 4 பிரிவுகளுக்கும் அப்பால் சிறப் பாகச் செயற்படுகின்ற பள்ளிவாயல் களுக்கும் [illegible] விருதுகள் வழங்கப் பட இருக்கின்றன.




அதேபோன்று, முஸ் லிம் சமூகத்திற்கு சேவை செய்தவர் களுக்கும் விருதுகள் வழங்கப்பட இருக் கின்றன.

- **பள்ளிவாயல்களின் செயற்பாடுகளை பலப்படுத்தும் இந்த செயற் திட்டம் கொழும்பு மாவட்டத்தை மாத்திரம் மையப்படுத்தியதா?**

தேசிய ரீதியாக இந்த நாட்டிலுள்ள 2400 பள்ளிவாயல்களையும் மையப் படுத்தியே இத்திட்டத்தை முன்னெடுக்கின்றோம். இது தொடர்பில் முஸ்லிம் சமய விவகார அமைச்சர் ஹலீம் அவர் களோடு [illegible] செயற்திட்டத்தை வரவேற்றார். இலங்கை வரலாற்றில் பள்ளிவாயல்கள் செய்கின்ற பணிகளுக்கு யாருமே விருதுகள் வழங்கி கௌரவிப்பதில்லை. சிறப்பாக செயற்படுகின்ற பள்ளிவாயல்களுக்கான ஒரு தனித்துவமான கௌரமாகவே இந்த விருதுகளை நாங்கள் அறிமுகப் படுத்தி இருக்கின்றோம். இதன் மூலமாக இந்த நாட்டிலுள்ள பள்ளிவாயல்களின் வினைத்திறனை இன்னும் அதிகரிக்க முடியுமென நம்புகின்றோம்.

இந்த செயற்திட்டம் தொடர்பில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவிடம் அனுமதியை (பத்வா) கேட்டோம். அவர்கள் எங்களோடு இருமுறை கலந்துரையாடி இத்திட்டத்தை அமுல் படுத்த முடியுமென அனுமதியளித்தார்கள். அத்தோடு சிறந்த பள்ளிவாயல்களைத் தெரிவு செய்யும்போது மார்க்க ரீதியான விடயங்களுக்கு முன்னுரிமை அளிக்குமாறு எம்மை வேண்டிக்கொண்டார்கள்.

- **2400 பள்ளிவாயல்களின் செயற்பாடுகளையும் எவ்வாறு கண்காணிக்கப் போகிறீர்கள்?**

நாங்கள் விண்ணப்பப் படிவத்தையும், 12 பக்கங்களைக் கொண்ட கையேடு ஒன்றையும் தயார் செய்திருக்கின்றோம். இவற்றை முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மூலமாக 2400 பள்ளிவாயல்களுக்கும் அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம். குறித்த விண்ணப்பப் படிவத்தில் பள்ளிவாயல்களின் வினைத்திறனை மதிப்பிடுவதற்காக சில கேள்விகளை உள்ளடக்கியுள்ளதோடு, பள்ளிவாயல்கள் மூலமாக முன்னெடுத்த வேலைத் திட்டங்களை ஆதாரபூர்வமாக சமர்ப்பிக்க வேண்டும். 2014 ஆம் ஆண்டிலிருந்து பள்ளிவாயல்கள் மூலமாக மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் கவனத்திற் கொள்ளப்படும் என்பதை பள்ளிவாயல் நிர்வாகிகளுக்கு தெளிவுபடுத்தியுள்ளோம்.

இந்த செயற்திட்டத்தை முன்கொண்டு செல்லும் வகையில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் 15 அறிமுக நிகழ்ச்சிகளை செய்ய இருக்கின்றோம். இதன் மூலம் எமது நோக்கங்களை தெளிவாக விளங்கப்படுத்த முடியும். சிறந்த முறையில் செயற்படும் பள்ளிவாயல்களை 7-9 பேரைக் கொண்ட நடுவர் குழாம் தெரிவு செய்யும். நடுவர்களாக சட்டத்துறை, நிர்வாகத்துறை, ஷரீஆத்துறை என்பவற்றில் உள்ள புத்திஜீவிகள் செயற்படுவார்கள்.

முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுமதி கிடைத்தவுடன் இத்திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த இருக்கின்றோம். இத்திட்டத்தின் முக்கியத்துவத்தை மக்களுக்கு தெரியப்படுத்தி, விழிப்புணர்வூட்ட வேண்டிய தேவையும் இருக்கின்றது. விருதுகள் வழங்கும் நிகழ்வை ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்களை அழைத்து பிரமாண்டமான முறையில் நடாத்துவதற்கும் திட்டமிட்டிருக்கின்றோம். இதன் மூலம் பள்ளிவாயல்கள் இந்த நாட்டில் எத்தகைய பணிகளை செய்கின்றன என்பதனை அனைவரும் புரிந்து கொள்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்த முடியும்.

இந்தத் திட்டம் மூலமாக பள்ளிவாயல்கள் மக்களோடு தொடர்பான சகல விடயங்களையும் அமுல்படுத்தும் ஒரு மத்தியஸ்தலமாக திகழ்கின்றது என்ற உண்மையை இந்நாட்டு மக்கள் உணர வேண்டும். பள்ளிவாயல்கள் இந்த நாட்டில் போதுமானளவு இருக்கின்றன. ஆனால், அந்தப் பள்ளிவாயல்கள் மூலமாக மேற்கொள்ளப்படவேண்டிய பணிகள் ஏராளம் காணப்படுகின்றன.

- **இந்த விருதுகள் வழங்கும் திட்டத்தை வருடாந்தம் நடாத்துவதற்கு தீர்மானித்துள்ளீர்களா?**

இல்லை. இரண்டு வருடங்களுக்கு ஒருமுறைதான் நடாத்துவதற்கு உத்தேசித்துள்ளோம். இத்திட்டம் இலங்கைக்கு புதியதாக இருப்பதால் ஆரம்பத்தில் 100 தொடக்கம் 200 பள்ளிவாயல்கள் தெரிவாகும் என்று நினைக்கின்றேன். அடுத்த முறை இது 400 தொடக்கம் 500 ஆக அதிகரிக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. இந்தத் திட்டத்தின் முக்கியத்துவத்தை பள்ளிவாயல்களின் நிர்வாகிகள் உணரத் தொடங்குவார்களாக இருந்தால் பள்ளிவாயல்களின் மூலமாக சமூகம் சார்ந்த அதிகமான வேலைத் திட்டங்களை ஆர்வத்தோடு முன்னெடுப்பார்கள்.

பாடசாலையொன்றில் கற்பிக்கும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் எமது பள்ளிவாயலைப் பார்த்து உங்கள் பள்ளிவாயலில் வாள், கத்தி, கற்கள் இருக்குமென்றுதான் நினைத்தேன். அவ்வாறு ஒன்றுமில்லை. மிகவும் அமைதியான இடமாகவுள்ளது என்று குறிப்பிட்டார். பெரும்பான்மையின மக்களிடம் எமது பள்ளிவாயல்களில் ஆயுதங்கள் உள்ளன என்ற மனப்பதிவு காணப்படுகின்றது. எனவே, இத்திட்டத்தின் மூலம் பெரும்பான்மையின மக்களுக்கு பள்ளிவாயல்களின் பணிகளை விளங்கிக் கொள்வதற்கான வாய்ப்பு ஏற்படுகின்றது.

- **பள்ளிவாயல்களை பலப்படுத்தும் இத்திட்டம் மூலம் முஸ்லிம் சமூகத்தை மாத்திரமா கவனத்திற் கொள்கிறீர்கள்?**

பள்ளிவாயல்களை மையப்படுத்தி எமது சமூகம் செயற்படுமாக இருந்தால் அது முழு நாட்டுக்கும் நன்மை அளிப்பதாகவே இருக்கும். பள்ளிவாயல்கள் மூலம் ஏனைய இனத்தவர்களோடு உறவாடும் நிலைமைகளையும் உருவாக்கிக் கொள்ள முடியும். அதேபோன்று, புகைத்தல் ஹராம் என்று சொல்கின்றோம். இதனைத் தடுப்பதற்கு நாங்கள் எத்தகைய நடவடிக்கைகளை இந்த நாட்டில் எடுத்திருக்கின்றோம். இன்று இந்த நாட்டில் புகைத்தலுக்கு எதிராக பௌத்த, கிறிஸ்தவ மதகுருமார்கள் போராடுகிறார்கள். இது ஹராம் என்று தெரிந்தும் சமூக ரீதியான தீமைகளை ஒழிப்பதில் நாங்கள் பின்நிற்கின்றோம்.

ஆபாசப் படங்களுக்கு எதிராக நாங்கள் என்ன செய்திருக்கின்றோம்? எமது அமைப்பு ஆபாசப் படங்களுக்கு எதிராக கோட்டை புகையிரத நிலையம், காலி பஸ் நிலையம் என்பவற்றுக்கு முன்னால் கையெழுத்து வேட்டையொன்றை நடாத்தியது. இதனை ஜனாதிபதி, பிரதமரிடம் கையளித்து மோசமான இணைய தளங்களைத் தடை செய்யுமாறு கோரிக்கை விடுக்கவுள்ளோம். இது முஸ்லிம்களை மாத்திரம் இலக்கு வைத்து செய்யப்பட்ட நடவடிக்கை அல்ல. முழு இலங்கையினதும் நலனுக்காகவே இதனை நாம் முன்னெடுத்தோம். எனவே, இத்தகைய சமூக ரீதியான தீமைகளை ஒழிப்பதில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படக்கூடிய தளமாக பள்ளிவாயல்களை மாற்ற வேண்டிய தேவை எமக்கு இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கவீனம் என்பது இயலாமையுமல்ல, சாதிப்பதற்கு அது ஒரு தடையுமல்ல

## மனம் திறக்கிறார் கண்பார்வையற்ற பட்டதாரி மாணவி பாத்திமா ஸனூரியா

அங்கவீனர்களால் எதுவுமே செய்ய முடியாது. அவர்கள் வாழத் தகுதியற்றவர்கள் என்றிருந்த காலம் மலையேறிவிட்டது. அங்கவீனம் என்பது ஒரு இயலாமை அல்ல. கண்பார்வை அற்ற மாணவர்களாலும் முன்னேற முடியும். சாதாரண மாணவர்களோடு சரிசமமாக அவர்களாலும் கற்றலில் ஈடுபட முடியும் என்ற தன்னம்பிக்கை மிக்க வார்த்தைகளை எம்மோடு பகிர்ந்து கொள்கிறார், இம்முறை நடைபெற்ற தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கலைத்துறையில் பட்டம் பெற்று வெளியாகிய கண்பார்வையற்ற மாணவி பாத்திமா ஸனூரியா.

கண்பார்வையுள்ள பலர் குருடர்களாக வாழும் இவ்வையகத்தில் கண்பார்வையற்ற ஒரு மாணவி பல்கலைக்கழகப் படிப்பை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருக்கிறார் என்பது பெரியதொரு சாதனை தான். அவர் உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டியவர். அவர் இந்த சமூகத்தின் ஒரு சாதனைப் பெண்மணி. அவர் அங்கவீனர்களுக்கு மட்டுமல்ல முழு இளைஞர்களுக்குமான முன்னுதாரணம்.

தந்தை இல்லாத குடும்பத்தில் வளர்ந்த பாத்திமா ஸனூரியாவுக்கு இரண்டு சகோதரிகளும் ஒரு சகோதரனும் உள்ளனர். 1988 ஆம் ஆண்டு மாவனல்லை உயன்வத்தை பிரதேசத்தில் பிறந்தவர். கண்பார்வை அற்ற காரணத்தினால் ஆரம்பத்தில் இவரை யாரும் பாடசாலையில் சேர்த்துக் கொள்ள வில்லை. ஏனைய மாணவர்களுக்கு இணையாக இவரால் படிக்க முடியாது என தட்டிக்கழித்து விட்டார்கள். என்றாலும் இரண்டு வருடங்கள் கழித்து தெல்கஹகொட முஸ்லிம் கனிஷ்ட வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்பு பாத்திமா ஸனூரியாவுக்கு கிடைத்தது.

இவ்வாறு கல்வியைப் பெறுவதற்கான சந்தர்ப்பம் அவருக்குக் கிடைப்பதற்கான காரணம் அப்பாடசாலையில் கற்பித்துக் கொடுத்த ஹபீலா ஆசிரியையின் அர்ப்பணம் மிக்க சேவையாகும்.



கண்பார்வையற்ற ஸனூரியாவுக்கு இந்த ஆசிரியை 3 வருடங்கள் தனியாகக் கவனமெடுத்து கற்பித்தமைதான் இன்று அவர் பட்டப் படிப்பை பூர்த்தி செய்வதற்கு அடித்தளமாய் அமைந்தது.

தரம் 6 தொடக்கம் 11 வரை திஹாரி இஸ்லாமிய அங்கவீனர் நிலையத்தில் தனது கல்வியைத் தொடர்ந்த பாத்திமா ஸனூரியா இங்குதான் கண்பார்வையற்றவர்களுக்கான பிரெய்லி எழுத்து முறையை பயின்று கொண்டார். இதனால் அவர் தொடர்ந்தும் கல்வி நடவடிக்கைகளில் ஆர்வத்தோடு ஈடுபடுவதற்கு உதவியாக அமைந்தது.

க.பொ.த உயர்தரத்தை மாவனல்லை உயன்வத்த நூராணியா மகா வித்தியாலயத்தில் கற்று, 2011/12 வருடத்தில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் கலை பீடத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டார். இவரோடு சேர்த்து இன்னுமொரு கண்பார்வையற்ற மாணவரும் முதற் தடவையாக தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் இவ்வருடத்தில் இணைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

தனது பல்கலைக்கழக வாழ்க்கை தொடர்பில் மனம் திறக்கும் பாத்திமா ஸனூரியா, பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளர்கள் மற்றும் நண்பர்களின் ஒத்துழைப்புக்களை ஒருபோதும் மறக்க முடியாதெனவும், இவர்களது பெறுமதியான உதவிகள்தான் தன்னை இன்று இந்த நிலைக்குக் கொண்டுவந்துள்ளதாகவும் தெரிவிக்கிறார்.

குறிப்பாக பரீட்சைக்குத் தயாராகும்போது நண்பர்கள் பாடக் குறிப்புகளை வாசித்து தனக்கு விளங்கப்படுத்தியமையானது பெரும் உதவியாக அமைந்ததாக நெகிழ்ச்சியோடு குறிப்பிடுகிறார்.

இன்ஷா அல்லாஹ் ஒரு சிறந்த ஆசிரியையாக மாற வேண்டும் என்பதை தனது இலட்சியமாகக் கொண்டுள்ள பாத்திமா ஸனூரியா, நான் கற்ற கல்வியை பிறருக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும் எனவும் தன்னால் சாதாரண பாடசாலை மாணவர்களுக்கு கற்பித்துக் கொடுக்க முடியும் எனவும் நம்பிக்கையோடு குறிப்பிடுகிறார்.

இறுதியாக, மிகவும் கஷ்டப்பட்டு தன்னை இந்தளவுக்கு ஆளாக்கிய தனது தாய், சகோதரிகள், உறவினர்கள், ஹபீலா ஆசிரியை, திஹாரி இஸ்லாமிய அங்கவீனர் நிலையத்தின் பணிப்பாளர் ஜிப்ரி ஹனீபா உள்ளிட்ட ஆசிரியர்கள், தனக்குக் கற்பித்த ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள், நண்பர்கள், தனக்கு உதவி செய்தவர்கள் என அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிக்கும் பாத்திமா ஸனூரியா, அவர்களுக்காக என்றும் தான் பிரார்த்திக்கக் கடமைப்பட்டிருப்பதாகவும் குறிப்பிடுகின்றார்.

பல கஷ்டங்களுக்கு மத்தியில் தனக்கு ஏற்பட்ட சவால்களை எல்லாம் முறியடித்து இன்று சாதித்துக் காட்டியிருக்கின்ற பாத்திமா சனூரியாவை நாமும் வாழ்த்துகின்றோம்.

**மிப்றாஷ் முஸ்தபா**
அனஸ் அப்பாஸ்

## RTI ... (03 ம் பக்கத் தொடர்)

படுத்துகிறது. அரச பொது நிறுவனங்களின் வெளிப் படைத் தன்மையையும் பொறுப்புக் கூறும் பண்பாட்டையும் பேணி வளர்ப்ப தும் இதன் மூலம் மக்களை ஊழலை எதிர்த்து நிற்றல், பொறுப்புக் கூறும் தன்மை, நல்லாட்சியை மேம்படுத்தல் என்பவற்றின் ஊடாக நாட்டின் பொது வாழ்வில் தீவிரமாகப் பங்கேற்கச் செய்வதும் இந்தச் சட்டத்தின் மூலமாக நாடப்படுகிறது.

மக்களுக்குத் தேவையான தகவல்களை வழங்குவதற்கென எல்லா அரச நிறுவனங்களிலும் தகவல் அலுவலர் (information Officer) ஒருவர் குறித்த நிறுவனத்துக்குள்ளால் இருந்து தற்போது நியமிக்கப்பட்டுள்ளனர். இவர் சட்டம் அமுலான திகதியிலிருந்து (2016 ஓகஸ்ட் 04) பின்னோக்கி 10 வருடங்களுக்கான தக்வல்களை வழங்கக் கூடியவராக இருப்பார். பொதுமக்கள் தமக்குத் தேவையான தகவல்களை, RTI விண்ணப் பப்படிவம் ஒன்றை பூரணப்படுத்திச் சமர்ப்பிப்பதன் மூலம் கோர முடியும்.

இந்த விண்ணப்படிவங்களை எல்லா அரச நிறுவனங்களிலும் இலவசமாகப் பெற்றுக் கொள்ள முடியும். அல்லது rtiwatch.lk என்ற இணையத் தளம் மூலம் தரவிறக்கம் செய்து கொள்ளவோ ஒன்லைனில் விண்ணப்பிக்கவோ முடியும். எழுத்து மூலம் விண்ணப்பிப்பதற்கு முடியாதவர் களுக்கு தகவல் அதிகாரி விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கு கட்டணமின்றி உதவ வேண்டும். (பிரிவு 24(2))

எந்த மொழியில் வேண்டுமானாலும் தகவல்களைக் கோர முடியும். ஆனால் தகவல்கள் எந்த மொழியில் பேணப்பட்டிருக்குமோ அந்த மொழியிலேயே தகவல்கள் கிடைக்கும். எந்த வடிவில் தகவல் தேவை என்பதனையும் குறிப்பிடுவதன் மூலம் எழுத்து வடிவிலோ, CD வடிவிலோ அவற்றுக்குரிய செலவை கட்டணமாகச் செலுத்தி (கட்டண விபரம் நிறுவனத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும் -பிரிவு 26(1)(d)) பெற்றுக் கொள்ள முடியும். விண்ணப்பங்களை ஏற்றுக் கொண்டதற்கான பற்றுச்சீட்டொன்று தகவல் அதிகாரியால் உடனேயே வழங்கப்படும். (பிரிவு 24(3)) குறித்துரைக்கப்பட்ட 14 விடயங்களில் மட்டும் தகவல் கோரப்பட முடியாது.-பிரிவு 5 (1).

விண்ணப்பதாரியால் கேட்கப்பட்ட தகவல்கள் பெறமுடியுமானவையா, எத்தனை நாட்களில் பெற முடியும் என்ற விடயங்களை தகவல் அதிகாரி 14 நாட்களுக்குள் அறியத் தர வேண்டும். வழங்கப்பட முடியுமான தகவல் என தகவல் அதிகாரி அறிவித்த 14 நாட்களுக்குள் கேட்கப்பட்ட தகவல்கள் விண்ணப்பதாரியை வந்தடையும். குறைந்த பட்சம் 28 நாட்களில் குறித்த தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும். 14 நாட்களில் தர முடியாத அளவுக்கு தகவல்கள் பெரியதாக இருந்தால் கால எல்லை 14 இலிருந்து 21 நாட்களாக நீடிக்கப்பட முடியும். ஆனால் இந்த நீடிப்புக்கான காரணத்தை தகவல் அதிகாரி விண்ணப்பதாரிக்கு வழங்க வேண்டும். தேவையேற்படும் பட்சத்தில் தகவல்களையோ ஆவணங்களையோ பார்வையிடவும் முடியும். உதாரணமாக, அரசாங்க ஒப்பந்தக்காரர் மூலமாக நடைபெறுகின்ற ஒரு வேலையை தர நிர்ணயத்தை உறுதிப் படுத்திக் கொள்ளும் பொருட்டு பார்வையிடுவதற்கு எவரும் கோர முடியும்.

தகவல் அதிகாரி தகவல் தருவதற்குத் தவறும் பொழுது அது தொடர்பில் குறித்தநிறுவனத்தில்நியமிக்கப்பட்டுள்ள அதிகாரியிடம் (Designated Officer) மேல் முறையீடு செய்யலாம். தகவல் அதிகாரியினதும் நியமன அதிகாரியினதும் பெயர்களும் தொடர்புக்கான இலக்கமும் குறித்த நிறுவனத்தில் காட்சிப்படுத்தப் பட்டிருக்கும். -பிரிவு (26)1

தகவல் அதிகாரி தகவல் தர மறுத்தாலோ, குறித்த நேரத்தில் தகவல் தராவிட்டாலோ, பூர்த்தியற்ற தவறான தகவலைத் தந்தாலோ, மேலதிக கட்டணம் விதித்தாலோ, கோரப்பட்ட வடிவத்தில் தகவலைத் தராவிட்டாலோ இது தொடர்பில் சம்பவம் நடந்து 14 நாட்களுக்குள் நியமன அதிகாரியிடம் முறையிடலாம். (பிரிவு 31) நியமன அதிகாரி இந்த விண்ணப்பத்தை ஏற்று 3 நாட்களுக்குள் அதற்கான பற்றுச் சீட்டை வழங்க வேண்டும். மேன்முறையீடு கிடைத்து 03 வாரங்களுக்குள் நியமன அதிகாரி இதற்குரிய பதிலை வழங்க வேண்டும். -பிரிவு 31 (2),(3),(5).

தகவல் அதிகாரிக்கெதிரான முறையீடு தொடர்பில் நியமன அதிகாரி எடுத்த முடிவு விண்ணப்பதாரிக்கு திருப்தியளிக்காவிடிலோ, நியமன அதிகாரி 3 வாரத்தில் குறித்த விண்ணப்பத்துக்கான தீர்வொன்றைத் தராவிடிலோ, நியமன அதிகாரிக்கு எதிராக 02 மாத கால எல்லைக்குள் தகவல் கமிஷனிடம் முறையீடு செய்ய முடியும். கமிஷன் அதனுடைய முடிவை 30 நாட்களுக்குள் விண்ணப்பதாரிக்கு தெரிவிக்க வேண்டும். (பிரிவு 32(1) கமிஷனும் திருப்தியான முடிவொன்றைத் தராதவிடத்து 14 நாட்களுக்குள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் குறித்த அரச நிறுவனத்துக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியும். உரிய . நிறுவனத்தின் தகவல் அதிகாரி குற்றவாளியாகக் காணப்படுமிடத்து 50,000 ரூபாவோ ஒரு மாத கால சிறைத் தண்டனையோ தண்டமாக விதிக்கப்பட முடியும். தகவல் அதிகாரிக்கு ஒத்துழைக்க மறுக்கின்ற அரச ஊழியர்களுக்கும் 10,000 ரூபா வரை தண்டப்பணம் விதிக்கப்பட முடியும். -பிரிவு 39(1),(2)

கிராம சேவகர்களைப் பொறுத்த வரையில் அரசாங்க அதிபர் அலுவலகத்திலேயே தகவல் அதிகாரி இருப்பார். ஆனால் அரசாங்கப் பாடசாலைகளைப் பொறுத்தவரையில் தகவல் அதிகாரிகள் நியமிக்கப்படும் வரை பாடசாலை அதிபர்களே தகவல் அதிகாரிகளாகத் தொழிற்படுவர்.

இத்தனை வரையறைகளையும் கொண்ட இந்தச் சட்டம், கனடாவின் Centre for Law and Democracy (CLD) யினால் உலகின் மூன்றாவது நிலையிலுள்ள தகவல் அறியும் சட்டமாக நிலைப்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தைப் பாவித்து பெறப்பட முடியாது எனக் குறித்துரைக்கப்பட்ட சில தகவல்கள் இந்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்குரிய சவாலாக உள்ளன. பாதுகாப்பு தொடர்பான தகவல்களை வழங்காமல் மறுக்கலாம் என்ற விடயத்தில், பாதுகாப்பு தொடர்பான விடயங்கள் என்ன என்பதில் மயக்கமான நிலை இருக்கிறது. இதனால் எந்தத் தகவலையும் பாதுகாப்பை காரணம் காட்டி மறுப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

மஹிந்த ராஜபக்ஷவுடைய ஒரு வருட வெளிநாட்டுப் பயணம் தொடர்பாக பாராளுமன்றத்தில் அனுர குமார திசாநாயக்க விடுத்த வாய்மூல வினாவுக்கு ஒரு வருட காலத்தின் பின்னர், பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்தத் தகவல்களை வெளியிட முடியாது எனப் பதிலளிக்கப்பட்டது. நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகின்ற வழக்கு தொடர்பில் தகவல்கள் வழங்கப்பட முடியாது என தகவல் அறியும் உரிமைச் சட்டம் குறித்துரைக்கின்ற விதி, நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட பின்னர் அவை பகிரங்கமானவை என்று ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள சுதந்திரத்தை மீறுவதாக அமைந்துள்ளது.

தகவல் வழங்காது மறுக்கலாம் எனக் குறித்துரைக்கப்பட்டுள்ள 14 விடயங்களில் 08 விடயங்கள், தாம் இந்த விபரங்களைக் கோருவது பொதுநலனைக் கருத்திற் கொண்டே என்பதை நிரூபிப்பதன் மூலம் தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியுமானவை. இவை தவிர வேறு எதுவும் மக்கள் தகவல் அறிந்து கொள்வதற்கு தடையானவைகள் இல்லை.

இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக அமுலுக்கு வருதல் என்ற வகையில் தகவல் அறியும் சட்டம் மக்களுக்குப் புதிதானதுதான். ஏனைய சட்டங்கள் போலன்றி இது மக்களால் பயன்படுத்தப்படுகின்ற அளவுக்குத்தான் இதன் வெற்றி தங்கியிருக்கிறது. மக்களது பிரச்சினைகளை ஆராயவும் தீர்த்து வைக்கவும் என உருவாக்கப்பட்ட மனித உரிமைகள் ஆணைக்குழு, ஒம்புட்ஸ்மன் போன்றவைகளை பயன்படுத்தி தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் அதிக அக்கறை காட்டாத மக்கள் தகவல் அறியும் உரிமையை எப்படிக் கையாள்வார்கள் என்ற கேள்வி பரவலாக எழுகிறது. தகவல் அறியும் உரிமை பிரச்சினைக்கான தீர்வல்ல. தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கான ஆயுதம். இந்த ஆயுதத்தை முறையாகக் கையாளாவிட்டால் அதனால் எந்தப் பிரயோசனமும் கிடைக்கப் போவதில்லை.

தகவல் அறிவதற்கான மனுவை முன்வைப்பதற்கு அதை எந்த பொது நிறுவனத்திடம் சாட்டுவது என்பதை மக்கள் தெரிந்திருக்க வேண்டும். பிரதேச சபைகளின் தொழிற்பாடு என்ன, அரசாங்க அதிபருக்குள்ள ஆணைகள் எவை, குப்பை அள்ளுவதற்கு வராவிட்டால் யாரிடம் முறையிட வேண்டும் போன்ற அரச நிர்வாக விடயங்களில் இலங்கைச் சமூகம் போதுமான அறிவூட்டப்பட வேண்டும். எல்லாவற்றுக்கும் ஒரே தைலம் என அரசியல்வாதிகளையே நம்பிக் கொண்டிருந்த சமூகத்துக்கு இந்த அறிவை வழங்குவது தகவலறியும் உரிமை பயன்பாட்டுக்கு முக்கியமான சவால்.

தகவல் உரிமையை வென்றெடுப்பதற்கு போராட்ட உணர்வு வேண்டும். நமக்கெதற்கு வீண்வம்பு என்று ஒதுங்கியிருக்கும் மனப்பாங்கு உள்ளவர்களாலோ, அரச அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படும் போது சோர்ந்து போகின்றவர்களாலோ இந்த உரிமையை வெல்ல வைக்க முடியாது. பிரதேச சபைக்குத் தெரிவானதன் பின்னர் நமது உறுப்பினர் கோடீஸ்வரராகியிருக்கிறார். அவரது சொத்து விபரங்கள் என்ன, அபிவிருத்தி அடைந்த கிராமமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள எமது கிராமத்துக்கு ஏன் வடிகான் நிறுவப்படவில்லை, பக்கத்துப் பாடசாலை சிறந்த பாடசாலை திட்டத்தில் ஏன் எமது பாடசாலை உள்வாங்கப்படவில்லை, கடந்த வருடம் பாடசாலைக்கு வழங்கப்பட்ட தர உள்ளீட்டுப் பொருட்களை (Quality Inputs) வாங்குவதற்கான நிதிக்கு என்ன நடந்தது என பல விடயங்களையும் RTI பண்ணுவதன் மூலம் அரச நிர்வாகத்தை மக்களுக்காக இயங்கச் செய்வதற்கு இந்த தகவல் அறியும் உரிமையை மக்கள் பயன்படுத்த முடியும்.

இன்று நடைபெற வேண்டிய ஒன்பது பாடங்களில் நான்கு பாடங்கள் தான் நடந்திருக்கின்றன. ஏனையவை ஏன் நடைபெறவில்லை என்பதை பாடசாலை பெற்றார் கூட்டத்திலேனும் எழும்பிக் கேள்வி கேட்கத் திராணியற்ற சமூகத்தின் கையில் கிடைத்த பூமாலையாக இந்தச் சட்டத்தை ஆக்கிவிடாமல் இருப்பது மக்களின் பொறுப்பு.

### தகவல் வழங்குவது மறுக்கப்பட முடியுமான சந்தர்ப்பங்கள்

அ) ஒருவரின் அந்தரங்க விடயங்களில் தலையிடக் கூடுமான தனிப்பட்ட விடயங்கள்

ஆ) வெளிப்படுத்துவதால் நாட்டின் பாதுகாப்புக்கோ, நாடுகளுடனான உறவுக்கோ பாதிப்பை ஏற்படுத்தும் எனக் கருதப்படும் தகவல்கள்

இ) அரசாங்கத்தின் நிதிக் கொள்கைகளை மாற்றும் அளவிலான, காலத்துக்கு முந்தியதான முடிவுகள்

ஈ) மூன்றாம் தரப்பின் போட்டி நிலைக்கு தீங்கு விளைவிக்கும் அளவிலான, புலமைச் சொத்தின் கீழ் பாதுகாக்கப்பட்டு வரும் வர்த்தக அந்தரங்கம், வியாபார ரகசியம் போன்றவை

உ) சம்பந்தப்பட்டவர் அனுமதித்தாலன்றி தனிப்பட்ட ஒருவரின் மருத்துவ அறிக்கைகள்

ஊ) உயர்தொழில் வகிப்போருக்கும் (Professionals) அரச நிறுவனம் ஒன்றுக்கும் இடையிலான தொடர்பாடல்கள் (உ+ம்- சட்டமா அதிபருக்கும், அரச நிறுவனத்துக்கும் இடையிலான தொடர்பாடல்)

எ) நம்பகமான உறவைப் பேணும் வகையில் அந்தரங்கமாக வைக்கப்பட வேண்டிய தகவல்கள்

ஏ) குற்றவாளிகளுக்கு உதவும் வகையிலான துப்புத் துலக்குவதை வெளிப்படுத்தும் தகவல்கள்

ஐ) மூன்றாம் தரப்பொன்றினால் அரச நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்ட, அதனை வெளியிடுவதை மூன்றாம் தரப்பு விரும்பாத தகவல்கள்

ஒ) நீதித்துறையின் பாரபட்சமின்மையை பேணுவதற்குப் பங்கமாக அமையும் தகவல்கள்

ஓ) பாராளுமன்றத்தின், மாகாண சபையின் சிறப்புரிமையை மீறுகின்ற தகவல்கள்

ஔ) பரீட்சைத் திணைக்களத்தால் அல்லது உயர்கல்வி நிறுவனம் ஒன்றால் நடத்தப்படவிருக்கும் பரீட்சையின் இரகசியத் தன்மையை பாதிக்கும் தகவல்கள்

க) அதுவரை முடிவுகள் எடுக்கப்படாத அமைச்சரவைப் பத்திரம் தொடர்பான தகவல்கள்

ங) இரகசியம் பேணப்பட வேண்டிய தேர்தல்கள் ஆணையாளரினால் நடத்தப்பட்ட தேர்தல் தொடர்பான தகவல்கள்

இவற்றில் அ,ஆ,ஈ,உ,ஊ,எ,ஏ என்பவற்றின் தகவல்கள் வழங்குவது மறுக்கப்பட முடியுமாயினும் பொதுநலனை அடிப் படையாகக் கொண்டது என்று நிரூபிக் குமிடத்து தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோரை மதிப்போம் பேணிக் காப்போம்



• முஹம்மத் பகீஹுத்தீன்

**பெப்ரவரி 25,26ஆம் திகதிகளில் நாடுமுழுவதும் கொண்டாடப்படுகின்ற ஸலாமா தினத்தையொட்டி அதன் கருப்பொருளான பெற்றோரை மதிப்போம், பேணிக் காப்போம் என்ற தலைப்பிலான இந்த ஆக்கம் பிரசுரிக்கப்படுகின்றது.**

தாயும் தந்தையும் சுபீட்சத்தின் கண்கள். உயர்ந்த சுவர்க்கத்தின் நுழைவாயில். மனித வாழ்வின் இன்பம், துன்பம் இரண்டும் தங்கியிருப்பது பெற்றோர்களை பேணிக் காப்பதில் மட்டுமே. அவர்கள் நம்மை பெற்று, வளர்த்து, ஆளாக்கி இந்த உலகுக்கு கொண்டு வந்தவர்கள். நாம் பசியார வேண்டும் என்பதற்காக அவர்கள் பட்டினியிருந்தார்கள். நாம் உடுத்த வேண்டும் என்பதற்காக அவர்கள் கந்தையை அணிந்தார்கள். நாம் தூங்க வேண்டும் என்பதற்காக அவர்கள் விழித்திருந்தார்கள். இந்த அன்புக்கு ஈடு இணை கிடையாது.

அந்த அன்பு நன்றிக்கடனாக மலர்ந்ததல்ல. அது இறையருளின் கொடை. தாயன்பின் வெளிப்பாடு பார்ப்பதற்கு பைத்தியம் போல் தோன்றும். அதனால் தான் பெற்ற மனம் பித்து என்றார்கள். பிள்ளைகளாகிய நாம் நன்றிக் கடன் பட்டுள்ளோம். நமது தாய், தந்தையரை கடைசி மூச்சு இருக்கும் வரை கண் கலங்காது காத்துக் கவனிப்பது நம் எல்லோரினதும் பொறுப்பு. அந்தப் பொறுப்பு பிள்ளைகளின் கழுத்தில் மாட்டப்பட்டுள்ள தவிர்க்க முடியாத செஞ்சோற்றுக் கடன் வளையம்.

இஸ்லாம் பெற்றோரின் நலன் பேணுதல் குறித்து அதியுயர்ந்த அந்தஸ்தை வழங்கியுள்ளது. அவர்களின் விருப்பத்திற்கு மாறு செய்வதும் மனநோவினை செய்வதும் பெரும்பாவங்களில் மிகப் பெரியதாக வகைப்படுத்தியுள்ளது. மனித வாழ்வின் கண்ணியம் சுபீட்சம், உயர்வு, மகிழ்ச்சி யாவுமே பெற்றோரை பேணிக் காப்பதில் தங்கியுள்ளது என இஸ்லாம் வலியுறுத்திக் கூறுகிறது.

## அல்குர்ஆனில் பெற்றோர் நலன் பேணல்

"உம்முடன் இருக்கும் அவ்விருவருமோ அல்லது இருவரில் ஒருவரோ முதுமையை அடைந்தால் அவ்விருவரையும் நோக்கி 'சீ' என்ற வார்த்தையை கூட கூறாதே! அவ்விருவரிடமும் மரியாதையான வார்த்தைகளால் பேசுங்கள். (17:23)

பெற்றோர் முதுமையடைந்து அவர்கள் படுக்கையில் குழந்தைகள் போல் அசிங்கம் செய்திருந்த சமயங்களில் துர்நாற்றம் தாங்காது நீங்கள் "சீ" என மனம் கசந்து கொள்வது கூட கூடாது' என்பதையே இந்த வசனம் சுட்டிக் காட்டுகிறது. அந்தளவுக்கு பொறுமையுடன் பெற்றோர் மனம் நோகாது பேணுவது பிள்ளைகளின் பொறுப்பு என்பதையே அல்குர்ஆன் வலியுறுத்திக் கூறுகிறது.

"பெற்றோர் நலன் பேண வேண்டுமென்று நாம் மனிதனுக்கு வலியுறுத்தியுள்ளோம். அவனை அவனது தாய் பலவீனத்துக்கு மேல் பலவீனப்பட்டவளாக வயிற்றில் சுமந்தாள். மேலும் அவன் பால்குடி மறக்க இரண்டு ஆண்டுகள் பிடித்தன. எனவே எனக்கும், உனது பெற்றோருக்கும் நன்றி செலுத்துவாயாக! (அல்குர்ஆன் 31:14)

பெற்றோர்களுக்கு உபகாரம் செய்வதற்கு நியாயம் கூறும் போது தாய் அவனை சுமந்து பெற்றெடுத்ததை அல்குர்ஆன் இங்கு நினைவு கூருகிறது. ஒரு தாய் குழந்தையை பெற்று எடுப்பதைப் போல் ஒரு சிரமம் உலகில் இருக்காது. அவள் மரணத்தின் எல்லைக்கு சென்று ஒரு உயிரை வாங்கி வருகின்றாள். அதற்கு ஈடு இணை கிடையாது என்பதை இந்த வசனம் சுட்டுகிறது.

## அல்லாஹ்வை வணங்குவதற்கு அடுத்ததாக பெற்றோரைக் கவனித்தல்

அல்லாஹ்வை மட்டும் வணங்க கட்டளை இடுவதுடன் பெற்றோர்களுக்கும் உபகாரம் செய்யுமாறும் அல்குர்ஆன் கட்டளை இடுகிறது.

"என்னைத் தவிர வேறு யாரையும் வணங்காதீர்கள்! பெற்றோர்க்கு உபகாரம் செய்யுங்கள்! என்று உமது இறைவன் கட்டளையிட்டுள்ளான். (அலர்குர்ஆன் 17:23)

அல்லாஹ்விற்கு இணை கற்பிக்காமல் இருப்பது எவ்வளவு அவசியமோ அதே போல் பெற்றோர்களுக்கு உபகாரம் செய்வதும் அவசியமாகும் என்பதையே இஸ்லாம் வலியுறுத்துகிறது.

இந்த வசனப் பிரயோகம் பெற்றோருக்கு நேரடியாக உபகாரம் செய்ய வேண்டும் என்பதை நுணுக்கமாக கூறுகிறது. பெற்றோரை கவனிப்பது என்பது சேவைக்கு ஆள்வைத்து பராமரிப்பது அல்ல. அல்லது அநாதை இல்லங்களிலும், பராமரிப்பு இடங்களிலும் பெற்றோர்களை கொண்டு போய் சேர்த்து விட்டு, சந்தோசமாக இருப்பதல்ல. அதனால் பெற்றோர்களின் மனம் எவ்வளவு புண்படும் என்பதை பிள்ளைகள் அறிவார்களா? பெற்றோர் மனம் புண்படுதலைத்தான் இஸ்லாம் பெரும் பாவமாக கருதுகிறது.

எனவே பெற்றோர்கள் வயோதிபம் எட்டும் போது அவர்களை வீட்டில் வைத்து கவனிப்பதே உண்மையான மதிப்பும் நலன் பேணலுமாகும் என இஸ்லாம் போதிக்கின்றது. உலக வாழ்க்கை நியதி என்ற வகையில் நாம். நமது பெற்றோர்களுக்கு என்ன செய்கின்றோமோ அதனையே நமது பிள்ளைகள் நமக்கு திருப்பிச் செய்வார்கள் என்பதை நாம் மனங் கொள்ள வேண்டும்.

## சுன்னாவில் பெற்றோரின் முக்கியத்துவம்

ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து ஜிஹாதில் கலந்து கொள்ள அனுமதி கேட்டார். நபி (ஸல்) அவர்கள், "உன் தாயும் தந்தையும் உயிருடனிருக்கின்றார்களா? என்று கேட்டார்கள். அதற்கு அம்மனிதர், "ஆம்" உயிருடனிருக்கின்றனர் என்று பதிலளித்தார். நபி (ஸல்) அவர்கள், "அப்படியென்றால், அவ்விருவருக்கும் பணிவிடை செய்து உதவி புரிவதற்காக உழைப்பீராக. (அது தான் உமது ஜிஹாத்) என்று கூறினார்கள். (புகாரி)

அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "நான் நபி (ஸல்) அவர்களிடம் "அல்லாஹ்விற்கு மிகவும் விருப்பமான செயல் எது? என்று கேட்டேன். அவர்கள், "உரிய நேரத்தில் தொழுகையை நிறைவேற்றுவது" என்றார்கள். பிறகு எது? என்று கேட்டேன். "பெற்றோர் நலன் பேணல்" என்றார்கள். பிறகு எது? என்றேன். அவர்கள், "அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத் செய்தல் என்று பதிலளித்தார்கள். (புகாரி)

## இறை திருப்தியும், கோபமும்

"தந்தையின் திருப்தியில் இறைவனின் திருப்தி உள்ளது. தந்தையின் வெறுப்பில் இறை வெறுப்பு உள்ளது" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (திர்மிதி)

தாயின் பாதங்களுக்கு கீழால் சுவர்க்கம் இருப்பது போல தந்தையின் திருப்தியில் இறைவன் திருப்தியுள்ளது. சுவர்க்கம் கிடைக்கப்பெற்றவன் நிச்சயமாக பெரும் பாக்கியசாலி. சுவனத்தில் கிடைக்கும் அதியுயர்ந்த வெகுமதி படைத்த ரப்பின் திருப்தியை பெறு வதாகும். பெற்றோர் நலன் பேணுவதால் இரண்டுமே கிடைக்கின்றன.

நபி (ஸல்) அவர்கள், "அவனுக்கு அவமானமும் இழிவும் உண்டாகட்டும் மீண்டும், அவனுக்கு அவமானமும் இழிவும் உண்டாகட்டும். பிறகும், அவனுக்கு அவமானமும் இழிவும் உண்டாகட்டும்" என்று கூறினார்கள். அப்போது அல்லாஹ்வின் தூதரே! "யாருக்கு" என கேட்கப்பட்டது. அதற்கு நபி (ஸல்) அவர்கள், 'தம் பெற்றோரில் ஒருவரையோ அல்லது அவர்கள் இருவரையுமோ முதுமைப் பருவத்தில் அடைந்தும் அவர்களை மனம் நோகாமல் பேணிக்காக்கத் தவறியவனுக்கு இழிவும் அவமானமும் உண்டாகட்டும் என்று பதிலளித்தார்கள். (முஸ்லிம்)

தாய் பிற மதத்தவளாக இருந்தாலும் கூட நல்லமுறையில் கவனிப்பது பிள்ளையின் கடமையே என நபி (ஸல்) கூறியுள்ளார்கள். அஸ்மா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நபி (ஸல்) அவர்களுடைய காலத்தில் என் தாயார் ஆசையாக என்னிடம் வந்தார். அப்போது அவர் இணைவைப்பவராக இருந்தார். நான் நபி (ஸல்) அவர்களிடம் "என் தாயார் வந்துள்ளார். அவருடன் உறவைப் பேணிக்கொள்ளட்டுமா? என்று கேட்டேன். நபி (ஸல்) அவர்கள், ஆம் என்று கூறினார்கள். (புகாரி)

## பெற்றோருக்கு நோவினை செய்தல்

பெற்றோர் மனதை நோவிப்பது பெரும் பாவங்களில் மிகவும் பெரிய பாவமாகவே இஸ்லாம் பட்டியல் படுத்தியுள்ளது. மார்க்கம் தடுக்காத விடயங்களில் அவர்கள் விருப்பத்திற்கு மாறு செய்வது பெரும் பாவம் என ஹதீஸ் கூறுகிறது. பெற்றோருக்கு மாறு செய்தல் என்றால் என்ன? என்பதை பின்வரும் உதாரணங்களினூடாக புரிந்து கொள்ளலாம்.

பெற்றோர் கண்டிப்பாக செய்யும்படி கூறிய ஒரு கட்டளையை முடியுமாக இருந்தும் உதாசீனம் செய்தல் ஒரு பாவமான காரியமே. அவர்களின் விருப்பங்களை மறுக்காவிட்டாலும் கடுகடுப்போடு முகம் சுளித்த வண்ணம் நடந்து கொள்ளுதல், அவர்கள் கேட்டதை நிறைவேற்றுவதை பாரமாக கருதுதல், அவர்களை தட்டந்தனியாக விட்டு விட்டு அநாவசியமான நீண்ட பயணங்களை மேற்கொள்ளுதல் போன்றன பெற்றோருக்கு செய்யும் நோவினையாகும். அவ்வாறே அவர்களை சகல விடயங்களிலும் முந்துதல், அவர்களுக்கு முன்னால் உரத்துப் பேசுதல், அவர்களை உறுக்கிப் பார்த்தல், அவர்களுக்கு முன்னால் நடந்து முந்திக் கொண்டு நடந்து செல்லுதல் போன்ற செயற்பாடுகள் பெற்றோர் மனம் புண்படும் செயற்பாடுகளாகும். மேலும் தனிமையில் அல்லது பிறர் மத்தியில் மரியாதைக் குறைவாக நடத்துதல், அவர்களுக்கு துரோகம் செய்தல், பாவமல்லாத காரியங்களில் கட்டுப்படாமல் நடந்து கொள்ளுதல், அவர்களுக்கு செலவளிப்பதில் கஞ்சத்தனம் காட்டுதல், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அவர்களைத் திட்டுதல், ஏசுதல் போன்ற விடயங்கள் பெற்றோர் மனம் வேதனைப்படும் காரியங்களாகும். இவ்வாறான செயல்களைத்தான் நபிகளார் பெரும்பாவங்களில் பெரியது என எச்சரித்துள்ளார்கள்.

## பெற்றோருக்கு மாறு செய்வதால் வரும் விளைவுகள்

பெற்றோர் மனம் நோகச் செய்பவனின் வாழ்வில் தோல்வியும் பின்னடைவும் ஏற்படும். அவன் சமூகத்தில் ஒரு புத்திஜீவியாக கருதப்பட்டாலும் கற்ற கல்வியில் அபிவிருத்தி எனும் பரகத்தை இழந்துவிடுவான். பரகத், கிடைக்கப் பெறாத அனைத்தும் **(பக்.14)**

---

# பலஸ்தீன் நிலமும் சமூகமும்



அறபு மூலம் : கலாநிதி முஹ்ஸின் முஹம்மது ஸாலிஹ்

தமிழில்: யூ.கே.றமீஸ் (விரிவுரையாளர், பாதிஹ்.)

கலாநிதி முஹ்ஸின் முஹம்மது ஸாலிஹ், பலஸ்தீன் வரலாறு மற்றும் அரசியல் துறையில் நிபுணத்துவம் பெற்றவர். பலஸ்தீனின் பண்டைய வரலாறு முதல் சமகால அரசியல் போக்கு வரை நீண்டு செல்லும் அவரது ஆய்வுகள் நான்கு பாகங்களைக் கொண்ட நூல்களாக வெளிவந்துள்ளன. 2002 இல் மலேசியாவின் கோலாலம்பூரில் மீள்பதிப்பைக் கண்ட அவரது நூலின் முதற் பாகம் இங்கு தமிழில் பெயர்க்கப்படுகின்றது.

**பலஸ்தீனர்கள் தமது நிலங்களை சுய விருப்பின் அடிப்படையில் விட்டுவிட்டார்களா?**

1800 வருடங்களாக பலஸ்தீனில் மீள் குடியேறும் எண்ணத்தை யூதர்கள் வெளிப்படுத்தவில்லை. அதற்கான எந்த செயற்பாடுகளில் இறங்கவுமில்லை. பல சந்ததிகள் மீள் குடியேறும் எண்ணம் இன்றியே மரணித்துவிட்டார்கள். தர்க்க ரீதியாக இதனை நோக்கினால் "யூதர்கள் பலஸ்தீனில் உரிமையை இழந்துவிட்டார்கள்" என்றுதான் கூற வேண்டும்.

இது ஒரு வரலாற்று திரிபாகும். நடைமுறை உண்மைகளும், வரலாற்று சான்றுகளும், யூதர்களே இதற்கு மாறாக ஏற்றுக் கொண்டுள்ளமையும் இதனை நிரூபிக்கிறது. பலஸ்தீனர்கள் சுயமாக வெளியேறவுமில்லை. அரபுத் தலைவர்கள் அதனை தூண்டவுமில்லை. அவர்களை தக்கவைத்துக்கொள்ளவோ, அவர்களோடு சகவாழ்வுடன் செயற்படவோ சியோனிச தலைவர்கள் முயற்சிக்கவுமில்லை.

1961ம் ஆண்டு அயர்லாந்தை சேர்ந்த பத்திரிகையாளரான Erskine Childers என்பவர் பல மாதங்கள் இஸ்ரேலில் தரித்திருந்து பலஸ்தீனர்கள் வெளியேறியமைக்கான காரணியை ஆய்வுசெய்தார். சியோனிச தலைமைகளை சந்தித்து அவர்களது தர்க்கங்களை நிரூபிப்பதற்கான ஆதாரங்களை கோரினார். ஆனால், அவர்களால் ஒரு ஆதாரத்தை கூட முன்வைக்க முடியவில்லை. அரபு வானொலிகள் பலஸ்தீனர்களின் வெளியேற்றத்தை தூண்டியது என்பதை அவர்களால் நிரூபிக்க முடியவில்லை. அதன் பின்னர் குறித்த பத்திரிகையாளர் பிரித்தானிய, அமெரிக்க வானொலி நிலையங்களை நாடி 1948 வரையான அனைத்து ஒலிபரப்புகளையும் ஆய்வுக்கு உட்படுத்தினார். அதன் பின்னர் அவர் கூறிய வார்த்தை இதுதான். "பலஸ்தீனுக்கு வெளியிலோ அல்லது பலஸ்தீனுக்கு உள்ளிருந்தோ எந்தவொரு அரபு வானொலியும் பலஸ்தீனர்கள் வெளியேற வேண்டும் என்று கட்டளை பிறப்பிக்கவோ, கருத்து கூறவோ, குரலெழுப்பவோ இல்லை" மாற்றமாக பலஸ்தீனர்கள் பலஸ்தீனில் தொடர்ந்து இருக்க வேண்டும். அங்கிருந்து சென்றுவிடக் கூடாது. என்ற கருத்துகள், கட்டளைகள், வேண்டுதல்கள் தொடராக ஒலிபரப்பப்பட்டுள்ளன.

அவர் கண்டறிந்த இன்னொரு விடயம்தான் "இக்கால கட்டத்தில் அரபு மொழியான இஸ்ரேலிய வானொலி பலஸ்தீனர்கள் வெளியேற வேண்டும் என்று தொடராக நிகழ்ச்சிகளை ஒலிபரப்பியது என்கிறார். (Salman Abu Sitta- Palestine Right Return Page - 23,24)

அரபு படைகளுக்கு இடம்கொடுத்துவிட்டு பலஸ்தீனர்கள் வெளியேறிவிட வேண்டும் என்று அரேபிய உயர் சபை ( லஜ்னதுல் அரபிய்யதில் உல்யா) கட்டளை பிறப்பித்ததாக சியோனிச பரப்புரையாளர்கள் தெரிவிப்பது சுத்தப் பொய்யாகும். இதற்கு மாற்றமாகவே நிகழ்ந்தது. 08.03.1948 திகதியிடப்பட்ட ஒரு கடிதத்தில் அவர்கள் பலஸ்தீனர்கள் வெளியேறுவதனை அரபு அரசுகள் தடுத்து நிறுத்த வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

யூத ராஜ்யத்தை உருவாக்குதல், ஏனைய சமூகங்களை விரட்டிவிடுதல் என்பனதான் சியோனிச கனவாக இருந்தது. இதுதான் உண்மையான நிலவரம். சியோனிச அமைப்பை உருவாக்கி அதன் முதல் தலைவராக இருந்த தியோடர் ஹேர்ஸல் அவரது ஒரு குறிப்பிலே "பலஸ்தீனர்களை துரத்திவிட வேண்டும். ஏனைய சமூகங்கள் இல்லாத நாட்டை இரகசியமாகவும், கவனமாகவும் உருவாக்க வேண்டும்" என்கிறார். 1937ம் ஆண்டு சியோனிச தலைவர்களுள் ஒருவராக இருந்த டேவிட் பென்கூரியன் "யூதர்கள் அரபிகளை விரட்டிவிட வேண்டும் அந்த இடங்களை கையப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அறைகூவல் விடுக்கிறார். (கிளிபட் ரைட்;ஹகாஇக் வஅபாதீல் பிஸ்ஸிராஇல் அரபி பக்கம் 24-31)

1940களில் சியோனிச குடியேற்றங்களுக்கு நிர்வாக அதிகாரியாக இருந்த யூசுப் வெய்ட்ஸ் (Yosef Weits) கூறிய வார்த்தைகள் எழுதப்பட்டுள்ளது. "இந்த நாட்டில் இரண்டு இனங்கள் வாழ முடியாது என்பதனை நாம் தெளிவாக புரிந்துகொள்வது அவசியமாகும். எனவே, அறபிகளற்ற பலஸ்தீன்தான் ஒரே தீர்வாகும். இதனை நிறைவேற்ற வேண்டுமாயின் பக்கத்திலிருக்கின்ற நாடுகளுக்கு அவர்களை விரட்டிவிடுவதை தவிர வேறு வழிகள், இல்லை" என்கிறார்.

பலஸ்தீனர்களை அவர்களது நிலங்களில் இருந்து விரட்டியடிப்பதற்காக பல பெரிய திட்டங்கள் தீட்டப்பட்டமையை சியோனிசம் பிற்காலத்தில் ஏற்றுக்கொண்டது. தாலீத் திட்டத்தை உதாரணமாக குறிப்பிடலாம். இந்த திட்டத்தை எதிர்க்கும் பலஸ்தீன கிராமங்கள் அழிக்கப்படல் வேண்டும். அவர்கள் யூத நாட்டின் எல்லைகளுக்கு வெளியால் விரட்டப்படல் வேண்டும் என்று கூறிய வார்த்தைகள் உத்தியோகபூர்வ சியோனிச வரலாற்றில் பதியப்பட்டுள்ளது. பின்னர் பலஸ்தீன நகர்களுக்கு இதுதான் நடந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கல்வி ஆணைக்குழு

## சீர்திருத்தத்திற்கான புதிய பிரேரணைகள்



இலங்கையின் தேசிய கல்வி அணைக்குழு நாட்டின் கல்வி தொடர்பில் அவ்வப்போது பிரேரணைகளை முன்வைப்பதும் அறிக்கைகளை சமர்ப்பிப்பதும் வழக்கம். அவை அமுலுக்கு வருகின்றதா இல்லையா என்பது ஒருபுறமிருக்க, ஊடகங்களில் சில காலம் பேசுபொருளாக்கப்படுகின்றது என்பது மாத்திரம் உண்மையாகும்.

தற்போது தேசிய கல்வி ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கை, தனியார் பாடசாலைகளையும் தனியார் வகுப்புக்களையும் இலக்கு வைத்துள்ளது. இவை இரண்டையும் கண்காணிப்பதற்கான அதிகாரம் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட் வேண்டும் என்று பரிந்துரை செய்துள்ள ஆணைக்குழு, இலங்கையின் கல்வி முறை அரசியல் மயமாக்கப்படக் கூடாது எனவும் வேண்டியுள்ளது.

ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் லக்ஷ்மன் ஜயதிலக்க, 27 ஜனவரி 2017 ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் இந்த அறிக்கையை சமர்ப்பித்துள்ளார். பொதுக் கல்வி தொடர்பாக ஒரு புதிய தேசியக் கொள்கைக்கான பரிந்துரைகள் அதில் உள்ளடக்கப்பட்டிருப்பினும், தனியார் போதனா வகுப்புகள் மற்றும் தனியார் பாடசாலைகளை கண்காணித்தல் தொடர்பில் அதிகூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அறிக்கை மிக விரைவில் கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசமூடாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

தனியார் பாடசாலைகள் மற்றும் சர்வதேச பாடசாலைகளில் தரக் கட்டுப்பாடு, தராதரப்படுத்தல், பதிவு செய்தல், ஒழுங்குபடுத்தல் தொடர்பான ஓர் அதிகார சபை கல்வியமைச்சுடன் இணைந்த வகையில் ஸ்தாபிக்கப்பட வேண்டும் என அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, தனியார் வகுப்புக்கள் நடைபெறும் இடங்கள், மாணவர் தொகை, வகுப்புக் கட்டணம் என்பவற்றை சோதிப்பதற்கும் ஒழுங்குபடுத்துவதற்கும் அனுமதிப் பத்திரம் வழங்குவதற்குமான ஒழுங்கு முறைகளும் கல்விச் சட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

நாட்டில் நடைமுறையிலுள்ள டியூஷன் வகுப்புகள் எதிர்பார்க்கப்படும் தரத்தில் உள்ளனவா என்பது மேற்பார்வை செய்யப்பட வேண்டும். அதற்குத் தகுதியான பௌதிக வசதிகளை நடாத்துனர்கள் கொண்டள்ளனரா என்பதை உறுதி செய்ய வேண்டும். இதற்கென நிலையான ஒழுங்கு விதிகள் வகுக்கப்பட வேண்டும். அது பாராளுமன்றத்தில் சட்டமாக்கப்பட வேண்டும். இச்சட்ட விதிமுறைகளை மீறுகின்ற டியூஷன் நிலையங்களும் உரிமையாளர்களும் தண்டிக்கப்பட வேண்டும்.

இதேவேளை, பாடசாலை முகாமைத்துவத்தோடு தொடர்பான அதிபர்கள், நிருவாகிகள், ஆசிரியர்கள் எவரும் வணிக விரிவாக்க நடவடிக்கைகளில் நேரடியாகவோ மறைமுகமாகவோ பாடசாலை வளாகத்தில் ஈடுபடுவது தடுக்கப்பட வேண்டும்.

பாடசாலை வைபவங்களில் தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட அரசியல்வாதிகள், மாகாண அரசியல்வாதிகள் பங்குகொள்வதும் தடுக்கப்பட வேண்டும். அவர் அதிதி என்ற வகையிலோ, பிரதம அதிதி என்ற வகையிலோ இவ்வாறு கலந்துகொள்வது சட்ட ரீதியில் தடுக்கப்பட வேண்டும்.

ஏற்கனவே கல்வி அமைச்சின் தர முகாமைத்துவம், முறைமைச் சீர்திருத்தம் தொடர்பான பிரிவொன்று உருவாக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் கல்விக்கு ஒதுக்கும் நிதியின் அளவுக்கு ஏற்ப முன்னுரிமையின் அடிப்படையில் தனியார் கல்வி முறையை மேற்பார்வை செய்யும் சட்ட ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என தேசிய ஆணைக்குழு தமது அறிக்கையில் பரிந்துரை செய்துள்ளது.

அனைத்துப் பாடசாலைகளும் மாணவர்களுக்கு கல்விச் சேவை வழங்குனர் நிறுவனமாகப் பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என வேண்டியுள்ளதோடு, பொதுக் கல்வி முறைமை அரசாங்க, தனியார், முறைசார், முறைசாரா என அனைத்துக் கல்வி முறையையும் உள்ளடக்க வேண்டும் எனவும் பரிந்துரைத்துள்ளது.

குழந்தைப் பருவத்திலிருந்து 18 வரையான பருவம் மாணவர் பருவம் என்று வரையறை செய்யப்பட வேண்டும். 4 - 18 வயது வரையான கல்வி கட்டாயக் கல்வியாக்கப்படுவதோடு, மீறுகின்றவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். வருடாந்தம் பாடசாலை செல்லும் நாட்களின் எண்ணிக்கையும் மீள் வரையறை செய்யப்பட வேண்டும். மாணவர்களின், ஆசிரியர்களின் பணி மணித்தியாலங்கள் மிகச் சரியாக வரையறுக்கப்பட வேண்டும். வகுப்பறைக் கற்றலுக்கு வெளியில் முன்னெடுக்கப்படும் இணைப் பாடவிதான செயற்பாடுகள் குறித்தும் மீள் வரையறைகளும் விதிமுறைகளும் வகுக்கப்பட வேண்டும். விளையாட்டு மற்றும் கலாசார நிகழ்ச்சிகளில் ஏதேனுமொன்றில் மாணவர்கள் இணைவது கட்டாயமாக்கப்பட வேண்டும். அதன் மூலம் அவர்களின் குழுச் செயற்பாடு ஊக்குவிக்கப்படும்.

பாடசாலை மட்டத்தில் இடம்பெறும் துஷ்பிரயோகங்களைத் தவிர்ப்பதற்கு ஏற்ற வகையில் பாடசாலைச் சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். இணைப் பாடவிதான செயற்பாடுகளின் போது மாணவர்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்ற நிலைமை உள்ளது. இதனைத் தவிர்ப்பதற்கான ஏற்பாடுகள் அவசியம்.

தனியார் பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் முகாமையாளர்கள், நிறைவேற்று அதிகாரிகள், போதனாசிரியர்கள் போன்றோருக்கான தகுதி விதிகளும் சட்டத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட வேண்டும் என தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை வேண்டுகோள் விடுக்கின்றது.

# ரன்தா அப்துல் பத்தாஹ்




## அவுஸ்திரேலிய நாவல் ஆசிரியை

அவுஸ்திரேலியாவில் சுமார் 5 இலட்சம் முஸ்லிம்கள் வாழ்கின்றனர். அவர்கள் அறபு முஸ்லிம் நாடுகளிலிருந்து அங்கு இடம்பெயர்ந்தவர்கள். தொடக்கத்தில் அவர்கள் மத்தியில் இஸ்லாமிய அடையாள உணர்வு இருக்கவில்லை. அவர்கள் பிற மக்களோடு கலந்து தமது அடையாளத்தைத் தொலைத்தனர்.

அவுஸ்திரேலியாவில் குடியேறிய முதற் தலைமுறையினர் தமது சமயத் தனித்துவங்களை இழந்து நின்றனர். அவுஸ்திரேலியப் பெண்களைத் திருமணம் செய்தனர். தாய் வழி ரீதியாகவே குழந்தைகள் வளர்க்கப்பட்டனர். அதனால் மேலைய கலாசாரப் பெறுமானங்களால் ஆளப்படும் நிலை உருவானது.

தொழுகை, நோன்பு, ஹஜ் போன்ற வணக்க வழிபாடுகளையே அவர்கள் முறையாக மேற்கொள்ளும் முஸ்லிம்களாக இருக்கவில்லை. சக சமூகங்களோடு ஏற்பட்ட கலப்பும் நெருக்கமும் இந்நிலையை ஏற்படுத்தியது. தென்அமெரிக்காவிலிருந்து புலம்பெயர்ந்த முதற் தலைமுறை முஸ்லிம்களின் நிலைமை இவ்வாறே காணப்பட்டது.

பின்னர் எகிப்து, பலஸ்தீன், சிரியா போன்ற நாடுகளிலிருந்து புலம்பெயர்ந்த முஸ்லிம்களினால் உருவான புதிய தலைமுறையினரிடையே இஸ்லாமிய அடையாளமும் தனித்துவமும் மேலோங்கியது. இப்புதிய தலைமுறையின் பிரதிநிதியே ரன்தா அப்துல் பத்தாஹ். இவர் பலஸ்தீன்-எகிப்து பெற்றோருக்குப் பிறந்தவர். அவுஸ்திரேலியாவில் தேசிய புகழ்பெற்ற ஒரு நாவலாசிரியர்.

1979 ஜூன் 06 தலைநகர் சிட்னியில் பிறந்த ரன்தாவின் நாவல் 2005 இல் வெளியானது. Does my head look big in this? என்பது அதன் பெயர். சிட்னியில் பிறந்து, மெல்போர்னில் வளர்ந்த ரன்தா, கத்தோலிக்க ஆரம்பப் பாடசாலையிலும், பின்னர் இரண்டாம் நிலைக் கல்வியை இஸ்லாமியக் கல்லூரிகளிலும் பெற்றார். 6 ஆம் ஆண்டில் கற்றுக்கொண்டிருந்த வேளை, அவரது முதல் நாவல் எழுதப்பட்டது. 12 வயதில் அனேக சிறுகதைகளை பத்திரிகைகளுக்கு எழுதத் தொடங்கினார்.

மெல்போர்ன் பல்கலைக்கழகத்தில் கலை மற்றும் சட்டத்துறை பட்டதாரியாக வெளியேறினார். விக்டோரியா இஸ்லாமிய சபையின் கலைக் கலாசாரப் பிரிவில் இணைந்து பணியாற்றினார். அது ஊடகங்களுடனும் பத்திரிகைகளுடனுமான அவரது தொடர்பை அதிகரித்தது. இவர் ஒரு மனித உரிமை செயற்பாட்டாளராகவும் விளங்குகின்றார்.


ஐக்கிய கட்சியின் அபேட்சகராக 1998 இல் மாநிலத் தேர்தலிலும் அவர் குதித்தார். மதங்களுக்கிடையிலான கலந்துரையாடலில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வரும் இவர், இஸ்லாமிய பெண்கள் நலன் சபை, விக்டோரியா புலம்பெயர் வள நிலையம், அவுஸ்திரேலியா அறபு சபை, பலஸ்தீன மனித உரிமை சபை என்பவற்றில் தன்னார்வத் தொண்டராக தன்னை இணைத்துக் கொண்டு பணிபுரிந்து வருகின்றார்.

பலஸ்தீன், இஸ்லாம் என்பன குறித்து இவர் அடிக்கடி ஊடகங்களில் விமர்சிக்கப்படுவதுண்டு. அவுஸ்திரேலியாவின் சில தேசிய தொலைக்காட்சி அலைவரிசைகளில் ஒரு நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் முன்வைப்பாளராகவும் பணியாற்றிய அனுபவமும் அவருக்குள்ளது. சமூக நீதி, சமத்துவம் தொடர்பாகவும் அவர் பல நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றார். ஐக்கிய இராச்சியம், புரூனை, தென்னாபிரிக்கா, சுவீடன் போன்ற நாடுகளுக்கு எழுத்து மற்றும் புத்தகக் கண்காட்சி தொடர்பான பயணங்களிலும் இவர் கலந்துகொண்டுள்ளார்.

தற்போது தனது கணவரோடும் இரண்டு குழந்தைகளோடும் தலைநகர் சிட்னியில் வசித்து வருகிறார். அவரது புகழ்பெற்ற நாவல்களில் குறிப்பிடத்தக்கன இவை.

- Does my head look big in this? 2005
- Ten things I hate about me (2006)
- Where the street had a name? (2008)
- Noah's Law (2010)
- The friendship Matchmaker (2011)
- The friendship Matchmaker goes under cover (2012)

# கற்றலில் கிரகித்தல்



கற்றலில் ஆர்வம், மன ஒருமைப்பாடு, ஆழ்ந்த வாசிப்பு எனும் வரிசையில் அடுத்த படியாக அமைவது கிரகித்தல் ஆகும். கிரகித்தல் முறையாக நிகழும்போதே கற்றவை போதுமானளவு நினைவில் தங்குகின்றது. ஆக கிரகித்தல், நினைவில் வைத்தல் என்பதற்கு முன்னுள்ள கட்டமாகும்.

அகராதிக் கருத்தின்படி Comprehension என்பது விளங்குதல் (Understanding) எனும் அர்த்தத்தைத் தருகிறது. எனினும், விளங்குதல் மற்றும் கிரகித்தல் ஆகிய இரண்டுக்கும் இடையில் மெல்லிய வேறுபாடு உள்ளது. ஆங்கிலத்திலுள்ள Comprehension எனும் சொல் Comprehensiveness எனும் மூலச் சொல்லிலிருந்தே பிறந்தது. விரிவானது என்பதே அதன் அர்த்தம்.

இங்கு மேலோட்டமாக விளங்குதல் எனும் அர்த்தத்தை விட ஒன்றைப் பூரணமாகவும் ஆழமானதாகவும் விளங்குவதையே கிரகித்தல் என்கின்றோம். ஆங்கில மொழியை நாம் விளங்கிக் கொள்ளலாம். அல்லது புரிந்து கொள்ளலாம். ஆனால், வேதியியலை கிரகிப்பது கடினமானது. மொழிக்கும் வேதியியலுக்கும் இடையில் வேறுபாடு இருப்பது போன்று விளங்குவதற்கும் கிரகிப் பதற்கும் இடையில் வேறுபாடு உள்ளது.

ஒரு மாணவன், பாடத்தை கிரகிக்கின்றான் என்பது பல்வேறு அர்த்தங்களைப் பொதிந்தது. அதில் மேலோட்டமாக விளங்குதல் உள்ளிட்டு, பாட உள்ளடக்கத்தின் ஆழ அகலங்களைப் புரிந்துகொள்ளுதல் என்பதுதான் கிரகித்தல் மூலம் கருதப்படுவது.

கருத்தியல் (Concept) சார்ந்த விடயங்களை விளங்குதல் என்பதை விட கிரகித்தல் என்பதே பொருத்தமானது. Comprehend என்பது வினைச் சொல்லாகும். இது Comprehendere எனும் லத்தீன் மொழிச் சொல்லிலிருந்து வந்துள்ளது. பிடித்தல் (Catching) இதன் அடிப்படைக் கருத்தாகும். இச்சொல் 2 விடயங்களை உள்ளடக்கியிருக்கின்றது.

1. கருத்தைத் தெளிவாகப் புரிந்துகொள்ளல்.

2. உள்ளீர்த்தல், தழுவுதல், உள்ளடக்கத்தைப் பதித்தல்

கிரகித்தல் இல்லாத கற்றல் செயன்முறை பூச்சியத்திற்கு ஒப்பானது. வகுப்பறையில் ஆசிரியர் கற்பிக்கும் போது மாணவன் அதனை எவ்வாறு கிரகிக்கின்றான் என்பதைப் பொறுத்தே அவனது நினைவாற்றலின் அளவும் மீட்டறியும் ஆற்றலின் அளவும் தீர்மானிக்கப்படுகின்றது.

மாணவர்களிடம் ஏற்படும் கிரகித்தல் ஒரு உளம் சார் திறன் (Mental Skill) எனக் கருதப்படுகின்றது. ஒரே நேரத்தில் கிரகித்தல் ஒரு படிமுறையாகவும் செயற்கிரமமாகவும் பழக்கமாகவும் திறனாகவும் உள்ளமை கவனிப்புக்குரியது. கிரகித்தலை தீர்மானிக்கும் காரணிகளில் ஆசிரியரின் கற்பித்தல் முறை, வகுப்பறையின் பௌதிக, மானசிக, அழகியல் சூழல், மாணவர்களின் மனோநிலை என பல்வேறு விடயங்கள் அடங்குகின்றன.

இதில் மாணவர் தரப்பிலிருந்து நோக்கும்போது கவனமும் மன ஒருமைப்பாடும் கிரகித்தலில் இன்றியமையாதன. கவனமில்லாமல் மன ஒருமைப்பாடு நிகழாது. மன ஒருமைப்பாடு இன்றி கிரகித்தல் எந்த வகையிலும் சாத்தியமில்லை. எனவே, தன்னியல்பாகவே அத்தகைய மாணவர்களிடம் ஒப்பீட்டு ரீதியில் நினைவாற்றலின் அளவு குறைவாகவே இருக்கும்.

மாணவர்களின் கிரகித்தல் திறனை மேம்படுத்தும் வகையிலான கற்பித்தல் உத்திகளை வகுப்பறையில் ஆசிரியர்கள் கையாள வேண்டும். மறுபக்கம், வீட்டில் பாட மீட்டலில் ஈடுபடும் மாணவர்கள் பாடங்களைக் கிரகித்து கற்றலில் ஈடுபட வேண்டும். அதுவே உண்மையான கற்றலாகவும், வினைத்திறனுள்ள கற்றலாகவும் கொள்ளப்படும்.

மேலோட்டமாக பாடப் புத்தங்களையோ பாடக் குறிப்புக்களையோ அர்த்தம் புரியாமல் வாசிப்பதனால் எந்தப் பயனும் கிட்டப் போவதில்லை. கிரகித்தல் பாடத்திற்குப் பாடம் வேறுபடுகின்றது. கணிதமும் மொழியும் விஞ்ஞானமும் நன்கு கிரகிக்கப்பட வேண்டும். மிகக் குறிப்பாக, மொழியும் எண்ணறிவும் கிரகித்தலை வேண்டி நிற்கின்றன. விளங்காமல் ஒரு கணக்கை செய்து பார்த்து தீர்க்க முடியாது. எனவே மாணவர்கள் வகுப்பறையில் ஆசிரியர் கற்பிக்கும்போதே பாடத்தை நன்கு கிரகித்துக் கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரிமைகளில்... (01 ம் பக்கத் தொடர்)

தற்போது இந்தக் காணிக்குப் பதிலாக புறநகர்ப் பகுதியொன்றில் 20 பேர்ச்சஸ் காணி மட்டுமே வழங்கப்படும் என அமைச்சர் சம்பிக்க ரணவக தெரிவித்துள்ளார்.

நகர்ப்புறத்திலுள்ள 41 பேர்ச் காணிக்குப் பதிலாக புறநகர்ப்பகுதியில் வழங்கப்படும் காணி 80 பேர்ச்சாக இருக்க வேண்டும். இதற்குக் குறைந்த எந்த இணக்கப்பாட்டுக்கும் தாம் தயாராக இல்லை என பள்ளிவாசல் நிர்வாகம் தெரிவித்து வருகிறது. இது தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர் சம்பிக்க ரணவக்க ஆகியோருடனான சந்திப்பொன்றை மேற்கொள்வதற்கு அமைச்சர் பௌஸி உறுதியளித்துள்ளதாகவும் கூறிய ஸலீம்தீன் இது எமது உரிமை. உரிமைகளில் விட்டுக் கொடுப்புக்கு இடமில்லை என மேலும் தெரிவித்தார்.

இதேவேளை வக்பு சொத்துக்களைப் பரிபாலிப்பதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் பள்ளிவாசல் நிர்வாகிகள் சட்ட ரீதியாகப் போராட முன்வந்தால் அவர்களுக்குத் தேவையான ஒத்துழைப்புக்களை வக்பு சபை வழங்கும் என வக்பு சபையின் தலைவர் சட்டத்தரணி யாசீன் தெரிவித்துள்ளார்.

## வடக்கு கிழக்கு... (01 ம் பக்கத் தொடர்)

பல தடவைகள் வேண்டுகோள் விடுக்கப்பட்ட நிலையிலேயே ஜெய்சங்கர். இந்தியாவும் இனிமேல் இணைப்பை வலியுறுத்தாது என்று தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு இணைப்பு என்பது 30 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஒரு விடயம். இடைப்பட்ட காலத்தில் ராஜீவ் காந்தி கொலை உள்பட பல்வேறு விடயங்கள் நடந்து முடிந்துவிட்டன. அதனால், தற்போது நடைமுறை சாத்தியமாக எது முடியுமோ அதைச் செய்ய வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்போது ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

இந்த விடயம் குறித்து, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சம்பந்தனிடம் பிபிசி கேட்டபோது, 'ஏற்படுத்த முடியாது என்று வெளியுறவுச் செயலர் கூறவில்லை. 1987-ஆம் ஆண்டு உடன்படிக்கைக்குப் பிறகு, நாட்டில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. அதற்கு ஏற்றவாறு, மாற்று யோசனையைப் பரிசலீப்பது புத்திசாலித்தனமாக இருக்கும் என்று வெளியுறவுச் செயலர் கூறினார்' எனத் தெரிவித்தார்.

## பெற்றோரை மதிப்போம்... (12ம் பக்கத் தொடர்)

குறைபாடுடையதாகும். இது ஒரு வகையில் தண்டனை யாகவும் அமையும். அவ்வாறே பெற்றோர் மனதை நோவித்தவனுக்கு அவர்களது பிராத்தனை கிட்டாது. அவர்களின் துஆ கிடைக்காதவன் வாழ்கையில் நிச்சயம் சறுக்கி விழுவான். இறையருள் இல்லாதவன் எழுந்து நிற்க முடியாது.

அத்தோடு பெற்றோர் சாபமும் சேர்ந்து வந்தால் தப்பிப் பிழைக்கவே முடியாது. அதன் விளைவாக இறை கோபம் அவனை துரத்திக் கொண்டு வரும். அதிலிருந்து தப்புவதற்கு வழியே கிடையாது. மொத்தத்தில் அவன் இம்மையிலும் மறுமையிலும் துர்ப்பாக்கிய சாலியாக இருப்பான்.

பெற்றோர் நலன் பேணாதவன் மக்கள் மத்தியில் இழிவானவனாகவே கருதப் படுவான். மதிப்பும் மரியாதையும் அற்றவனாகவே வாழ்வான். பெற்றோருக்கு மாறுசெய்தவன் தன் பிள்ளைகளிடமிருந்து அதையொத்த வேதனைகளைத்தான் பரிசாகப் பெறுவான். இது உலக வாழ்வில் நாம் காணும் நியதி. பெற்றோருக்கு மாறுசெய்பவனை அல்லாஹ் மறுமையில் பார்ப்பதில்லை என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். பெற்றோர் மனம் நொந்து கண் கலங்க வாழ்ந்தவன் மறுமையில் சுவனம் நுழைவதுமில்லை. இறைவனை கண்குளிரப் பார்க்கும் பாக்கியத்தை பெறுவதுமில்லை.

பெற்றோர் நமது கண்ணியம். வாழ்க்கைக்கு சுபீட்சம். தாய், தந்தை நல்லுறவு பேணுவது நமக்கும் நாட்டுக்கும் அபிவிருத்தி. நமது வெற்றிக்கு ஆணி வேர். இம்மையில் பாதுகாப்பு வேலி. மறுமையில் சுவனத்திற்கு உத்தரவாதம். எனவே பெற்றோரை மதிப்போம் பேணிக் காப்போம், இறை திருப்தியைப் பெற்று சுவனம் நுழைவோம்.

யா அல்லாஹ்! எமது பெற்றோர்களின் பாவங்களை மன்னிப்பாயாக! அவர்களுக்கு அருள் புரிவாயாக! அவர்கள் மனம் நோகாது நடந்து கெள்ளள அருள் செய்வாயாக! அவர்களின் திருப்திக்கு அருகதையானவர்களாக எம்மை ஆக்குவாயாக! கருணையுள்ள ரஹ்மானே நம் பெற்றோர்களை கண்குளிரச் செய்யும் பிள்ளைகளாக எம்மை ஆக்குவாயாக!

## கிழக்கில்... (05 ம் பக்கத் தொடர்)

இங்குதான் ஒரு முஸ்லிம் அரசாங்க அதிபரின் தேவை வெகுவாக உணரப் படுகின்றது. இதே பிரச்சினை திருகோணமலை மாவட்டத்திற்கும் உள்ளது. 2012 ஆம் ஆண்டின் தொகைக் கணிப்பீட்டின்படி இம்மாவட்டத்தில் 152,854 முஸ்லிம்கள் உள்ளனர். இது 40.4 வீதமாகும். இதேவேளை, 115,549 தமிழர்கள் மாவட்ட மொத்த சனத்தொகையில் 30.6 வீதத்தை பிரதிநிதித்துவம் செய்கின்றனர். ஆயினும், 101991 (27.0%) ஆக வாழும் சிங்களவர்கள் திருகோண மலை மாவட்டத்தின் முழு நிருவாக அதிகாரங்களையும் கொண்டுள்ளனர்.

தேசிய இனப்பிரச்சினைக்கு அதிகாரத்தைப் பரவலாக்கலே ஒரே தீர்வு என்று உரத்து முழங்கும் பேரினவாத சக்திகள் இக்கோஷத்தை தேர்தல் பிரச்சார கூட்டத்தோடு சுருக்கிக் கொள்கின்றனர். அதிகாரப் பரவலாக்கம் எப்படிப் போயினும், இருக்கும் நிருவாக அதிகாரங்களைக் கூட சிறுபான்மை மக்களுக்குப் பகிர்ந்தளிக்க பின்நிற்கும் இவர்களை இதற்கு மேலும் எப்படி நம்பிக்கை கொள்வது?

இலங்கை முஸ்லிம்களின் உரிமைக்காகப் போராடும் தனிக் கட்சிகளோ தெற்கில் பெரும்பான்மை சிங்களக் கட்சிகளோடு ஒட்டி உறவாடும் முஸ்லிம் தலைமைகளோ முஸ்லிம்களின் எதிர்கால இருப்புக் குறித்து சிந்திப்பார்களாயின், குறைந்தது இவ்விரு மாவட்டங்களுக்கேனும் முஸ்லிம் அரசாங்க அதிபர் ஒருவரை நியமிப்பதை பேசு பொருளாக்க வேண்டும். நல்லாட்சி அரசாங்கத்தில் இது குறித்த கோரிக்கை முன்வைக்கப்பட்டு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட வேண்டும்.

கட்சி முரண்பாடுகளுக்குள் ஒழித்து விளையாடிக் கொண்டிருக்கும் அரசியல் வாதிகள் சமூகத்தின் மிக சீரியஸான பிரச்சினைகள் குறித்து மெத்தனமாக இருப்பது மிக ஆபத்தானது. சிவில் சமூகம் பிராந்திய, கூட்டுத் தலைமைகளை உள்ளடக்கிய வலைப் பின்னல் ஒன்றின் மூலம் இத்தகைய நெருக்கடிகளுக்குத் தீர்வு காண முன்வர வேண்டும்.

## ஹக்கீம்... (07 ம் பக்கத் தொடர்)



குர்ஆனையும் ஹதீஸையும் மீறிய ஒருவர் முஸ்லிமாக இருக்க முடியுமா? அதுபோன்று காங்கிரஸின் யாப்பை மீறிய ஒருவர் அக்கட்சியின் உறுப்பினராக இருக்க முடியுமா? காங்கிரஸின் யாப்பின் அடிப்படையில் உறுப்பினராக இல்லாத ஒருவரே ஹக்கீம். அவரே கட்சியின் தலைவராகவும் உள்ளார்.

- **நீங்கள் கட்சியின் மூத்த உறுப்பினர் என்ற வகையில் இதுபோன்ற பிரச்சினைகளை தகுந்த சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்ட வில்லையா?**

பல தடவைகளில் சுட்டிக்காட்டியுள்ளேன். 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற பேராளர் மாநாட் டின் போது சுட்டிக் காட்டினேன். 2015 இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தை தொடர்ந்து தம்புள்ளை பள்ளி வாயல் தொடர்பில் நீண்டதொரு கடிதத்தை நான் தலைவருக்கு எழுதினேன். ராஜபக்ஷ காலப்பகுதியில் இருந்து தொடர்ந்து வரும் தம்புள்ளை பள்ளிவாயல் விவகாரத்தை எம்மால் தீர்த்து வைக்க இயலாமல் போனது, உங்களுக்கு ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளது. நகர அபிவிருத்தி அதிகார சபை உங்களுடைய அமைச்சின் கீழ் உள்ளது. அதன் தலைவரை நீங்களே நியமிக்கிறீர்கள். அரசியல் நியமனங்களையும் செய்கிறீர்கள். அந்தக் காணியை ஒதுக்கிக் கொடுக்கின்ற பொறுப்பை அல்லாஹ் உங்களுக்கு சுமத்தியுள்ளான். 80 பேச்சர்ஸ் காணியை நீங்கள் கட்டாயம் ஒதுக்கிக் கொடுங்கள். 180 நாள் ஆட்சிக்கு பிறகு உங்களுக்கு வருகின்ற அமைச்சில் இந்த நிறுவனம் உங்களுடைய கையில் இருக்குமோ என்று கூற முடியாது. எனவே அக்காலப்பகுதியில் இவ்விடயத்தை செய்து கொடுப்பது உங்களுடைய கடமை என்றேன்.

அவர் அதைச் செய்யவில்லை. ஏன்? மஹிந்த ராஜபக்ஷ அதை ஏன் செய்யவில்லையோ அதே காரணத்திற்காகத்தான் ரவூப் ஹக்கீமும் அதைச் செய்யவில்லை. மஹிந்த ராஜபக்ஷ தனக்குரிய சிங்கள பௌத்த வாக்கு குறைந்துவிடும் என்பதற்காக அதைச் செய்யவில்லை. இவரும் கண்டியில் தனக்கு சிங்கள பௌத்த வாக்குகள் குறைந்து விடும், அவர்கள் அறவே வாக்களிக்க மாட்டார்கள் என்ற பயத்தில் அதைச் செய்யவில்லை. ஆகவே மஹிந்தவுக்கும் ஹக்கீமுக்கும் இந்த விடயத்தில் எந்த விதமான வேறுபாடுகளும் கிடையாது.

அழுத்கமை சம்பவம் இடம்பெற்ற போது நான் கட்சியின் உயர் பீடத்தில் வைத்து நாம் எமது அமைச்சுப் பதவிகளை ராஜினாமா செய்வோம் என்றும் பாதுகாப்பு காரணங்களுக்காக நாம் எதிர்க் கட்சிக்கு போகாமல் இந்தக் கட்சியிலேயே பின் வரிசை ஆசனத்திற்கு செல்வோம் என்றும் கூறினேன். அவர் அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை.

நாம் இருவரும் பல தடவைகளில் காரசாரமான விவாதங்களில் ஈடுபட்டிருக்கிறோம். பாராளுமன்றத்தில் பாராளுமன்ற குழுக் கூட்டம் நடப்பதே இல்லை. 2010 இற்கு முற்பட்ட காலத்தில் ஒரு முறை தேர்தல் தொடர்பான முக்கியமான சட்ட மூலமொன்றிற்கு கைச்சாத்திட வேண்டியிருந்தது. பாராளுமன்றக் குழு கூட்டம் நடை பெற்றிருந்தால்தான் என்ன செய்வது என்கின்ற தீர்மானம் எடுக்க முடியும். நாம் அப்போது எதிர்க் கட்சியில் இருந்தோம். வாக்கெடுப்பு நடைபெறுகின்றபோது நான் உட்பட மூத்த உறுப்பினர்கள் எதிர்க்கட்சி முன் ஆசனத்தில் இருந்தோம். பிந்தி வந்த ஜூனியர் உறுப்பினர்கள் ஆளும் கட்சி பக்கம் பின் வரிசையில் இருக்க வேண்டியேற்பட்டது. வாக்கெடுப்பு நடைபெற்ற நேரத்தில் எவ்வாறு வாக்களிப்பதென்பது பற்றி எமக்கு தெரியாமலிருந்தது. ஆளும் கட்சிப் பக்கம் இருந்தவர்கள் என்ன செய்ய என்று கைச்சைகையால் கேட்டார்கள். அதற்கு ஹக்கீம் கைச்சைகையால் கையை உயர்த்தி காட்டினார். இப்படி ஒரு கட்சியை எவ்வாறு நடாத்துவது எனக் கூறி நான் கோப்புக்களை அவருடைய முகத்தில் தூக்கி எறிந்தேன். இது போன்று பல பிரச்சினைகள் உள்ளன. அவற்றை இங்கு பத்திரிகையில் கூட பிரசுரிக்க முடியாது.

- **தாருஸ் ஸலாம் ஊழல் விவகாரம் தொடர்பில் குறிப்பிடுவதாயின்?**

தாருஸ் ஸலாம் மறைக்கப்பட்ட மர்மங்கள் என்றதொரு புத்தகத்தை ஒரு சில புத்திஜீவிகள் இணைந்து வெளியிட்டுள்ளார்கள். அதிலுள்ள ஆவணங்கள் அரச அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஆவணங்கள். அதன் படி, நீண்ட காலமாக திட்டமிட்டு ஒருவர் அந்த சொத்துக்களை அனுபவித்து வந்துள்ளார். அந்த சொத்துக்களை தனக்கு உடமையாக்கும் முயற்சியில் அவர் ஈடுபட்டுள்ளார். பின்னர் ஒரு அரசியல் பேரம் பேசும் ஒரு முயற்சியினூடாக ஹக்கீம் போன்றவர்கள் அவருடன் பேரம் பேசி அதில் பங்கை பெற்றிருக்கிறார்கள் என்பது தெளிவாக விளங்குகிறது.

அதை மறுப்பதாக இருந்தால் அது பொய்யானது என்று நிரூபிக்க வேண்டும். ஒரு குற்றச்சாட்டு ஆவண ரீதியாக சுமத்தப்பட்டால் அந்தக் குற்றச்சாட்டு பொய்யானது என்று நிரூபிக்கின்ற பொறுப்பு யார் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளதோ அவர்களுக்குரியது. அதை செய்யாத வரைக்கும் அவர்கள் குற்றவாளிகள் மாத்திரமல்ல. தலைகுனிந்து நிற்க வேண்டியர்களாகவே இருப்பார்கள்.

தாருஸ் ஸலாமின் சொத்துக்களை பராமரிக்கின்ற கம்பனியில் தலைவர் ஏன் பங்கெடுக்க வேண்டும். கட்சியினுடைய சொத்துப்படி அதனை பராமரிக்க ஆட்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். 4 மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற அதியுயர் பீடத்தில் கணக்கு வழக்கு கோரப்பட்ட போது அது முன்வைக்கப்படவில்லை. அவ்வளவு காலம் தாருஸ் ஸலாம் உடமையாக உள்ள பொது நிதியத்தின் இன்னின்ன கொள்கைகளுக்காக பாவிக்கப்படும் என எழுதப்பட்டுள்ளது.

அந்தப் பணத்தை பயன்படுத்தி அந்தக் கொள்கைகளில் எதை பரப்பினீர்கள் என காட்டுங்கள். அவ்வளவு காலம் வாடகை எடுத்த பணத்திற்கு என்ன நடந்தது. "3 மாடியை நஸீர் ஹாபிஸ் பராமரிக்கிறார். ஆனால் இவ்வளவு காலத்திற்கும் வாடகை கொடுக்கவில்லை. ஷபீக் ரஜாப்தீனின் சகோதரர் இருந்த அமைப்பு இவ்வளவு காலமாக அங்கு இருந்தது. அதற்கான வாடகை எங்கே? கட்சிக்கு கொடுத்தால் அதனை பொருளாளர் சமர்பிக்க வேண்டும்.

- **பிறிதொரு கட்சி உங்களை கூட்டுச் சேருமாறு அழைத்தால் உங்களது முடிவு எதுவாக இருக்கும்?**

நான் கட்சி தாவி அல்ல. முஸ்லிம் காங்கிரஸினுடைய இன்று பின்பற்றப் படாத உண்மையான முஸ்லிம் காங்கிரஸ் கொள்கைகளை பேசுகின்ற ஒருவனாகவே என் வாழ்நாளைக் கழிப்பேன். நான் ஒரு கூட்டணியை கொண்டு வர முயற்சிக்கிறேன். அக்கூட்டின் ஒட்டும் பசையாக இருப்பேன்.

## ஜெனீவாவில்... (01 ம் பக்கத் தொடர்)

அமைப்பின் பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்திருந்தது. இந்த குழுவின் விசேட அறிக்கையொன்றும் இந்த அமர்வுகளின் போது சமர்ப்பிக்கப்படவுள்ளது.

மார்ச் 15ம் திகதி சிறுபான்மை மக்களின் பிரச்சினைகள் குறித்தும் மார்ச் 22ம் திகதி இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் குறித்தும் பேசப்படவுள்ளது. இலங்கையின் சார்பில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர உள்ளிட்ட பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ளனர். இலங்கை குறித்த விவாதத்திற்கு மூன்று நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளமையால் இலங்கையின் இன்றைய நிலை குறித்து விரிவாக ஆராயப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## எழுக தமிழ்... (04 ம் பக்கத் தொடர்)

கிழக்கு முதலமைச்சருக்கு இது அவசியமானதல்ல. அவர் ஒருபோதும் வடக்கோடு கிழக்கும் இணைய வேண்டும் என்று கேட்டதில்லை. வேண்டுமானால் நட்புபூர்வமாகச் சந்திக்கலாமே தவிர, வடக்குக் கிழக்கு இணைப்பின் அடிப்படையில் அல்ல.

ஆனால், வடக்குக் கிழக்கு இணைப்பின் அவசியத்தை அவரும் உணர்வது அவசியம். அவருடைய பதவி வகிப்பு அனுபவத்திலேயே இதை அவர் உணர்ந்திருக்கிறார். இருந்தாலும் இந்த இணைப்புகள் வெறும் அரசியல் சொல்லாடல்களின் வழியாகப் புரிந்து கொள்ளப்பட முடியாதது. அதற்கும் அப்பால் அது பல நிலைகளில் நுண் இழைகளால் பின்னப்பட வேண்டியது. மட்டுமல்ல இது மிக மிக உணர்ச்சிகரமான ஒரு விசயமாகவும் இன்று ஆகியுள்ளது. எனவே இதனை விக்னேஸ்வரன் கருதுவதைப் போல எளிதாகச் சொல்லவோ கடந்து செல்லவோ முடியாது.

இவ்வளவுக்கும் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் மிகச் செறிவாக வாழ்கிறார்கள். முஸ்லிம்களின் சம்மதமும் ஆதரவும் இல்லாமல் வடக்குக் கிழக்கு இணைப்பு மட்டுமல்ல, கிழக்கு மாகாண நிர்வாகத்தில் தமிழர்களின் செயற்பாடுகள் வெற்றியளிக்கவும் முடியாது. தவிர, இப்போது கிழக்கு மாகாண சபையை முஸ்லிம் ஒருவரே முதலமைச்சராக ஆட்சி செய்கிறார். இருந்தபோதும் முஸ்லிம்களின் பங்கேற்பில்லாமல் நடந்த நிகழ்வில் முஸ்லிம்களுடன் பேசத் தயார் என்று பகிரங்க அழைப்பை விட்டிருக்கிறார் விக்னேஸ்வரன். இது என்ன மாதிரியான அர்த்தத்தை அந்தச் சமூகத்தில் உண்டாக்கியிருக்கும் என்பதைப் பற்றி அதிகமாக விளக்கத் தேவையில்லை.

இந்த நிகழ்வு குறித்து கிழக்கிலுள்ள தமிழர்களிடமும் பேசினேன். அவர்கள் தெரிவிக்கும்போது, ''ஆம். பெரிய அளவில் தமிழ் மக்களின் ஆதரவு இருக்கவில்லை என்றே சொல்ல வேணும். நல்ல முறையில் பொலிஸாரும் வீதி போக்குவரத்து பொலிஸாரும் ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர். அரச ஆசீர்வாதம் நன்றாக இருந்தது. முஸ்லிம்கள் பங்கு பற்றவில்லை. அவர்களது அரசியல் வேறாக இருப்பதால் அவர்கள் இதில் அக்கறை காட்டாமல் விட்டிருக்கலாம். ஆனால், பேரினவாத அரச ஒடுக்கு முறையும் நெருக்கடிகளும் அவர்களுக்கும் உள்ளது. ஆகவே அதை வெளிப்படுத்துவதற்காக ஏதோ ஒரு வகையில் அவர்கள் இந்தப் போராட்டத்துக்கு அண்மையாக வந்திருக்கலாம். இது இன்றைய காலத்தின் தேவையாகவே இருக்கிறது. ஆனால் அதனை வெளிக்காட்ட விரும்புகிறார்கள் இல்லை. காணி உரிமை தொடர்பான கோரிக்கைகள் அவர்களுக்கு உவப்பாய் இல்லை'' என்றார் அந்த நண்பர்.

இன்னொரு தமிழ் நண்பர் குறிப்பிடும்போது 'எழுக தமிழ்' நிகழ்வில் இஸ்லாமிய மக்களும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் மற்றைய சமூகங்களை நோக்கி சவால் விடுவது போன்ற ஒரு நடவடிக்கையாகத்தான் 'எழுக தமிழ்' நடந்தது என்று நினைக்கிறேன்'' என்றார் அவர்.

ஆகவே கிழக்கின் தமிழ் முஸ்லிம் தரப்புகளிடத்தில் பெரிய திருப்பங்களை உண்டாக்கும் வகையில் எழுக தமிழ் நடக்கவில்லை. கிழக்கில் எழுக தமிழ் உரிய முறையில் வெற்றியடைந்திருந்தால், அது அரசாங்கத்துக்கு நெருக்கடியைக் கொடுப்பதாக இருந்திருக்கும், அத்துடன் வடக்குக் கிழக்குச் சமூகங்களை ஒருங்கிணைத்திருக்கும். குறைந்தபட்சம் கிழக்கில் 30 ஆண்டுகளாக துயரத்துள் புதையுண்டிருக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதலாக, அவர்களுடைய வாழ்க்கையை மீட்கும் வழியாகவாவது இருந்திருக்கும். அப்படி இருந்திருந்தால் அவர்கள் எழுக தமிழைத் தங்களுடைய தலைகளில் வைத்துக் கொண்டாடியிருப்பர்.

என்ன செய்வது? காகிதப் பூக்களாகவே எல்லா மலர்களும் உள்ளன. யாரைத்தான் நம்புவதோ பேதை நெஞ்சம் என்ற மாதிரித்தான் எல்லாமே உள்ளன. எல்லாமே கலங்கலாக, மங்கலாகவே தெரிகின்றன.

நன்றி: தேனீ

மீள்பார்வை **உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி | ரூபா 40.00 | இந்தியா | | மத்திய கிழக்கு நாடுகள் | 4000.00 | ஐக்கிய இராச்சியம் | 5500.00 |
| 13 இதழ்கள் | ரூபா 650.00 | தனிப் பிரதி | ரூபா 100.00 | மலேசியா | 4000.00 | அமெரிக்கா | 6500.00 |
| 26 இதழ்கள் | ரூபா 1300.00 | ஒரு வருடம் | ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் | 4000.00 | அவுஸ்திரேலியா | 4700.00 |
| | | | | | | சீனா | 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது [illegible]

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline [illegible] 8164 (Branch: Sri Sangaraja Mawatha)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் தேசிய விளையாட்டு





## கரப்பந்தாட்டம் (Volley Ball)

1885 ஆம் ஆண்டு வில்லியம் மோர்கன் என்பவராலே இவ் விளையாட்டு கண்டுபிடிக்கப்பட்டது. எனினும், பின்னர் அதில் பல மாற்றங்கள் செய்யப்பட்டன. இவ் விளையாட்டு முதன் முதலில் 1964 இல் இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டியில் இடம்பெற்றது. அவ்வருடம் ஆண்களுக்கான போட்டியில் ரஷ்யாவும் பெண்களுக்கான போட்டியில் ஜப்பானும் தங்கப் பதக்கத்தைப் பெற்றன.

கரப்பந்தாட்டப் போட்டி இரண்டு வகைப்படுகின்றது. முதலாவது உள்ளக அரங்கில் அல்லது மைதானத்தில் விளையாடப்படுகின்றது. இரண்டாவது, கடற்கரையில் விளையாடப்படுவதாகும். கடற்கரையில் விளையாடும் போட்டியில் அணியில் இருவர் வீதம் இடம்பெறுவர். மற்றைய போட்டியில் அணியில் ஆறு பேர் காணப்படுவர். இவ்விரு வகை போட்டிகளும் ஒலிம்பிக் போட்டியில் இடம் பெறுகின்றமை விஷேட அம்சமாகும்.



இவ்விளையாட்டிற்கென 09 மீற்றர் அகலமும் 18 மீற்றர் நீளமும் கொண்ட மைதானமும் ஒரு பந்தும் ஒரு வலையும் அவசியமாகும்.

பந்து 25.5 - 26.5 அங்குல சுற்று வட்டத்தையும் 9.2 - 9.9 அவுன்ஸ் நிறையும் 4.3 -4.6 காற்றழுத்தத்தையும் கொண்டிருக்க வேண்டும். கடற்கரை கரப்பந்தாட்டத்திற்குரிய பந்து அளவில் சற்று பெரிதாகவும் காற்றழுத்தம் சற்று குறைந்ததாகவும் காணப்படும்.

ஒரு மீற்றர் அகலமான வலை தரையிலிருந்து சுமார் எட்டு அடி உச்ச உயரம் வரை கட்டப்படும். ஐந்து சுற்றுக்களாக இடம்பெறும் போட்டியில் மூன்றில் வெற்றி பெறும் அணி, வெற்றிபெற்ற அணியாக கருதப்படும்.

1991 ஆம் ஆண்டு இலங்கையின் தேசிய விளையாட்டாக கரப்பந்தாட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. அதுவரையும் எல்லே விளையாட்டே இலங்கையின் தேசிய விளையாட்டாக காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இன்று தேசிய ரீதியில் மிகவும் பிரபல்யம் பெற்ற விளையாட்டாக கரப்பந்தாட்டம் காணப்படுவதுடன், பாடசாலை மட்ட விளையாட்டுப் போட்டிகளிலும் இது இடம்பெற்றுள்ளது.

# பாடசாலை கட்டணம்




ஒரு ஊரில் ஒரு மனிதர் இருந்தார். அவர் எல்லா மனிதர்களுக்கும் பிரதியுபகாரம் பார்க்காது உதவி செய்பவர். யாருக்கு உதவி தேவைப் பட்டாலும் எந்த சந்தர்ப்பத்திலும் உதவி செய்பவர். ஒரு நாள் பாதையில் நடந்து சென்றுக்கொண்டிருக்கும்போது ஒரு பணப்பை விழுந்திருப்பதைப் பார்த்தார். அதனை எடுத்து திறந்துப் பார்த்தபோது அதில் பணம் எதுவும் இருக்கவில்லை. அதேநேரம் ஒரு பெண் பாதையின் மறுபுறத்திலிருந்து எனது பணப்பை, எனது பணப்பை என்று கூக்குரலிட்டுக் கொண்டு ஓடி வந்தார்.

அவருடன் ஒரு பொலிஸ் அதிகாரியும் வந்தார். அந்த மனிதரைப் பிடித்து அவரிடமிருந்த பணப்பையை எடுத்துப் பார்த்தபோது அதில் பணம் இருக்கவில்லை. அந்தப் பெண் எனது பணம் எங்கே,

student @ மீள்பார்வை

தொகுப்பு: ஏ.ஸீ.எம். நதீர்

எனது பணம் எங்கே என அந்த மனிதரிடம் கேட்டுக் கொண்டிருந்தார். பொலிஸ் அதிகாரியும் அவரிடம் பணம் எங்கே என்று கேட்டார். அவர் ஒரே பதிலையே சொன்னார். நான் இதனை கண்டெடுத்த போது இதில் பணம் எதுவும் இருக்கவில்லை.

எனினும், அந்தப் பெண் எனது மகனின் பாடசாலை கட்டணத்தை செலுத்தவே அந்தப் பணத்தை எடுத்துச் சென்றேன். எங்கே எனது பணம் என கெஞ்சினார். நிலமையைப் புரிந்துக்கொண்ட மனிதர். தனது காற்சட்டைப் பையில் இருந்த பணத்தை எடுத்து அந்தப் பெண்ணிடம் கொடுத்துவிட்டு, என்னை மன்னித்துக்கொள்ளுங்கள் என்றார்.

அந்தப் பெண் சென்றுவிட்டார். அந்த மனிதரை பொலிஸ் அதிகாரி விசாரணைக்காக அழைத்துச் சென்றார். அந்தப் பெண் மகிழ்ச்சியுடன் பாடசாலைக்குச் சென்று பணத்தை செலுத்துவதற்காக எண்ணிப்பார்த்தபோது பணம் இரட்டிப்பாக இருப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டார்.

சில மாதங்கள் கடந்தன. இன்னுமொரு நாள் அதே பாதையில் அப்பெண் சென்றுக்கொண்டிருந்த போது தற்செயலாக பின்னால் திரும்பிப் பார்த்தார். அங்கே அந்த மனிதர் வந்துக்கொண்டிருந்தார். உடனே அருகிலிருந்த பொலிஸ் அதிகாரியிடம் சென்று அந்த மனிதரைக் சுட்டிக்காட்டி தனது பணத்தை திருட வருவதாக கூறினார்.

அன்று கடமையிலிருந்த அதிகாரி ஏற்கனவே சில மாதங்களுக்கு முன்னர் கடமையிலிருந்தவர் ஆவார். அந்த சந்தர்ப்பத்தில் அம்மனிதர் பாதையில் தடுக்கி விழுவதை இருவரும் கண்டனர். இருவரும் ஓடிச்சென்று அம்மனிதரை தூக்கினர்.

பொலிஸ் அதிகாரி, அம்மனிதரை இனம் கண்டு கொண்டார். அவ்வதிகாரி, அப்பெண்ணிடம் அவர் உமது பணத்தை திருப்பித் தந்து விட்டார் அல்லவா? இவர் திருடர் அல்ல. அன்று உங்களுக்காக கவலைப்பட்டு தன்னிடமிருந்த பணத்தை எல்லாம் தந்தவர் என்று விளக்கினார்.

அந்த மனிதர், பெண்ணிடம், நீங்கள் பாதையில் செல்வதைக் கண்டேன். உங்கள் மகனின் பாடசாலை கட்டணத்தை யாரும் திருடிவிடக் கூடாது என்பதற்காகவே பின்னால் தொடர்ந்து வந்தேன். நீங்கள் சென்று பாடசாலை கட்டணத்தை செலுத்துங்கள் என்றார்.

# சிவரமணியை நினைந்து...

• சிராஜ் மஷ்ஹூர்

"எனது கைக்கெட்டிய வரை
எனது அடையாளங்கள்
யாவற்றையும்
அழித்து விட்டேன்."

என்று தனது இறுதிக் குறிப்பில் எழுதி விட்டு, வாழ்வை முடித்துக் கொண்டார் சிவரமணி. ஒரு ஆச்சரியம், போர் முடிந்த அதே மே 19 இல்தான் அவர் தற்கொலை செய்து கொண்டார். ஆனால் 2009 இல் அல்ல, 1991இல். அதாவது போர் முடிவதற்கு 18 வருடங்களுக்கு முன்னர். பெண் நிலைப்பட்ட பார்வைகளுக்காக அவர் எதிர் கொண்ட சவால்கள் கொஞ்ச நஞ்சமல்ல. அதுவே ஈற்றில் தற்கொலையில் போய் முடிந்தது.

சிவரமணி ஆறாத காயமாய் நெஞ்சில் பதிந்து போயிருக்கிறார். அவரது மரணம் மனவெளியில் இன்னும் அதிர்ந்த வண்ணமே உள்ளது. அவர் இறந்த பின்னர், அவரது கவிதைகளை பெண்கள் ஆய்வு வட்டத்தின் மூலம் சித்திரலேகா மௌனகுரு தொகுத்து வெளியிட்டார். 'சிவரமணி கவிதைகள்' என்ற அந்த நூலிலுள்ள 22ஆவது கவிதை எனக்கு மிகவும் பிடிக்கும். நூலின் கடைசிக் கவிதையான அதற்கு தலைப்பு இல்லை.

யாழ் பல்கலைக்கழக கலைப்பீட மாணவியான சிவரமணி, பொதுக்கலை இறுதிப் பரீட்சைக்குத் தோற்றாமலேயே இறந்து விடுகிறார். கலைப்பிரிவில் அரசறிவியல், ஆங்கிலம், மொழியியல் ஆகிய பாடங்களைக் கற்றார். நானும் அரசறிவியல், ஆங்கிலம், தமிழ் ஆகிய பாடங்களையே முதற் கலைத் தேர்வுக்காக எடுத்தேன். பின்னர்தான் தமிழ் விசேட துறைக்கு மாறினேன். அவரது இந்தப் பாடத் தேர்வு கூட என்னை வியப்பில் ஆழ்த்துகிறது.

பல்கலைக்கழக மாணவனாய் - அதுவும் கலைப்பீட மாணவனாய் - இருந்த எனக்கு இந்தக் கவிதையோடு மிகுந்த அனுபவ நெருக்கம் இருக்கிறது. இந்த Canteen காட்சிகள் அடிக்கடி கண் முன்னே வந்து போகும்.

என்னைத் தொந்தரவு செய்து கொண்டே இருக்கிற அந்தக் கவிதை இதுதான்:




இடம்: யாழ். பல்கலைக்கழக சிற்றுண்டிச் சாலை.
நேரம்: பி.ப.4.30

தனித்து
பிரயாணிகள் அற்று
மறைக்கப்பட்ட
ஒரு சிறிய ரயில் நிலையம் போல
ஒவ்வொருவருக்கிடையிலும்
சிரிப்புடன் கூடவே எழும்
மதிற் சுவர்களிடையே
ஒரு மாலை...
என்னுடைய நண்பர்களுடன்
நான்
கதைத்துக்
கொண்டிருக்கிறேன்.
எந்த விஷேசமுமற்ற
ஏராளமான
காயங்களுக்கிடையில்
மகிழ்ச்சியாயிருக்க விரும்பும்
பொழுதுகள்
பேசுவதற்கு சொற்களற்று
மறக்கப்பட்ட பாடலுக்கு
தாளந்தட்டிய நண்பனும்,
விரல்களும்
நடுமேசையில் சிதறிக் கிடந்த
தேநீர் துளிகள்...
அவற்றைக் குடித்து அப்புறமாய்
மேலே கிடந்த ஒட்டறைகளில்
அகப்பட்டுக் கொண்ட
இலையான்கள்...
தோள்கள் சிவக்க எனது நண்பி
தனக்குள் சிரித்தாள்
பகடி விட்டது யார்?
எனக்குத் தெரியாது
கண்ணாடி ஓடுகளுக்கு மேலாய்
நகர்ந்த மேகங்கள் -
அதனுடன் கூடவே நேரமும்,
நிமிடமும்
முகரக் கூட சுவடுகளற்று எஞ்சி
நின்ற
மேசையும் கதிரையும் -
வெற்றுக் கோப்பைகளையும்
விட்டு...
கதவின் வழியாய் புகுந்த
மேற்கின் சூரியக் கதிர்கள்
விரட்ட
நாங்கள் எழுந்தோம் -
உலகை மாற்ற அல்ல,
மீண்டுமொரு இரவை நோக்கி.

# இஸ்லாமிய சட்டங்கள்

நூல் அறிமுகம்

## மத்ஹபுகளுக்கிடையிலான ஓர் ஒப்பீட்டாய்வு




நூல்: இஸ்லாமிய சட்டங்கள்
நூலாசிரியர்: கலாநிதி எம்.எம்.நயீம்
வெளியீடு: Minarah Publications
பக்கங்கள்: 144
விலை: 250.00

புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே உரித்தாகட்டும். ஸலாதும் ஸலாமும் இறை தூதர் (ஸல்) அவர்கள் மீதும் அவர்களை பின்பற்றும் அனைவர் மீதும் உண்டாகட்டும்.

இஸ்லாமிய சட்டங்கள் -மத்ஹபுகளுக்கிடையிலான ஓர் ஒப் பீட்டாய்வு என்ற இந்த நூல், முதல் பாகமாக வெளிவருகின்றது. இஸ்லாமிய சட்டத்தின் அனைத்துப் பாடப் பரப்புகளையும் ஆதாரங்கள், கருத்து முரண்பாடுகள், அவற்றுக்கான காரணங்கள் உள்ளிட்ட பல விடயங்களைச் சுருக்கமாக ஆராய்ந்து காலத்துக் கேற்ற வகையில் இஸ்லாமிய சட்டங்களை முன்வைக்கும் முயற்சி யின் முத்தற்படியே இந்நூலாகும்.

இஸ்லாமிய சட்டம் ஒரு விரிந்த கடல். அது பற்றி பல கோணங்களிலும் எழுதப்பட்ட நூல்களும் ஆய்வுகளும் பல நூறு பாகங்கள் தேறும். அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான தேவைகளை நிறைவுசெய்த போதிலும், இஸ்லாமிய சட்டம் காலம், இடம், மனிதர்களுக்கு ஏற்ப வித்தியாசமாக அமைவதனால், முஸ்லிம் சிறுபான்மையினருக்கு அதனைத் தமது சூழ்நிலைகளின் பின்னணி யில் நின்று முன்வைக்க வேண்டிய தேவை இருக்கின்றது. பல அடிப்படை மூலாதார நூல்களைக் கருத்துக்களுக்கு பக்கபலமாக எடுத்துக் கொண்டபோதிலும், எனக்கு இஸ்லாமிய சட்டம் போதித்த மதிப்புக்குரிய ஆசிரியர்களின் ஆய்வுகளின் பலமான முடிவுகளையும் பலபோது இணைத்து, கருத்துக்களைப் பலப் படுத்த முயன்றுள்ளேன்.

இஸ்லாமிய சட்டக்கலை வளர்ச்சியின் நவீனகால வளர்ச்சிக் கட்டங்களில் ஒன்று, அதனை ஒரு மத்ஹபின் எல்லைக்குள்ளிருந்து வெளிக்கொணர்ந்து, பல மத்ஹபுகளின் ஆதாரங்களையும் கருத்துக்களையும் ஆராய்ந்து, சமகாலத்துக்குரிய சட்டத்தை முன்வைப்பதாகும். பலவீனமான கருத்திலிருந்து விடுபட்டு பலமான கருத்துக்களை அடைந்துகொள்வதற்கும், ஒரு மத்ஹபின் மீது இருக்கின்ற வெறித்தனமான பற்று, கண்மூடித்தனமாகப் பின்பற்றுதல் ஆகியவற்றுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கும், இஜ்திஹாதின் வாயில் திறந்திருப்பதற்கும் இது துணைபுரியும் என்பதில் சந்தேகமில்லை.

இஸ்லாமிய சட்டத்துறையில் நுனிப்புல் மேய்ந்தவர்கள் சட்டத் துறையில் தோன்றிய கருத்துமுரண்பாடுகள், மத்ஹபுகளின் வித்தி யாசமான கருத்துக்களும் அணுகு முறைகளும் குறித்து முன்வைக்கும் குற்றச்சாட்டுகளுக்கு சட்டவல்லுநர்கள் எவ்வாறு அல்குர் ஆன், சுன்னா மற்றும் இஜ்திஹாத் ஆகியவற்றின் அடிப்படையில் சட்டங்களை வகுத்துள்ளனர் என்பதனையும் ஆதாரபூர்வமாக இந் நூலில் விளங்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எனது வெற்றிகளுக்குப் பின்னால் நிறைய வலிகள் மறைந்துள்ளன





## இலங்கையின் குறுந்தூர ஓட்ட வீரர் அஷ்ரப்

அப்துல் லத்தீப் அஷ்ரப் கிழக்கு மாகாணத்தின் பொத்துவில் பிரதேசத்தைச் சேர்ந்தவர். கடந்த வருடம் இலங்கையின் அதிவேக ஓட்ட வீரராகும் வாய்ப்பை மயிரிழையில் அஷ்ரப் தவறவிட்டார். சர்வதேச ரீதியாக ஆண்களுக்கான 100m மற்றும் 4X100m அஞ்சலோட்டம் என்பவற்றில் பல பதக்கங்களை இலங்கைக்காக அவர் பெற்றுக் கொடுத்துள்ளார். தற்போது இலங்கை இராணுவத்தின் விளையாட்டுப் பிரிவில், இலங்கை சார்பாக ஒலிம்பிக்கில் பங்கேற்ற சுனில் குணவர்த்தணவின் பயிற்சியின் கீழ் அஷ்ரப் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

100m ஓட்டப்போட்டியில் 10.42 என்ற தனிப்பட்ட நேரப்பிரதியை வைத்திருக்கின்ற அஷ்ரப் 2016ம் ஆண்டு இந்தியாவின் குவாட்டியில் இடம்பெற்ற தெற்காசிய விளையாட்டு விழாவில் 100m ஓட்டப்போட்டியில் வெண்கலப் பதக்கத்தையும், 4X100m அஞ்சலோட்டத்தில் தங்கப் பதக்கத்தையும் இலங்கைக்கு வென்று கொடுத்ததோடு, 42வது தேசிய விளையாட்டு விழாவிலும் 100m ஓட்டப்போட்டியில் இரண்டாவது இடத்தைப் பெற்றுக் கொண்டார். இந்த வருடத்தில் இடம்பெறவுள்ள ஆசிய விளையாட்டுப் போட்டி, உலக மெய்வல்லுனர் போட்டி என்பவற்றில் விளையாடத் தகுதி பெற்று பதக்கம் வெல்வதை குறிக்கோளாகக் கொண்டு கடுமையான பயிற்சிகளில் ஈடுபட்டுவரும் அஷ்ரப் அவரது நீண்ட பயணத்தின் வலிகளையும் சாதனைகைளின் ரகசியங்களையும் எம்மோடு பகிர்ந்து கொள்கின்றார்.

**நேர்காணல்: மிப்றாஹ் முஸ்தபா | உதவி: சாஜித் அலி**

**★ அஷ்ரப் உங்களைப் பற்றிய ஓர் அறிமுகத்தை தாருங்கள்?**

எனது பெயர் அப்துல் லத்தீப் அஷ்ரப். நான் பொத்துவில் பிரதேசத்தைச் சேர்ந்தவன். 1990ம் ஆண்டு ஒக்டோபர் 15ம் திகதி பிறந்தேன். ஆரம்பக் கல்வியை பொத்துவில் அல்-இர்பான் வித்தியாலயத்திலும் அதன்பின் பொத்துவில் மத்திய கல்லூரியிலும் எனது கல்வியைத் தொடர்ந்தேன். எனது தந்தை சிறுவயதிலேயே மரணித்து விட்டார். தற்போது இந்த நாட்டிலே மெய்வல்லுனர் போட்டிகளில் சிறப்பாக செயற்படுகின்ற ஒரு வீரன் என்றவகையில் சந்தோஷமடைகிறேன்.

**★ உங்களுக்கு விளையாட்டுத்துறையில் சாதிக்க வேண்டும் என்ற ஆர்வம் எப்போது ஏற்பட்டது?**

எனக்கு சிறுவயதிலிருந்தே கிரிக்கட் விளையாடுவதில்தான் ஆர்வம் இருந்தது. அதன்பின் பாடசாலை விளையாட்டுப் போட்டிகளில் நடைபெற்ற ஓட்டப் போட்டிகளில் வெற்றி பெற்றேன். இதனால் விளையாட்டுக்குப் பொறுப்பான ஆசிரியர்கள் குறுந்தூர ஓட்டப்போட்டிகளில் கவனம் செலுத்துமாறு ஆலோசனை வழங்கி என்னை ஊக்குவித்தார்கள். விசேடமாக பாடசாலைக் காலத்தில் விளையாட்டுக்குப் பொறுப்பாக இருந்த ஜின்னா சேர், சலீம் சேர், ராஸுதீன் சேர் ஆகியோருக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று எனது குடும்பமும் எனக்கு மிகவுமே பக்கபலமாக இருந்தது. குறிப்பாக எனது தாயும் தந்தையும்தான் எனது முதல் ஊக்குவிப்பு என்று சொல்லலாம்.

**★ இன்று இந்த நாட்டின் அதிவேக வீரர்களில் ஒருவராக நீங்கள் திகழ்கிறீர்கள். உங்களது அடைவுகளையும் சாதனைகளையும் எங்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள்?**

பாடசாலைக் காலத்திலிருந்தே 100m ஓட்டப்போட்டியில் பங்கேற்று வலய, மாவட்ட, மாகாண மட்டங்களில் முதலிடத்தைப் பெற்றிருக்கிறேன். பாடசாலைக் காலத்தில் பெற்றுக் கொண்ட வெற்றிகள்தான் என்னால் இன்னும் ஓட முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியது. 2011ம் ஆண்டு இராணுவத்தின் விளையாட்டுப் பிரிவில் இணைந்து கொண்டேன். அந்த வருடம் இடம்பெற்ற தேசிய இளைஞர் விளையாட்டு விழாவில் 100m ஓட்டப் போட்டியில் முதலிடத்தைப் பெற்றதோடு 2012இல் இடம்பெற்ற தேசிய விளையாட்டு விழாவில் மூன்றாவது இடத்தைப் பெற்றுக் கொண்டேன்.

2013ம் ஆண்டு இந்தியாவில் இடம்பெற்ற லெஸபோனியா விளையாட்டுப் போட்டியில் 4X100m அஞ்சலோட்டத்தில் தங்கப் பதக்கம் கிடைத்தது. இதுதான் நான் சர்வதேசப் போட்டியொன்றில் பெற்ற முதல் பதக்கம். அதன்பின் ஆசிய சம்பியன்ஷிப் போட்டியில் அஞ்சலோட்டத்தில் எமது குழு 4வது இடத்தைப் பெற்று மயிரிழையில் பதக்கம் வெல்லும் வாய்ப்பை இழந்தது. என்றாலும் 4X100 அஞ்சலோட்டத்தில் 39.38 நேரப்பிரதியோடு இலங்கையின் தேசிய சாதனையை நாம் நிலைநாட்டினோம். அதன்பின் கொரியாவில் இடம்பெற்ற மெய்வல்லுனர் போட்டிகளிலும் அஞ்சலோட்டத்தில் வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினோம். இறுதியாக கடந்த வருடம் இந்தியாவில் இடம்பெற்ற சார்க் விளையாட்டு விழாவில் தங்கப் பதக்கம் வென்றோம்.

**★ கடந்த வருடம் இந்தியாவில் இடம்பெற்ற சார்க் விளையாட்டுப் போட்டியில் தங்கம் உட்பட இரண்டு பதக்கங்களை தனதாக்கிக் கொண்டீர்கள். இந்த வெற்றி உங்களுக்கு எப்படி சாத்தியமானது?**

ஆண்களுக்கான 100m ஓட்டப்போட்டியில் தங்கப் பதக்கம் வெல்வதை குறிக்கோளாகக் கொண்டு கடுமையான பயிற்சிகளை மேற்கொண்டிருந்தேன். போட்டி தொடங்குவதற்கு ஒரு மாதத்திற்கு முன் காலில் ஏற்பட்ட உபாதையினால் என்னால் முழுத்திறமையையும் வெளிப்படுத்த முடியவில்லை. இதனால் எனக்கு வெண்கலப் பதக்கமே கிடைத்தது. என்றாலும் 4X100m அஞ்சலோட்டப் போட்டியில் எமது குழு தங்கப் பதக்கத்தை சுவீகரித்தது மகிழ்ச்சி அளிக்கிறது.

**★ உங்கள் சாதனைகளுக்கு சமூகத்தின் சார்பில் வரவேற்புக் கிடைத்ததா?**

எனது ஒவ்வொரு வெற்றியிலும் பொத்துவில் பிரதேசத்துக்கு தனியான இடம் உண்டு. சிறு வயதிலிருந்தே நான் போட்டிகளில் வெற்றி பெற்ற சந்தர்ப்பங்களில் எல்லாம் எனது ஊர் மக்கள் எனக்கு ஆதரவளித்து ஊக்குவித்தார்கள். ஊர்வலம் எடுத்தார்கள். சார்க் விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றமைக்காக சிறந்த கௌரவிப்பை மக்கள் வழங்கினார்கள். அதனை என்னால் ஒருபோதும் மறக்க முடியாது.

**★ இந்த சாதனைமிக்க உங்கள் பயணத்தில் நீங்கள் ஏதாவது சவால்களை சந்தித்துள்ளீர்களா?**

குறுந்தூர ஓட்டப் போட்டிகளில் வெற்றி பெறுவதென்பதே பெரியதொரு சவால்தான். அதற்காக கடுமையான பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். ஆரம்பத்தில் கஷ்டப்பட்டால்தான் பிறகு இலகுவாக வெற்றி பெற முடியும். எனது வெற்றிகளுக்குப் பின்னாலும் நிறைய வலிகள் மறைந்துள்ளன.

**★ இந்த நாட்டில் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த வீரர்களுக்கு பாரபட்சம் காட்டப்படுவதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு உண்மையா?**

பல ஆண்டுகளாக இந்த நாட்டின் விளையாட்டுத் துறையோடு தொடர்பு பட்டிருக்கிறேன். ஆனால் சிறு பான்மை என்ற ரீதியில் எத்தகைய புறக்கணிப்புகளையும் நான் எதிர்கொள்ளவில்லை. விளையாட்டுத் துறையில் அப்படியொரு பாரபட்சம் இந்த நாட்டில் காட்டப்படுவதில்லை என்பதை என்னால் உறுதியாகக் கூறமுடியும்.

**★ அப்படியென்றால் அண்மையில் இலங்கை மெய்வல்லுனர் சம்மேளனத்தினால் சர்வதேச ரீதியாக சிறந்த வீரர்களை களமிறக்கும் நோக்கில் 16 வீரர்களைக் கொண்ட சிறப்புக் குழு ஒன்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் சிறுபான்மையின வீர, வீராங்கனைகள் எவருமே உள்ளடக்கப்படவில்லை. இதற்கான காரணம் என்ன?**

ஒரு போட்டியில் சிறப்பாக விளையாடிவிட்டு இந்த சிறப்புக் குழுவில் இடம்பெற முடியாது. அந்த வருடத்தில் போட்டிகளில் சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்தியவர்கள்தான் சிறப்புக் குழுவில் உள்வாங்கப்படுகிறார்கள்.

உதாரணமாக 100m ஓட்டப்போட்டியில் ஹிமாஷ இஷான் 10.28 என்ற நேரப்பிரதியை கடந்த வருடத்தில் வைத்திருந்ததால் அவர் தெரிவு செய்யப்பட்டார். இவ்வாறுதான் அனைத்து வகையான போட்டிகளுக்கும் வீரர்கள் தெரிவு செய்யப்படுகிறார்கள். இந்த வருடம் எனது முழுத் திறமையையும் வெளிப்படுத்தி சிறப்புக் குழுவில் தெரிவாவதற்கு முயற்சி செய்வேன்.

**★ இலங்கையின் விளையாட்டு வீரர்களுக்கு அரசாங்கத்தினால் அதிகளவிலான வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ள போதிலும் ஏன் ஒலிம்பிக் போன்ற சர்வதேசப் போட்டிகளில் பிரகாசிக்க முடிவதில்லை?**

எமது நாட்டுக்கும் வெளிநாடுகளுக்கும் நிறைய வித்தியாசங்கள் காணப்படுகின்றன. சுகததாஸ மைதானத்தில் ஒழுங்கான வேகச்சுவடுகள் (Speed Track) இல்லை.

உதாரணமாக எனது முழுத் திறமையையும் பயன்படுத்தி 10.3 என்ற நேரப்பிரதியில் ஓட முடியும். ஆனால் இந்த மைதானத்தில் 10.4 என்ற நேரப்பிரதியிலேயே ஓடி முடிக்க முடியும். ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்பதற்கு தகுதிப் போட்டியில் 10.16 என்ற நேரப்பிரதியைக் கொண்டிருக்க வேண்டும். எனவே எமக்கான சந்தர்ப்பத்தை அரசாங்கம் வெளிநாட்டு மைதானங்களில் பெற்றுத்தர வேண்டும். அப்போது எம்மால் நிச்சயமாக சாதிக்க முடியும்.

**★ தேசிய, சர்வதேச ரீதியாக நீங்கள் நிறைய வெற்றிகளை எமது நாட்டுக்கு பெற்றுத் தந்திருக்கிறீர்கள். அவற்றிலே மிகவும் பெறுமதிமிக்கதாக எதனைக் கருதுகிறீர்கள்?**

எனக்குக் கிடைத்த அனைத்து வெற்றிகளுமே பெறுமதியானவைதான். அதற்காக மிகவும் கஷ்டப்பட்டிருக்கிறேன். கடந்த வருடம் இடம்பெற்ற சார்க் போட்டியில் இரண்டு பதக்கங்கள் எனக்குக் கிடைத்ததை மறக்க முடியாது. அதேபோன்று, 2015இல் சீனாவில் இடம்பெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் அஞ்சலோட்டத்தில் 4வது இடத்தைப் பெற்றாலும் 39.38 என்ற நேரப்பிரதியில் ஓடி. முடித்து புதிய தேசிய சாதனையை நிலைநாட்டினோம். இதனையும் சிறப்பான அடைவாகவே கருதுகின்றேன்.

இந்த வருடம் லண்டனில் இடம்பெறவுள்ள சர்வதேச மெய்வல்லுனர் போட்டிகக்கான தகுதிப் போட்டிகள் ஏப்ரல் மாதம் சீனாவில் நடைபெறுகின்றது. தகுதிப் போட்டியில் வெற்றி பெற்று சர்வதேச மெய்வல்லுனர் போட்டிகளில் இலங்கை சார்பாக பங்கேற்பதை உறுதி செய்ய வேண்டும். அதேபோன்று இந்த வருடம் இந்தியாவில் ஆசிய விளையாட்டுப் போட்டிகளும் நடைபெற இருக்கின்றன. 100m அஞ்சலோட்டத்தில் இலங்கை இதுவரை பதக்கம் வென்றதில்லை. இம்முறை பதக்கம் வெல்ல முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இதற்காக தற்போது கடுமையான பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.










வெள்ளம்பிட்டிய, கொட்டியா கும்புற, நாப்பாவெல பிரதேசங்களில் கடந்த ஆண்டு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட, பத்து குடும்பங்களின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் தேவையான வாழ்வாதார உதவிகள் கலாசாரம் மற்றும் அபிவிருத்திக்கான முஸ்லிம் நிறுவனத்தினால் (MFCD) அண்மையில் வழங்கி வைக்கப்பட்டது.
இந்நிகழ்வில் அதிதிகளாக ஜமாதுஸ் ஸலாமாவின் முன்னாள் தலைவர் நியாஸ் முஹைடீன், MFCD நிறுவனத்தின் தலைவர் ஹனான் ஹுஸைன், செயலாளர் அஷ்ஷெய்க் ஹம்ஸா முஹம்மத், மீள்பார்வை பத்திரிகையின் பிரதம ஆசிரியர் பியாஸ் முஹம்மத் உட்பட MFCD நிறுவன உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Published by Focus Media (Pvt) Ltd, 49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.